365

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 20, 1999 தொகுதி 74 எண் 1

D
V2l1,31'N99
P00.74.1
221036

வெளியீடு 11-02-2000 Issued 11-02-2000

(175)

365/2000.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 20, 1999 - தொகுதி 74 - எண் 1

**Tuesday, 20th April, 1999—Volume 74 - No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

20–04–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| 2. **தகவல் கோரல்--** | |
| (அ) மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கணினிக் கல்விப் பயிற்சி அளிக்க பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பதற்கு உயர் நீதிமன்றம் தடையாணை வழங்கியிருத்தல் | 40-44,46 |
| (ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான பேரவைத் தீர்மானத்திற்கு உயர் நீதிமன்றம் தடையாணைப் பிறப்பித்தது குறித்து விவாதிக்கக் கூடுவதாக இருந்த பேரவைத் தலைவர்கள் மாநாடு ஒத்திவைப்பு | 44-46 |
| (இ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை உயர் நீதிமன்றத்திற்கு வழங்குதல் குறித்த முடிவு | 46-47 |
| 3. **கவன ஈர்ப்பு--** | |
| தென்காசி புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துதல் | 47-50 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. *மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்*--தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 25 - கைத்தறியும் துணித் தொழிலும் | 50-130 |
| *மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி | 50-51,56,59, 61-62,64-65, 71,75,76-77, 83,85,94,99, 107-124,126-127 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 57-61,63-66 |
| திரு. சி. ஞானசேகரன் | 51,62,116,127 |
| *திரு. கே.ஆர்.ஜி. தனபாலன் | 66-70 |
| *திரு. நா. பெரியசாமி | 51-52,71-78,113,128 |
| திரு. வி.ஜி. தனபால் | 79-82 |
| *திரு. அ.வ. அப்துல் நாசர் | 54,82-86 |
| திரு. சி. வேலாயுதன் | 83 |
| திரு. கே. சுப்பராயன் | 54,83,115,129 |
| திரு. பா. அருண்குமார் | 86-91 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 55,91-97, 99,129 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 97-103,124,125 |
| *திரு பா. வேல்துரை | 103-107 |
| திரு. ஆர். சொக்கர் | 119,120 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 119-120,125-126 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 123,124,125,126 |
| 5. அறிவிப்பு-- | |
| மானியக் கோரிக்கைமீது பேசிய உறுப்பினர்கள், பதிலுரை முடியும் வரை அவையில் இருத்தல் | 109 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 131 |


D V211,31'N99 N99.761



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை : அமைச்சர்** — **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை: அமைச்சர்** — **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | | |
|---|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** *கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.* |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.* |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :** *கால்நடை பராமரிப்பு.* |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.* |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** *ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.* |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.* |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :** *கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.* |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :** *மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.* |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. | **The Hon. Prof. K. Anbazhagan :** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. | **The Hon. Thiru Arcot N. Veerasamy :** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru Nanjil K. Manoharan :** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. | **The Hon. Thiru Ko. Si. Mani :** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. **Minister for Public Works** | .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | .. | **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Highways** | .. | **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. | **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. **Minister for Milk** | .. | **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. **Minister for Law** | .. | **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. **Minister for Handlooms** | .. | **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest** | .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control. |
| 18. **Minister for Housing** | .. | **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |

| | | |
|---|---|---|
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி. அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | . சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். | .. தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

93. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்

94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171 மகேந்திரன், திரு. இரா. .. நாட்டராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 7, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு."

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 441, திரு. டி. மணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**441--**

### அடிப்படை ஊதியம் வழங்குதல்

*11312--**திரு. டி. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் பணிபுரிந்து வரும் அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களுக்கும் மற்ற மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அடிப்படை ஊதியம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில், பிற மாவட்ட அதிகாரிகளுக்கு இணையான ஊதியம் வழங்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மாவட்ட விளையாட்டு அலுவலர்களுக்கு இதர மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்குவதைப் போன்று ஊதியம் வழங்கிட ஊதியக் குழு பரிந்துரைக்கவில்லை. ஊதியக் குழு பரிந்துரைத்தால் மட்டுமே அதைச் செய்ய இயலும். அண்மையில் செயல்படுத்திய ஊதிய மாற்றங்களிலும் இந்தக் குழுவினால் அது பரிந்துரைக்கப்படவில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விளையாட்டு அலுவலர்கள் சம்பளப் பிரச்சினை சம்பந்தமாக அவர்களுடைய ஊதிய விகிதம், இதர மாவட்ட அலுவலர்களுக்கு வழங்குகின்ற அடிப்படையில் வழங்குவதில் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. பொதுவாக, இந்தக் குழுவினுடைய தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று விளையாட்டுத் துறையிலே இருக்கின்ற ஆதித்தன் அவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். இதிலே பெரிய அளவுக்குப் பொருளாதார நெருக்கடி இல்லாத நிலையில், இந்த அலுவலர்கள் சரியாகத் தங்களுடைய பணிகளை மாநிலம் பூராவும் ஆற்றினால்தான் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்க முடியும் என்ற அடிப்படையிலே ஒரு திறமையான இடத்தை தமிழ்நாடு பெறுவதற்கு இது ஒரு முக்கியப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குழுவிலே இருக்கின்ற அரசு மற்றும் அதிகாரிகள் இதிலே பரிந்துரை செய்வதில் சில பிரச்சினைகளைச் சொல்லுகின்றார்கள். ஆனால், பெரிய பொருளாதார நெருக்கடிக்கு இதிலே இடமில்லை. அந்தவகையில் அவர்களுக்கு இந்த ஊதிய உயர்வைத் தரவேண்டும், அதேபோன்று 13 வருடங்களாக அவர்களுக்கு increment கொடுக்கப்படாமல் உள்ளது. ஏற்கெனவே கடந்த வருடம் இந்த மாமன்றத்திலே நான் கல்வி மானியத்திலே பேசும்போது இந்த நிலையை எடுத்துச் சொல்லியிருந்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்குப் பரிந்துரை செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் காலம் நீண்டு போகின்றது. எனவே, அவர்களுடைய increment-ஐத் தருவதற்கும், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதற்கும் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரவேண்டிய ஊதியமே தரப்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். அந்த பாக்கியே இன்னும் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் Sports Authority என்பது ஒரு தனி அமைப்பாக இயங்குகிறது. புதிய ஊதிய விகிதமாக மாவட்ட அலுவலர்கள் என்று இருக்கின்ற மற்ற District Officers அலுவலர்களுக்கு உள்ள ஊதியத்தைப்போல் தரவேண்டுமென்று கேட்கப்படுகிறது. 3-வது ஊதியக் குழுவிலேயும் சரி, 4, 5, 6 ஆகிய நான்கு ஊதியக் குழுவிலேயும், மற்ற மாவட்ட அலுவலர்களுக்கு உள்ள ஊதிய விகிதத்தைவிட ஒரு படிநிலை கீழாகத்தான் இவர்களுடைய ஊதியம் தீர்மானிக்கப்பட்டு, தொடர்ந்து கடந்த 20 ஆண்டுகளாகவும், அதற்கு மேலும் நீடித்து வருகிறது. அதை மாற்ற வேண்டுமென்று கேட்ட ஒவ்வொரு காலகட்டத்திலேயும், பணிப் பொறுப்புகள், அலுவலகப் பொறுப்புகள் இவை எல்லாம் மற்ற மாவட்ட அலுவலர்களுக்கு உள்ள அளவில் இவர்களுக்கு இல்லை என்று காரணம் காட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, தொடர்ந்து இந்த அலுவலர்களுக்கு ஊதியத்தை உயர்த்த முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யும்படியாகக் கேட்டிருக்கிறோம். வாய்ப்புகள் குறைவு. முயற்சிப்போம்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 442, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 20

**442--**

**விவசாய மின் இணைப்பு**

***13682--திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தென்காசி மின் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி 1987ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்தும் போதிய ஒதுக்கீடு மின் இணைப்பு கிடைக்காமல் காத்திருப்போர் குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாய பம்பு செட்டுக்கு மாவட்ட வாரியாக இலக்கீடு நிர்ணயம் செய்யும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலுவையிலுள்ள மொத்த விவசாய விண்ணப்பம், அது எத்தனை ஆண்டுகளாக நிலுவையிலுள்ளது, குறிப்பிட்ட மாவட்டம், சிறப்பு உணவு உற்பத்தி மாவட்டமாக இருக்கின்றதா என ஆராய்ந்து இவற்றிற்கு அதிக முன்னுரிமை கொடுத்து இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு, எய்தப்பட்டு வருகிறது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் 1997 ஆம் ஆண்டு பதிவு செய்தவர்களுக்குக்கூட மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எங்கள் பகுதி விவசாயிகள் ஏறத்தாழ பதிவு செய்து 11 ஆண்டுகளாகக் காத்திருக்கின்றார்கள். ஆகவே, காத்திருப்போர் பட்டியலிலே உள்ள இந்தப் பாகுபாட்டைச் சீர் செய்கின்ற வகையில், தென்காசி மின் கோட்டத்திற்கு, சிறப்பு நேர்வாகக் கருதி, நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் ஒவ்வோராண்டும் 40,000 விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்து வருகிறது. ஏற்கெனவே மின்சார வாரியத்திலே 4 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டுள்ள நிலுவையிலே இருக்கின்றன. இப்போதுள்ள சூழ்நிலையில் ஒவ்வொரு விவசாயியும் மின்சார இணைப்புப் பெறுவதற்கு குறைந்தது 11 ஆண்டுகள், 12 ஆண்டுகள் எல்லா மாவட்டங்களிலேயும் காலதாமதம் ஆகிறது. எனவேதான் ஏற்கெனவே மின்சார வாரியம் 10,000 ரூபாய் செலுத்துபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே தரப்படும் என்று ஒரு திட்டத்தை அறிவித்து, அதிலேயும் ஆண்டுதோறும் 10,000 மின் இணைப்புகள் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும், அதற்கு அதிகமான அளவில் விவசாயிகள் மத்தியிலேயிருந்து மின்சார பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கேட்டு விண்ணப்பங்கள் வருகின்ற காரணத்தினாலே 25,000 ரூபாய் யார் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தையும் அறிவித்து, இன்றையதினம் அந்தத் திட்டங்களெல்லாம் அமலிலே இருக்கின்றன. யாருக்காவது அவசரமாகத் தேவைப்பட்டால் 25,000 ரூபாய் செலுத்தி உடனே பெற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அப்படித் தேவைப்படாத சட்டமன்ற உறுப்பினர்கள் வேறு ஒருவருக்குப் பரிந்துரை செய்தால் அந்த மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட சுய நிதித் திட்டத்தின்கீழ்தான் அப்படிப்பட்ட அனுமதி வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எந்தவிதமான கட்டணமும் செலுத்தாமல் மின்சார இணைப்புப் பெறுவதற்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் உரிமை கிடையாது, நாடாளுமன்ற

[1999 ஏப்ரல் 20

உறுப்பினராக இருந்தாலும் உரிமை கிடையாது, அமைச்சராக இருந்தாலும் உரிமை கிடையாது, ஏன், குடியரசுத் தலைவராக இருந்தாலும்கூட அந்த உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு நம்முடைய அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஆகவே, பல்வேறு துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய அரசு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையிலே, விண்ணப்பித்த உடனே மின் இணைப்புப் பெறுவது விவசாயிகளுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும் என்ற காரணத்தினாலே இந்த 25,000 ரூபாய் என்பது சற்றுக் கூடுதலாக இருக்கிறது. சாதாரண, நடுத்தர விவசாயிகள் அந்தப் பணத்தைச் செலுத்த இயலாத நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசிலனை செய்து அந்த 10,000 ரூபாய் செலுத்தினாலே போதும் என்ற நிலையை உருவாக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயி ஒருவருக்குப் பம்பு செட்டுக்கு இணைப்புக் கொடுப்பது என்று சொன்னால் மின் வாரியத்திற்குக் குறைந்தபட்சம் 50,000 ரூபாயும், அதிகபட்சம் 1 இலட்சம் ரூபாயும் செலவாகிறது, கம்பங்கள் நட்டு, மின் இணைப்புக் கொடுப்பதற்கு. எனவேதான்---ஏற்கெனவே வாரியம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பிலே இருக்கின்ற நேரத்தில்---இந்த சுயநிதித் திட்டத்தின் மூலமாகவாவது ஓரளவிற்கு அந்த இழப்பைச் சரிக்கட்டலாமா என்று மின்சார வாரியம் இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறது. யாருக்காவது உடனடியாக மின் இணைப்பு வேண்டும் என்று சொன்னால், 25,000 ரூபாய் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். அது கூட concession தான். ஏனென்றால் விவசாய மின் இணைப்புக் கொடுப்பதற்கு 50,000 ரூபாய் செலவாகிறது. அதிலே 25,000 ரூபாய் என்பது பாதிதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.



1999 ஏப்ரல் 20]

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் தொழிலுக்காக மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஒரு மின் இணைப்புக்கு 50,000 ரூபாய்வரை வாரியம் செலவு செய்கிறது. அந்தச் செலவை வாரியமே ஏற்றுக்கொள்கிறது. அந்த வகையிலே மிகுந்த மகிழ்ச்சிதான். ஆனால் அதற்கு மேலாக ஆகக்கூடிய செலவாக ஒரு 55,000 மதிப்பு என்று வந்துவிட்டால் ஒட்டுமொத்த 55,000-த்தையும் விவசாயிகள் செலுத்த வேண்டுமென்று வாரியம் கூறுகிறது. நான் இதிலே அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புவது, அந்த 50,000-த்திற்கும் மேலே வருகிற தொகையை மட்டும் வசூலித்துக்கொண்டு, இந்த 50,000-த்தையும் வாரியமே ஏற்றுக்கொண்டு மின் இணைப்பு வழங்க முன்வருமா என்பதுதான்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்தினுடைய நிதிநிலையைப் பார்க்கின்ற நேரத்தில் அப்படிப்பட்ட சலுகைகளை இனிமேல் வழங்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் கிராமப்புறங்களிலே ஒருமுனை மின் இணைப்புக்கூட சில சமயங்களில் துண்டிக்கப்படுகிறது. மின் பற்றாக்குறையைச் சமாளிக்கின்ற வகையில், இந்த நடவடிக்கை கிராமப்புறங்களில் எடுக்கப்பட்டு வருவதைத் தடை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எங்கேயாவது குறைபாடு இருக்குமானால், அது பற்றிக் குறிப்பிட்டுத் தெரிவித்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 443, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 20

**443--**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்**

***16664--திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கடையநல்லூர் தொகுதியில் உள்ள இடைக்கால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்:

(அ) மற்றும் (ஆ) 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2-ம் திட்டத்தில் கடையநல்லூர் உட்பட 352 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, அவற்றிற்கான நிலம் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. அவ்வாறு நில மாற்றம் பெறப்பட்ட நிலம் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இடைக்கால் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்படாததால், அங்கு புதிய கட்டடங்கள் கட்ட இயலவில்லை.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியில், இடைக்கால் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே இடம் தேர்வு செய்வதில் சிரமம் உள்ளது. எனவே, அரசு அந்த இடத்தை விரைவில் தேர்வு செய்து அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டி முடிப்பதற்கு கால நிர்ணயம் செய்யப்படுமா? அது எப்போது கட்டி முடிக்கப்படும் எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று 50 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்தார்கள். அந்தப் பணம் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அவர்களும் இதுவரையிலே 600 இடங்களிலே 2 ஆண்டுகளில் கட்டடங்களைக் கட்டி முடித்துவிட்டார்கள். மீதி இருக்கக்கூடிய 52 இடங்களிலே 30 இடங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்போதுதான் இடங்களை ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள். அவற்றில் எல்லாம் பணிகள் தொடங்க இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த இடைக்கால் என்ற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சேலம் மாவட்டத்தில் நாகனூர், தஞ்சை மாவட்டத்தில் சோழபுரம், சிவகங்கை மாவட்டத்தில் மருதமங்கலம், திருநெல்வேலி மாவட்டத்தில் மணங்குடி, வள்ளியூர் ஆகிய இந்த இடங்களிலே மட்டும் இடத்தைக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதை அப்படியே விட்டுவிட்டால் நன்றாக இருக்காது என்று கருதி, இப்போது எந்தக் கட்டடங்களில் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அந்தக் கட்டடங்களையே புதுப்பிக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 444, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**444--**

**நிலப் பட்டாக்கள் வழங்குதல்**

***8130--திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் வடகாடு மலைப் பகுதியில் 1970 ஆம் ஆண்டு 350 பேர்களுக்கு வழங்கப்பட்ட நிலப் பட்டாக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1999 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் வடகாடு மலைப் பகுதியில் 1971 ஆம் ஆண்டு 300 நபர்களுக்கு நில ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இதில் 1983-84-ல் நில உடைமைத் திட்டத்தின்கீழ் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுபவ பாத்தியத்தினை நிரூபித்த 200 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இரத்து செய்யப்பட்ட 100 இனங்களில் 75 நபர்கள் மனு செய்து கொண்டனர். இதில் 25-5-1997 அன்று 56 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. ஆக மொத்தம் 256 தகுதியுள்ள நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகாடு பகுதியில் விவசாய மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அந்த இரத்துச் செய்யப்பட்ட பட்டா வழங்கியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்னும் அங்கே தகுதி வாய்ந்த விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதியுள்ள மனுக்களைப் பரிசீலித்து, தகுதி இருப்பின் பட்டா வழங்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 445, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**445--**

**கௌரவ ஊதியம் வழங்குதல்**

***20536--திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--



1999 ஏப்ரல் 20]

மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளில் உள்ள தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பிற மாநிலங்களில் வழங்குவது போல கௌரவ ஊதியம், இருப்பிட வசதி மற்றும் சலுகைகள் வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-45

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம இராஜ்யமே இராம இராஜ்யம் என்று சொல்வார்கள். இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய கிராமங்களிலே இருக்கக்கூடிய பொதுமக்களுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய பணிகளைச் செய்கிறவர்கள் உள்ளாட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள். அவர்களெல்லாம் ஓரளவிற்குப் பணியாற்றக்கூடிய வகையிலே, ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் போன்றவர்களுக்கெல்லாம், அவர்கள் பணியாற்றுவதற்கு வசதியாக மாத ஊதியம் வழங்கக்கூடிய வகையிலே வகை செய்யப்பட வேண்டும். ஊராட்சி மன்றத்திலே பணியாற்றக்கூடியவர்கள் அந்த ஊராட்சி ஒன்றிய அளவிலே செல்லக்கூடிய வகையிலே, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட அளவிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் மற்ற அலுவலகங்களுக்குச் செல்லக்கூடிய வகையிலும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் அந்த மாவட்ட அளவிலிருந்து சென்னை தலைநகருக்குச் செல்லக்கூடிய வகையிலும், அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் ஒரு நல்ல திட்டத்தையும், அவர்களுக்கு, அரசு, தொலைபேசிக் கட்டணம் வழங்காவிட்டாலும்கூட, அவர்களுடைய வீடுகளுக்குத் தொலைபேசி இணைப்புகள் கொடுப்பதற்கு முன்னுரிமை தருகின்ற அளவிலே உத்தரவுகள் வழங்கி, அவர்களுக்கு இந்தச் சலுகைகளை அரசு செய்துதர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர்களிலிருந்து தொடங்கி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், தலைவர்கள் வரையில், நடைமுறைப்படுத்தப்பட்டு வந்ததைக் கணக்கில் பார்க்கிறபோது, 1994 நடைமுறைச் சட்டம், 82-வது பிரிவின்படி, அவர்கள் எந்தச் சம்பளமும் பெறக்கூடாது; அப்படிப் பெற்றால் தகுதி இழப்பார்கள் என்று விதியிலேயே வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருப்பினும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் போய், அவர்கள் அதைப் பெற்று, அதைக் குறித்து விசாரிக்க வேண்டுமென்று எனக்குத் தெரிவித்து, அதைப் பற்றி விசாரித்து அறிவித்ததன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, சட்டத்தின்படி, சட்டத்தை மீறாமலும், மாதச் சம்பளம் என்று அறிவிக்காமலும், அவர்களுக்கு ஓரளவிற்கு மாதப் படி என்ற பெயரால் ஏதாவது வழங்க வேண்டுமென்று அவரே தெரிவித்து, ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு மாதம் 300 ரூபாயும், ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு மாதம் 200 ரூபாயும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு 500 ரூபாயும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களுக்கு 300 ரூபாயும், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர்களுக்கு 1000 ரூபாயும், மாதாந்திர பயணப்படி என்ற பெயரில் இதுவரையில் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சி மன்றத்தின் தலைவருக்கு முதல் இரயில் வகுப்புக் கட்டணமும், பேருந்துக் கட்டணமும், தினப்படியாக 20 ரூபாயும், மாதாந்திர அமர்வுப் படி அதாவது அவர் நிருவாகத்திலே ஏதாவது கூட்டங்கள் இருந்தால், 2 கூட்டங்களுக்கு மேற்படாமல் அமர்ந்திருப்பாரேயானால், கூட்டம் ஒன்றுக்கு 50 ரூபாய் அமர்வுப் படியும் வழங்கப்படுகிறது. அது ஊராட்சித் தலைவர்களுக்கு 50 ரூபாயும், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு 50 ரூபாயும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு 75 ரூபாயும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களுக்கு 100 ரூபாயும், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர்களுக்கு 100 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை நிச்சயமாக சம்பளம் என்ற பெயரால் கொடுத்து உதவ இயலாது, கூடாது. பிற மாநிலங்களில் இருக்கிறது என்று சொல்வதுகூட, இப்படிப்பட்ட முறையிலேதான் அது வழங்கப்படுகிறது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை இன்னும் விவரமாக அறிந்து, சட்டத் திருத்தம் செய்தால்கூட மக்கள் நம்மைத் தவறாகப் புரிந்துகொள்வார்கள். காரணம், தினசரி பணியாற்றக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. ஓய்வான நேரங்களிலோ அல்லது தேவைப்படுகிற நேரங்களிலோதான் உறுப்பினர்களிலிருந்து தலைவர்கள் வரை பணியாற்றுகிறார்கள். நிரந்தரமாக, தினந்தோறும் முழு நேரமும் பணியாற்ற வேண்டுமென்ற விதி இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 446, திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**446--**

### தரைப் பாலத்தை உயர்த்திக் கட்டுதல்

***22348--திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னையில் கூவம் ஆற்றின் குறுக்கே, சூளைமேடு அருகேயுள்ள தரைப் பாலத்தை உயர்த்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை கூவம் ஆற்றின் குறுக்கே தற்போதுள்ள தரைமட்டப் பாலத்தினை இடித்துவிட்டு உயர்மட்டப் பாலத்தை ரூ. 400 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் அமைக்க சென்னை மாநகராட்சிக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியால் இந்தப் பணி விரைவில் தொடங்கப்படும்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆறுகளின் குறுக்கேயுள்ள தரைப் பாலங்களை உயர்த்திக் கட்ட மாநகராட்சி அனுமதி கோரியுள்ளதா? சென்னையில் 10 மேம்பாலங்கள் கட்டும் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சி மேலும் 12

[1999 ஏப்ரல் 20

மேம்பாலங்களைக் கட்டுவதாக அறிவித்துள்ளது. இதை அரசு அறியுமா? இதற்காக அரசு அனுமதி அளித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்னையிலே குடியிருப்பவர். இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலும் மற்ற காலங்களிலும் எத்தனை பாலங்கள் கட்டப்பட்டன என்பதையும், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, இந்த மாநகராட்சி எல்லையில் தற்பொழுதும், இதற்கு முன்னால் பொறுப்பு ஏற்ற காலங்களிலும் எவ்வளவு பாலங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதையும் நன்றாக அறிவார்கள். இந்த 10 பாலங்களை முடித்ததற்குப் பிறகும், அடுத்து பாலம் கட்டும் பணியை மாநகராட்சி தொடர இருக்கிறது. பல இடங்களில் அவர்கள், எது எது முக்கியத்துவம் வாய்ந்தது, எது எது முதலிடம் பெறக்கூடியது என்ற விவரங்களைச் சேகரித்துக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 447, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**447--**

**தமிழகத்தில் மாம்பழ உற்பத்தி**

***16961--திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மாம்பழ உற்பத்தியில் தமிழகத்தை முதல் இடத்திற்குக் கொண்டுவர அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 ஏப்ரல் 20]

(அ) மற்றும் (ஆ) இந்திய அளவில் மா 12,83,030 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. சுமார் 1,08,10,957 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் எக்டேருக்கு 8.43 மெட்ரிக் டன்கள் ஆகும். தமிழ் நாட்டில் சுமார் 81,441 எக்டேர் பரப்பில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பரப்பிலிருந்து 5,74,030 மெட்ரிக் டன் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 7.01 மெட்ரிக் டன்களாகும். தமிழ்நாட்டில் சேலம், மதுரை, தேனி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் மா, பெருமளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தியாவின் மா உற்பத்தியில் தமிழ்நாடு ஐந்தாம் இடத்தை வகிக்கிறது. ஆந்திரப்பிரதேசம் இதில் முதலிடம் வகிக்கிறது. அங்கு சுமார் 2,63,681 எக்டேர் பரப்பில் 31,64,173 மெட்ரிக் டன் மா உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 12 மெட்ரிக் டன்களாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வினா எண் 448, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**448--**

**வாய்க்கால் பாசனம்**

***17224--திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பாபநாசம் தொகுதி, தேவனாஞ்சேரியிலிருந்து மண்ணியாற்றின் தென்கரையில் பிரிந்து செல்லும் பீமன் வாய்க்காலை, அணைக்குடி ஊராட்சிப் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் வெட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபோன்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே உள்ள வாய்க்கால்கள், ஆறுகளையெல்லாம் தூர்வாரியதைப் பார்வையிட கிட்டத்தட்ட பாபநாசம் தொகுதியில் மூன்று மணி நேரம் அவர்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் வந்து பார்வையிட்டார்கள். அதற்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதியிலே பல்வேறு வாய்க்கால்களை வெட்டவேண்டுமென்று ஒரு கடிதத்தையும் நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அதையும் அந்தப் பகுதியிலே இருக்கிற பாக்கியுள்ள வாய்க்கால்களையும் வெட்ட வேண்டும். அதேநேரத்தில் தென்கரையில் இருந்து பிரிந்து செல்லும் பீமன் வாய்க்கால் அணைக்குடி வரை செல்கின்ற காரணத்தால் அந்த வாய்க்காலையும் வெட்டிக் கொடுக்க முன்வரவேண்டும். மீண்டும் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அணைக்குடி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பாசனப் பகுதிக்கு மண்ணியாற்றிலிருந்து, தேவனாஞ்சேரியிலிருந்து அணைக்குடி கால்வாயின் மூலம் தண்ணீர் போகிறது. இன்னொன்று, பீமன் வாய்க்காலில் இருந்து ஓட்டை வாய்க்கால் வழியாக தண்ணீர் போகிறது. இரண்டு இடங்களிலிருந்தும் அணைக்குடி பஞ்சாயத்து பாசனப் பகுதிக்குத் தண்ணீர் போகிறது. இதுவரையிலே தண்ணீர் வரவில்லை என்ற பிரச்சினை அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. வந்தால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 449, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**449--**

### பேருந்து இயக்குதல்

*10462--திரு. ந. பாண்டுரங்கன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரணமல்லூரிலிருந்து பெங்களூர் வரை சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வழியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூரிலிருந்து பெங்களூருக்கு சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வழியாக புதிய வழித்தடம் இயக்க கர்நாடக அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இனி வரும் காலங்களில் தமிழகம் மற்றும் கர்நாடக அரசுகளுக்கிடையே ஏற்படும் மறு ஒப்பந்தத்தின்போது, இவ்வழித்தடம் இயக்குவது குறித்து ஆலோசனை செய்யப்படும்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மாநில அரசுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுகிறபோது, அந்த வழித்தடத்தைப் பற்றி சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, பெரணமல்லூர் மற்றும் அதன் பிற பகுதிகளில் பெங்களூர், மைசூர், மாண்டியா, மடிகரி, பாகுமண்டலா போன்ற பல இடங்களில் கர்நாடக மாநில தேயிலைத் தோட்டங்களில் பலர் வேலை செய்கிறார்கள். அந்தப் பகுதிகளிலிருந்து நேரடிப் போக்குவரத்து வேண்டுமென்று கேட்கிறார்கள். வந்தவாசி, ஆரணி, வேலூர் வழியே தடம் எண் 444 என்ற பேருந்து ஏற்கெனவே இயங்கி வருகிறது. வந்தவாசி, ஆரணி, பெரணமல்லூர், அந்தப் பாதையிலிருந்து ½ கி.மீ. சற்று தள்ளியிருக்கிறது. எனவே, கூடுதலாக வருவாய்க்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், பெரணமல்லூர் வழியாக அந்தப் பேருந்தை இயக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ½ கிலோ மீட்டர் தூரம் மட்டும் இருக்கின்ற காரணத்தால் மக்கள் அதை அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள் என்றுதான் கருதுகிறேன். பெரும்பாலும் மற்ற மாநிலங்களோடு நாம் ஒப்பந்தம் செய்கின்றபோது வழித்தடங்களையும் அவர்களிடம் குறிப்பிட்டுத்தான் அந்த வழித்தடங்களுக்கான அனுமதியைப் பெறுகிறோம். ஆகவே, வழித்தடங்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால்கூட அவர்களிடம் அனுமதி

[1999 ஏப்ரல் 20

பெறவேண்டும். அதற்கு இப்போது சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தால் அந்த வழித்தடம் அப்படியே இயங்கிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 450, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**450--**

**பாலம் கட்டுதல்**

***12665--திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டையங்காடு-பாலத்தளி சாலையில் அக்னி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணி எப்போது தொடங்கப்படும், அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு, அப்பணி எவ்வளவு காலத்திலே முடிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி விரைவில் தொடங்கும். ஏறத்தாழ ரூ. 188.6 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் அதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாலம், டிசம்பர் 2000-க்குள்ளாகக் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 451, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 20]

**451--**

**சாலையை அகலப்படுத்துதல்**

***18208--திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தாராபுரம் முதல் பொள்ளாச்சி வரையுள்ள சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது தற்சமயம் மாநிலச் சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கு ஏற்ப பகுதி பகுதியாக அகலப்படுத்தும் பணி செயலாக்கப்படும்.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் முதல் பொள்ளாச்சி வரை அதிக வாகனங்கள் செல்லக்கூடிய சாலையாக அது இருக்கிறது. சுமார் 65 கிலோ மீட்டர் தூரமுள்ள அந்தச் சாலையில் தற்போது 10 கிலோ மீட்டர் வரை மட்டுமே அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள 55 கிலோ மீட்டர் சாலை ஒரு வழிச்சாலையாக இருப்பதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டே அந்தப் பணி நடக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சாலை இரண்டு கோட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்கிறது. ஒரு பகுதி கோவை கோட்டத்திலும், இன்னொரு பகுதி ஈரோடு கோட்டத்திலும் இணைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஏறத்தாழ 200 இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, படிப்படியாக அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 452,** திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**452--**

**நியாய விலைக் கடை கட்டுதல்**

***20497--திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்தநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள பாலகுட்டப்பட்டிக்கு புதிய நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்த மேற்படி வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் போதிய நிதி வசதி இல்லாததால் சேலம் மாவட்டம், முத்தநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள பாலக்குட்டப்பட்டியிலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள பாலகுட்டப்பட்டிக்கு புதிய நியாய விலைக் கடை கட்டடம் அரசின் மூலமாக கட்டித்தர இயலாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை மறுபரிசீலனை செய்து கட்டித்தர ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கூட்டுறவுத் துறையிலிருந்து கட்ட வேண்டிய கட்டடங்களை வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்திலும், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திலும் ஆண்டுக்கு 2000 கடைகள் என்ற அளவில் இதுவரை 4500-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைக் கட்டடங்களை நமது உள்ளாட்சித் துறை மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு இதற்கும் முன்னுரிமை தந்து அதன் மூலமாக கட்டித் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 453, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**453--**

**ஜவ்வாது மலையில் மரங்களை வளர்த்தல்**

***19149--திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஜவ்வாது மலையில் சந்தன மரம், தேக்கு மரம், மூங்கில் மரம் ஆகியவற்றை வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவ்வாது மலையில் 5000 சந்தன மரக்கன்றுகள் துறை மூலம் நடப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 10,000 விதைகள் மலைவாழ் மக்களின் ஒத்துழைப்போடு நடப்படுகின்றன. மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டங்கள் மூலம் மூங்கில், தேக்கு, சந்தன மரங்கள் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் நடப்படுகின்றன.

[1999 ஏப்ரல் 20

முற்பகல் 10-00

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

"குன்றுகளை மலைகளெனப் பசுமை யாக்க
கொம்புகளும் கொடிகளுமாய்ப் படர மரக்
கன்றுகளை நட்டு வைத்து வேலி போட்டுக்
காப்பாற்றும் அரசு இந்த அரசே ஆகும்.
இந்த அரசு இன்றி வேறு எந்த அரசாலும்
இத்தகைய அரிய சாதனைகளைச் சாதிக்க முடியாது.
இது உலகறிந்த உண்மை; நாடறிந்த உண்மை;
ஊரறிந்த உண்மை. . . . ."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேளுங்கள்.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒரு காலத்தில் விண்ணைத் தொட்டுக்
கண்ணைச் சிமிட்டும் அளவிற்கு ஓங்கி வளர்ந்து
ஓவென இரைச்சலிடும் மூங்கில் புதர்களும்
உனக்கு மட்டும் தானா தனிச் சிறப்பு? அது
எனக்கும் உண்டென்று சவால்விட்டு நறுமணத்தை
வாரி இரைத்துக் கொண்டிருந்த சந்தன மரக் காடுகளும்,
எஃகும் இரும்பும் எனக்கு நிகரில்லை என
இறுமாந்து வானோக்கி வளர்ந்து வனப்பாகப்
பருத்துக் கிடந்த தேக்கு மரத்தோப்புகளும், அதில்
எங்கு நோக்கினும் தேன்கூடுகளுமாய், மான்
கூட்டங்களுமாய், மயில் ஆடலுமாய், குயில்
பாடலுமாய்க் காட்சியளித்த அந்த ஜவ்வாதுமலை இன்றைக்கு
அத்தகைய சிறப்புகள் இல்லாது மலையாய்
மக்கள் மனதுக்கு ஒவ்வாது மலையாய்ப்
பசுமை இழந்து கிடக்கிறது."



1999 ஏப்ரல் 20]

எனவே, அந்த ஜவ்வாது மலையில் தேக்கு, மூங்கில், சந்தனம் ஆகிய மரக்கன்றுகளை ஒட்டுக் கன்றுகளாக வைத்து அந்தக் கால ஜவ்வாது மலை போல் எழில் மயமாக்கி, அங்கே பசுமையாகக் காட்சியளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புவதோடு, இன்றைக்கு சத்தியமங்கலம், திருப்பத்தூர், சேலம் ஆகிய இந்த மூன்று இடங்களிலுள்ள கிடங்குகளில் சுத்தம் செய்யப்பட்ட சந்தனக் கட்டைகளின் இருப்பு எவ்வளவு; அதன் மதிப்பு எவ்வளவு; நமது அரசுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் சந்தன மர விற்பனையின் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் சந்தன மரங்கள் வளர்க்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வளர்க்கப்படும் சந்தன மரங்கள் உரிமையாளருக்கே சொந்தம் எனவும், அதனை அரசு கொள்முதல் செய்து, அவர்களுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் இருக்கின்ற இந்த அரசின் உன்னதத் திட்டத்திற்குப் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. அதனால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 20,000 சந்தன மரக் கன்றுகள் இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றை உற்பத்தி விலையில் மக்களுக்கு வழங்கிட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். சந்தன மரம் தானாகவே வளராது. இது ஓர் ஒட்டுண்ணி. அருகிலுள்ள மரங்களின் உதவியோடுதான் வளரும். செயற்கை முறையில் சந்தன மரங்கள் வளர்வதற்கு, சந்தன மரக்கன்றுகளின் ஊட்டத்திற்கு அருகிலுள்ள மரங்களின் வேர்களை நம்பியுள்ளதால், சந்தன மரக் கன்றுகளின் தேர்ச்சி விகிதம் கொஞ்சம் குறைவாகவே உள்ளது. இத்திட்டம் மலைவாழ் மக்கள் ஒத்துழைப்போடு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தினைத் தக்கவாறு திருத்துவது என முடிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15-5-1998-ல் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு, 29-5-1998 இல் சட்டமன்றத்தில் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டமுன்வடிவுக்குக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறும்பொருட்டு, பிரேரணைகள் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும், சேலம், திருப்பத்தூர், சத்தியமங்கலம்

[1999 ஏப்ரல் 20

ஆகிய இடங்களில் உள்ள, துலக்கம் செய்யப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவு 1,500 டன்கள். மொத்தம் சுமார் 7,000 டன்கள் சந்தனக் கட்டைகள் இருப்பாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையிலே, ஆலங்காயம் பகுதியில் மந்தாரக்குட்டை, பீமக்குளம், மலையரெட்டியூர் ஆகிய பகுதிகளில் இருக்கின்ற சந்தனக் காடுகளில் சுமார் 12 யானைகள் வந்து, அங்கே இருக்கக்கூடிய தேக்கு மரங்களையும், அதேபோல சந்தனக் காடுகளையும் ஒழித்துவிட்டு, பக்கத்திலே இருக்கக்கூடிய நிலத்தில் இருக்கின்ற மாமரம், தென்னை மரம், கரும்பு போன்ற தோட்டங்களையெல்லாம் அழித்துக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட நான் எடுத்துச் சொன்னேன். இதுவரை அந்த யானைகள் பிடிக்கப்படவில்லை. அவற்றிற்கு நீர் நிலைகள் இல்லாத காரணத்தினால்தான், அது மற்ற இடங்களுக்கும் சென்று, இப்படிக் காடுகளை அழித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த யானைகளைப் பிடிப்பதற்கு, அல்லது அங்கே நீர்நிலைகளை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளவில் யானைகளை அதிகமான அளவிற்கு வளர்க்க வேண்டும் என்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு, யானைகள் வளர்ப்புத் திட்டம் என்ற திட்டத்தின் மூலம் யானைகளின் எண்ணிக்கையைப் பெருக்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த ஜவ்வாது மலைப் பகுதிகளில் இருக்கின்ற 12 யானைகளும் இனவிருத்திக்காகவும், தண்ணீருக்காகவும் ஆண்டுதோறும் மே மாதங்களில் வெளியே வருவது வழக்கம். அந்த யானைகளை வனத் துறை அதிகாரிகளின் மூலம் இப்போது ஆந்திரா காட்டுப் பகுதிகளுக்கு அனுப்பி, உங்களுடைய நிலங்களையெல்லாம் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.



1999 ஏப்ரல் 20]

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையிலே யூக்கலிப்டஸ் மரங்கள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. ஊழல் செய்பவர்கள் எப்படி மக்களுடைய வரிப் பணத்தை உறிஞ்சுகிறார்களோ, அதைப்போல, விஞ்ஞான ரீதியாக யூக்கலிப்டஸ் மரங்கள், நிலத்தடி நீரை உறிஞ்சக்கூடிய தன்மை கொண்டது என்று சொல்வார்கள். அதனால், நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது உண்மை என்று சொன்னால், அந்த மரங்களை வளர்ப்பதைத் தவிர்த்து அதற்கு ஈடாக வேறு மரங்களை வளர்ப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான ரீதியிலே யூக்கலிப்டஸ் மரக்கன்றுகள் தண்ணீரை உறிஞ்சுகின்றன என்ற கொள்கைக்கு இதுவரை சரியான விடை காணப்படவில்லை. ஆகவே அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சந்தன மரங்கள் தமிழகத்தில் எந்தப் பகுதியிலே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அதோடு, திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை போன்ற பகுதியிலும், தேனி மாவட்டத்திலே இருக்கிற வரிசநாட்டு மலைகளிலும் இந்த சந்தன மரங்கள் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களைப் பொறுத்தவரையில், இம்மரங்கள் வளர்வதற்குத் தகுந்த மாவட்டங்கள் சேலம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களாகும். மற்ற மாவட்டங்களிலும் அதாவது கோவை, ஈரோடு மாவட்டங்களிலும் அதைப்போல தேனி போன்ற இடங்களிலும் இம்மரங்கள் இருந்தாலும்கூட, அந்த மரங்களிலே இருக்கக்கூடிய சந்தனம் முழுமையாக, இங்கே இருக்கக்கூடிய-- திருவண்ணாமலையிலே

[1999 ஏப்ரல் 20

இருக்கக்கூடிய-- மரங்களைப் போல இருக்காது. ஆகவே வியாபார ரீதியில் சேலம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இருக்கின்ற சந்தன மரங்கள் மட்டுமே சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையிலே இருக்கின்ற அந்த 12 யானைகளும் வேறு ஒரு காட்டுப் பகுதியிலே இருந்து வழிதவறி அந்தப் பகுதிக்கு வந்து 10 ஆண்டு காலமாக இருந்து விவசாயப் பெருமக்களுடைய விளைநிலங்களிலே அதிக அளவிலே நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த யானைகளை, அவை எங்கே இருந்ததோ அங்கேயே எடுத்துச் சென்று விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த யானைகள் ஆந்திராவின் காட்டுப் பகுதியிலிருந்து 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் வந்தவைகள். மீண்டும் நாங்கள் ஆண்டுதோறும் அவற்றை அந்தப் பகுதிக்கு அனுப்பிக் கொண்டிருந்தாலும்கூட, மே மாதங்களில் அவை இங்கு வந்துவிடுகின்றன. ஆகவே இயற்கையான இந்த முறையை நாம் மாற்றுவதற்கில்லை. இருந்தாலும்கூட யானைகளால் அழிக்கப்படுகின்ற காடுகளுக்கு இந்த அரசு போதுமான நிதியை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. இராசேந்திரன்.

**திரு. ஏ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ஆம் ஆண்டு ஜவ்வாது மலையில் நிறைய சந்தன மரங்கள் இருந்தன. நாங்கள் எல்லாம் தொகுதிக்கு சுற்றுப்பயணம் போகும்போது அங்கு நிறைய சந்தன மரங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் 1991 முதல் 1996 வரை, 5 ஆண்டு காலம் அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் மரங்களை வெட்டிவிட்டார்கள். வேர்களைக்கூட விடவில்லை. அதன் காரணமாக சந்தன மரங்கள் இப்போது குறைந்துவிட்டன. அந்தச் சந்தன மரங்கள் ஜவ்வாது மலையில் எவ்வளவு இருக்கின்றன என்ற கணக்கு ஏதாவது இருக்கிறதா? எவ்வளவு மரங்கள் இருக்கின்றன



1999 ஏப்ரல் 20]

என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் சந்தன மரங்களை மட்டுமல்லாமல் நாட்டையே கொள்ளையடித்து விட்டார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட இப்போது இருக்கின்ற மரங்களை இந்த அரசு சிறப்பாகப் பாதுகாத்து வருகின்றது. இப்போது இருக்கின்ற மரங்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றால் சுமாராகச் சொல்லலாமே ஒழிய சரியாகச் சொல்லமுடியாது. ஓர் ஊரிலே காகம் எவ்வளவு என்று கேட்டால் அதை எப்படிச் சொல்கிறோமோ அதுபோலத் தான் இதுவும். இருந்தாலும்கூட, இருக்கின்ற மரங்களை மிகத் தீவிரமாகக் கண்காணித்துக் காப்பாற்றி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 454, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**454--**

**வீட்டுப் பத்திரங்கள் வழங்குதல்**

***7573--திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) திருப்பூர், பெரியார் காலனியிலுள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளில் உரிமையாளர்களுக்கு இதுவரை வீட்டுப் பத்திரங்கள் வழங்காமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) அவர்களுக்கு பத்திரங்கள் எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) திருப்பூர் வேலம்பாளையம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டப்பகுதியில் வீடுகள் ஒதுக்கீடு பெற்று வீட்டின் முழுத் தொகையும் செலுத்தியுள்ளவர்களுக்கு 1993 ஆம்

[1999 ஏப்ரல் 20

ஆண்டு முதல் வாரியம் கிரையப் பத்திரம் வழங்கி வருகின்றது. 1998 ஆம் வருடம் நவம்பர் மாதம் வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டிற்கான முழுத் தொகையும் செலுத்தி கிரையப் பத்திரம் வேண்டி விண்ணப்பித்த 184 ஒதுக்கீடுதாரர்களுக்கு வாரியத்தால் கிரையப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வி கேட்டு 2, 2½ வருடங்கள் இருக்கும். 2½ வருடங்களாக இது கேள்வியற்றுக் கிடந்து இப்பொழுது ஒரு கேள்வியாக வருவதால் இதன்மீது துணைக் கேள்வி கேட்க இயலவில்லை. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 455, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**455--**

### SIDCO தொழிற்பேட்டை அமைத்தல்

***8425--திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**
**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், காங்கேயம் பாளையத்தில் SIDCO தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், காங்கேயம்பாளையத்தில் 'SIDCO' தொழிற்பேட்டை அமைக்க 50.05 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிலத்தின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றுள்ளனர். வழக்கு 'SIDCO'-விற்குச் சாதகமாக முடிந்ததும், தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-10

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுநாட்களுக்கு முன்பே நிலம் ஆர்ஜிதம்



1999 ஏப்ரல் 20]

செய்யப்பட்டு, விரைவாகத் தொழிற்பேட்டை ஆரம்பிக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையில், சில தனிப்பட்ட நபர்களின் குறுக்கீடுகள் காரணமாக நின்றுவிட்டது. வேகமாக வளரக்கூடிய அந்தத் தொழிற்பேட்டையை, தேசிய நெடுஞ்சாலை, இரயில் போக்குவரத்து ஆகிய வசதிகள் அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், விரைவாகத் தொடங்குவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அது ஈரோடு-கோவை நெடுஞ்சாலையிலே அமைந்து இருக்கிற காரணத்தினால், அதன் விலை மதிப்பு, அன்றைய நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட மதிப்பைவிடக் கூடுதலாக இருந்த காரணத்தினால், வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அதிலே 31-3-1999-லே 2 தடையாணைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு தடையாணைகள்தான் இருக்கின்றன. விரைவிலே அந்தத் தடையாணைகளும் நீக்கப்பட்டவுடன், அங்கே SIDCO தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை அருகிலும், நெருக்கடி மிகுந்த தொழில் நகரமான திருப்பூருக்கு அருகிலும் உள்ள SIDCO நம்முடைய அரசுக்கு மிகவும் இலாபகரமாக இருக்கும் என்பதால், தடையாணையை விரைவில் நீக்கி, SIDCO தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அது மிகுந்த இலாபகரமாக இருக்கும் என்ற நோக்கத்தில்தான், அந்தத் தடையாணையை விரைவாக நீக்கிவிட்டு, அந்த இடத்திலே தொழிற்பேட்டை அமைப்பதற்கு உறுதியான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைப்பதற்காக, 1989-90-லே நமது

முதலமைச்சர், அன்றைக்கும் முதலமைச்சராக இருந்தபோது, நிலக்கோட்டை தொகுதியிலே 413 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அங்கு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தது. அப்படி அரசாங்கமே கையகப்படுத்தி அதற்காக ஒதுக்கியுள்ளதை அரசு அறியுமா? ஆம் என்றால், இப்போது தொழில் அமைக்க முன்வரக்கூடிய முதலாளிகளிடம் அரசாங்கத்திற்கு ஒரு ஏக்கருக்கு 6 இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் இடம் கொடுப்போம் என்று கூறக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தினால், தொழில் தொடங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அரசு அதிலிருந்து விலக்களிக்குமா ?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 'TACID ' மூலமாக நிலக்கோட்டையிலே 475 ஏக்கர் நிலம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1989-90 ஆம் ஆண்டிலே விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காகக் கையகப்படுத்தப்பட்டது. பின்பு 1991-லிருந்து 1996 வரை அதற்குரிய நடவடிக்கையை உரிய முறையிலே எடுக்காத காரணத்தினால், இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்ற பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மீண்டும் அந்த இடத்தை எடுப்பதற்குரிய ஆணைகளை இட்டு, முழு அளவிலே இன்று அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கு உரிய வகையில், மின் விளக்கு வசதி, சாலை வசதி, தண்ணீர் வசதி ஆகிய அத்தனை வசதிகளையும், அமைப்பதற்கான பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர்தான்--ஐந்தாண்டு காலத்திற்குப் பின்னர், முடிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றால், அந்த இடத்தைப் பண்படுத்துவதற்காக, மேம்பாடு செய்வதற்காக ஆகின்ற பணம் மிகவும் கூடுதலாக இருக்கிற காரணத்தினால், 'டாசிட்' அதற்கு 6 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்திருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்வார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியத்தில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர்



அவர்கள் திண்டிவனம் பகுதி வெண்மணியாற்று கிராமத்தில், சிட்கோ, தொழிற்பேட்டை தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அது எப்போது தொடங்கப்படும்; எப்போது வருவார்கள்; எப்போது அடிக்கல் நாட்டுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, 50 புதிய தொழிற்பேட்டைகள் தமிழகத்தில் அமைக்கப்படும் என்று கடந்த முறை என்னுடைய மானியக் கோரிக்கையின் போது பதிலளிக்கையில் அரசின் சார்பிலே நான் அறிவித்திருந்தேன். இதற்காக கிட்டத்தட்ட 17 இடங்களைத் தேர்வு செய்து, அந்த இடங்களுக்கான நிலத்தைக் கையகப்படுத்தி, அதிலே தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற முயற்சியிலே தொடர்ந்து ஈடுபட்டிருக்கின்றோம். அது ஒரு நீண்ட தொடர் நடவடிக்கை. அமைச்சர் அவர்கள் வந்து பார்த்துத் தான் அந்த இடத்திலே அதைத் தொடங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. இருந்தாலும், SIDCO தொழிற்பேட்டைகளை 50 இடங்களில் உடனே அமைப்பதற்குரிய நடவடிக்கையைத் தொடர்ந்து எடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினா, ஈரோடு பற்றியது. எல்லோரும் இப்படி கையைத் தூக்கிக் கொண்டு, அவரவர் தொகுதியைப் பற்றிக் கேட்டால் எப்படி அனுமதிக்க முடியும்?

**வினா எண் 456, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.**

**456--**

**நினைவுச் சின்னம் எழுப்புதல்**

***19914--திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மாமன்னர் மருதுபாண்டியர் பிறந்த நரிக்குடி ஒன்றியம் என். நெடுங்குளத்தில் நினைவுச் சின்னம் எழுப்ப அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 ஏப்ரல் 20

மாமன்னர் மருதுபாண்டியர் பிறந்த நரிக்குடி ஒன்றியம் என். நெடுங்குளத்தில் நினைவுச் சின்னம் எழுப்பும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-15

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானம் காத்த சீமை மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200 ஆவது ஆண்டினைக் குறிக்கக் கூடிய புகழாஞ்சலியை 2001ஆம் ஆண்டிலே அக்டோபர்த் திங்கள், திருப்பத்தூரிலே நடத்தும் வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுத்திருக்கக்கூடிய இந்த இனிய வேளையிலே மாமன்னர் மருதுபாண்டியர் பிறந்த நரிக்குடி ஒன்றியம், என்.முக்குளத்திலே--நெடுங்குளம் என்று தவறுதலாக அச்சிடப்பட்டிருக்கிற. அந்த--என்.முக்குளத்திலே அவருடைய நினைவைப் போற்றும் வகையிலே அவர்கள் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் கட்டபொம்மனுக்கு அவர் பிறந்த பாஞ்சாலக் குறிச்சியிலும், பூலித்தேவனுக்கு நெற்கட்டும் சேவலிலும், தியாகி விசுவநாத தாஸுக்கு திருமங்கலத்திலும், அதுபோல பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு விருதுநகரிலும் அவர்களுடைய பிறந்த இடங்களிலே நினைவு சின்னங்களை எழுப்பிய பெருமையினைப் பெற்றிருக்கிறது. எனவே, அந்த வகையில் மாமன்னர் மருதுபாண்டியர் பிறந்த முக்குளத்திலும் அவருடைய இல்லத்தினை நினைவுச் சின்னமாக மாற்றுவதற்கு நம்முடைய அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி ஆவன செய்வார்களா? மேலும், மருதுபாண்டியர் புதைக்கப் பட்டிருக்கக்கூடிய திருப்பத்தூரிலே இருக்கக்கூடிய அந்த இடம் தற்போது தனியாருக்குச் சொந்தமாக இருக்கிறது. எனவே, அந்த நிலத்தையும் பெற்று அந்த இடத்திலே நினைவுச் சின்னத்தினை அமைத்திட ஆவன செய்யப்படுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் மருதுபாண்டியர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் 5-12-1990 ஆம் நாள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் நினைவு மண்டபம் கட்டுவதற்காக



1999 ஏப்ரல் 20]

ஆணையிட்டு, அந்த மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. தற்போது மருதுபாண்டியர் நினைவிடத்திற்கு முன்பு Swedish Mission மருத்துவமனையின் சோதனைக்கூடம் உள்ளது. இதனை அரசு வாங்கி, அதற்குப் பதிலாக வேறொரு இடத்திலே அதே போன்று கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான நிர்வாக நடைமுறைப் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மேற்கொள்ளப்பட்டு தனியாரிடமுள்ள Swedish Mission மருத்துவ சோதனைக் கூடத்தினை அரசுக்குக் கொடுப்பதாக சம்மதம் தெரிவித்து அதற்கான இழப்பீட்டு தொகை, மாற்று இடத்தில் Swedish Mission சோதனை கூடம் கட்டுவதற்கான செலவு, மருதுபாண்டியர் நினைவிட மேம்பாட்டு பணிகள், திருவுருவச் சிலைகளை மாற்றி அமைத்தல், காளையார்கோவிலிலுள்ள சமாதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய கருத்துரு மீது வருவாய்த் துறை ஆணையின்படி நில நிருவாகத் துறையிடம் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது. நில நிருவாகத் துறையின் அறிக்கை பெற்றதும், தற்போது திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவு மண்டபம், காளையார்கோவிலிலுள்ள மருதுபாண்டியர் சமாதி ஆகியவற்றைப் புதுப்பொலிவுடன் மாற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, மானம் காத்த மருதுபாண்டியருடைய 200-வது ஆண்டு விழாவை மாண்புமிகு கலைஞர் அவர்கள், அரசின் சார்பிலே நடத்தப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஏற்கெனவே கட்டப்பட்ட நினைவிடத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு துரித நடவடிக்கையினை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய பத்திரிகையிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு கன்னியாகுமரியிலே நினைவு மண்டபம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக அறிந்தேன். அது, இந்த அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா

[1999 ஏப்ரல் 20

எழுப்பியுள்ள இந்தக் கேள்வி குறித்து அரசுக்கு எந்த விவரமும் வரவில்லை. ஆனால், இரண்டு, மூன்று கடிதங்கள் அரசின் சார்பில் இந்தியப் பிரதமருக்கும், அந்தத் துறையினுடைய அமைச்சருக்கும் எழுதப்பட்டிருக்கின்றது. கடந்த 6, 7 நாட்களுக்கு முன்புகூட, மத்திய அரசினுடைய இந்தத் துறையினுடைய அமைச்சர் தொலைபேசியிலே என்னிடத்திலே தொடர்புகொண்டு, மேலும் சில குறிப்புகளைக் கேட்டிருந்தார். அந்தக் குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. வாய் அளவிலேதான் இன்றைக்கு இது அனுமதி தரப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும் என்று நான் நம்புகின்றேன். 1 ஆம் தேதிகூட பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். நேற்றையதினம் வந்திருக்கின்ற செய்தி, செவி வழிக் கேட்ட செய்தி என்பதைத் தவிர, இன்னமும் அதிகார பூர்வமாக அது வரவில்லை. இருந்தாலும்கூட, அந்தச் செய்தியைச் சொன்னவரை எண்ணிப்பார்க்கும்போது உண்மையாகத்தான் இருக்கும் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயும் புலி பண்டாரக வன்னியரைப் பற்றிப் பெருமை சேர்க்கும் வகையிலே அதனுடைய அருமை பெருமைகளைப் பற்றி எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சித்தரித்து, காவியமாகத் தீட்டியிருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே கடற்கரை ஓரம் ஒரு சிலை வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இலங்கை நாடாளுமன்றத்திலே கேட்கப்பட வேண்டிய கேள்வி. நான் பாயும் புலி பண்டாரக வன்னியரைச் சிறப்பிக்கின்ற வகையிலே ஒரு பெரிய நாவலை எழுதியிருக்கின்றேன். அதை மாண்புமிகு உறுப்பினர் படித்திருக்கின்றார் என்ற வகையிலே எனக்கு மகிழ்ச்சிதான்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 457, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 20]

**457--**

## ஆட்டுப் பண்ணை தொடங்குதல்

***10629--திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சியில் ஆட்டுப் பண்ணை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சியில் ஆட்டுப் பண்ணை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சரிடத்திலே என்னுடைய தொகுதி வறண்ட பகுதி, இப்பகுதியிலே விவசாய நிலம் தவிர வேறு எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை, விவசாயிகள் ஆடு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டு நல்ல இன உற்பத்தி மேய்ச்சல் கடாரிகளுக்கு ஈடாக உள்ள நல்ல கலர் ரக செம்மறி ஆட்டுக்கடாக்களையும், ஆடுகளையும் வளர்க்கிறார்கள் அங்கேயுள்ள விவசாயிகள். ஆகவே, அந்தப் பகுதியிலே ஏராளமாக, தரிசு நிலங்களும் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே செம்மறி ஆட்டினுடைய பண்ணை ஒன்றை உருவாக்கிக் கொடுத்தால் அந்தப் பகுதியினுடைய மக்களுக்கு நன்றாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி என்னுடைய தொகுதியான அரவக்குறிச்சி தொகுதியில் ஒரு ஆட்டுப் பண்ணை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 20

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையில் தற்போது விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்திலும், வேலூர் மாவட்டம் முகுந்தராயபுரத்திலும், விருதுநகர் மாவட்டம் சாத்தூரிலும் ஆட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த 3 பண்ணைகள் தவிர, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கால்நடைப் பண்ணையிலும் ஆடு வளர்ப்புப் பண்ணை ஒன்று செயல்பட்டு வருகின்றது. அதேபோல் ஓசூர், குறுக்கை, செட்டிநாடு, திருநெல்வேலி அபிசேகப்பட்டி ஆகிய இடங்களிலும் ஆடுகள் பராமரிக்கப்பட்டு, இனப்பெருக்கத்திற்காக விநியோகிக்கப்படுகின்றன. அவ்வப்போது தீவிர இனப் பெருக்கத்திற்காக ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடுகள், பல்வேறு மாவட்டங்களில் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டுகூட திருச்சி, கரூர் மாவட்டங்களில் ஒன்றியத்திற்கு 20 ஆடுகள் என்ற அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய தொகுதியிலுள்ள ஒன்றியங்களுக்குக்கூட வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் இந்த 1999-2000 ஆம் ஆண்டுகூட நேற்றையதினம் அறிவித்ததன்படி ஆதி திராவிடர்களுக்காக ஏறக்குறைய 80,000-க்கு மேற்பட்ட செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் வழங்கப்பட இருக்கின்றன என்பதைக் கூறி, அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 458, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**458--**

**கால்நடை கிளை மருத்துவமனை தொடங்குதல்**

***22615--திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் ஒன்றியம், பாப்பாகோவில் கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 ஏப்ரல் 20]

நாகப்பட்டினம் ஒன்றியம், பாப்பாகோவில் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாகோவில் கிராமம் 1997-98 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் எடுக்கப்பட்ட கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு கிளை மருத்துவமனை திறப்பதற்காக அந்தப் பகுதியிலே கால்நடைத் துறை அதிகாரிகள் சென்று பார்வையிட்டார்கள். அதன் பிறகு, அந்தப் பகுதிக்கு அந்த அதிகாரிகள் செல்லவில்லை. ஆகவே கால்நடை மருத்துவமனை வரும் இடங்களையெல்லாம் ஆய்வு செய்துவிட்டுச் சென்று இருக்கிறார்கள் என்று மக்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். மேலும், அந்தப் பகுதியிலே சுற்றுப்புறத்திலே உள்ள கிராமங்களிலும் அதிகமான கால்நடைகள் இருப்பதால் அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து பகுதி நேர கிளை மருத்துவமனையையாவது திறக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் ஒன்றியத்திலுள்ள பாப்பாகோவில் கிராமத்தில் மொத்தம் 666 கால்நடைகளே உள்ளன. மேலும் இக்கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் ஒரத்தூர் கால்நடைக் கிளை நிலையமும், 3 கிலோ மீட்டர் தூரத்தில் நாகப்பட்டினம் கால்நடை மருத்துவமனையும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் சிக்கல் மருந்தகமும் அமைந்துள்ளன. தற்போது இக்கிராமத்திலிருக்கிற கால்நடைகளுக்கு, மிக அருகில் உள்ள மேற்கூறப்பட்டுள்ள கால்நடை நிலையங்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாகப்பட்டினம் ஒன்றியத்தில் குறிச்சி, பெருங்கடம்பலூர் ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும், ஒரத்தூர் கால்நடைக் கிளை நிலையத்திற்கு நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பரிந்துரைப்படி, புதுச்சேரியில் 23-1-1998 முதல் பார்வைக் கிளை நிலையமும், குறிச்சி மற்றும் பெருங்கடம்பலூர் கிளை நிலையத்திற்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பரிந்துரைப்படி வடவூர் மற்றும் தேமங்கலத்தில் 23-1-1998 முதல் பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, பாப்பாகோவில் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் தற்போது அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 459, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**459--**

**அரசினர் பாதுகாப்பு இல்லங்கள்**

***21136--திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசினர் பாதுகாப்பு இல்லங்கள் எத்தனை?

(ஆ) அரசுக் கட்டடங்களில் இயங்குபவை எத்தனை?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசினர் பாதுகாப்பு இல்லங்கள் மொத்தம் ஐந்து. அவை சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ளன.

(ஆ) அரசுக் கட்டடங்களில் இயங்குபவை சென்னை மற்றும் திருச்சி இல்லங்கள் ஆகும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா, அதேபோல் இந்தப் பாதுகாப்பு இல்லங்களில் எந்த வயதிலிருந்து எந்த வயதுவரை அந்த ஏழைப் பெண் குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றன, அவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறதா? தொழிற்கல்வி சொல்லிக் கொடுக்கப்படுகிறதா என்பதனை அறிவிக்க அரசு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுக்க நெறி பிறழ்வுத் தடைச் சட்டம் 1956-ன்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் பெண்கள்,



1999 ஏப்ரல் 20]

சிறுமியர்களுக்குப் பாதுகாப்பு இல்லங்களில் வயது வரம்பின்றி தங்கும் வசதியும், கல்வி, தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. நீதிமன்ற விசாரணைக் காலத்தில் தங்குமிடம் அளித்தும் பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தையல், பூ வேலை, பாய் நெசவு, கை நெசவு, மின் சலவையகத்தில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அவர்கள் இந்தப் பயிற்சி முடித்து தண்டனைக் காலம் முடிந்து வெளியே செல்கின்றபோது அவர்களுடைய மறுவாழ்வுக்காக அரசின் சார்பில் 5,000 ரூபாய் அளித்து அவர்களுக்கு மறுவாழ்வும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட இல்லங்களில் போதுமான இடவசதியுள்ளதால் வேறு மாவட்டங்களில் இல்லம் தொடங்கும் கருத்துரு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 460, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**460--**

**சுற்றுலாத் தலமாக்குதல்**

***15894--திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை லக்கோனைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை லக்கோனைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையிலிருந்து சுமார் 9 கிலோ மீட்டர் தூரத்திலே கடலினூடே நிலமாக இருக்கக்கூடிய அந்த இடத்தில் தமிழ்நாட்டிலே Mangrove காடு என்று சொல்லக்கூடிய

அழையாத்திக காடு, மிக அடர்த்தியாக உள்ள இடம். அங்கே 400-க்கும் மேற்பட்ட அழகான பறவைகள், வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த இடத்தைப் பார்க்கிறபோது மிக அழகான சிறந்த இடமாகும். ஏற்கெனவே கடலாகவும், இரவிலே ஒரு தீவாகவும் இருக்கிற காரணத்தால் பல வெளிநாட்டுக்காரர்கள் அந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டுச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கு அரசு மீண்டும் ஆராய்ந்து பரிசீலிக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதியாண்டிலே, நிதி நிலைமைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தைக் கருத்தில் எடுத்து முத்துப்பேட்டை லக்கோனைச் சுற்றுலாத் தலமாக ஆக்கக்கூடிய அளவிற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கணினிக் கல்விப் பயிற்சி அளிக்க பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பதற்கு உயர் நீதிமன்றம் தடையாணை வழங்கியிருத்தல்

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of clarification. பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை உயர் நீதிமன்றத்திலேயிருந்து எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒரு தகவலைத் தெரிவித்தார். கடந்த பட்ஜெட்டிலே மாநில அரசு பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்களுக்குக் Computer கல்வி வழங்குவது என்று கொள்கை அறிவிப்பை வெளியிட்டு, கொள்கை அறிவிப்பை வெளியிட்ட அடிப்படையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆணையும் வெளியிடப்பட்டது. அதாவது, உலக ஓட்டத்தோடு தமிழகமும் சம ஓட்டம் போட





வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கிற அக்கறையோடு மாநில அரசால் Tender விடப்பட்டு 1200-க்கு மேற்பட்ட Tenders பெறப்பட்டு, உடைக்கப்பட்டு அமலாக்கப்பட இருக்கின்ற இந்த இக்கட்டான நிலையில் அந்த டெண்டரை உடைப்பதற்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதாக எனக்குச் செய்தி வந்தது. நான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், உயர் நீதிமன்றத்தின் தார்மீக நெறி எந்த அளவிற்குச் சிறுகச் சிறுக அரிக்கப்பட்டு வருகிறது என்பது கண்டு என்னுடைய வேதனையை நான் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இப்படியொரு வழக்குத் தாக்கலானது பற்றிக்கூட நான் ஆட்சேபிக்கவில்லை. அது அவரவர் மனநிலைக்குத் தக்கபடி அவர்கள் தாக்கலாக்கி இருக்கலாம். ஆனால் அதன்மீது ஒரு வழக்கறிஞர் ஆஜராகி இருக்கிறார். அது அவருடைய தொழில் உரிமை. அவர் ஆஜர் ஆகலாம். அதையும் நான் ஆட்சேபிக்க இயலவில்லை. ** எனவே, நான் மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு நல்ல முயற்சிக்கு உலகில் மிகுந்த முன்னேற்றம் நடந்து கொண்டிருக்கிறபோது அந்த முன்னேற்றத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தமிழகமும் பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட முயற்சிக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து, tender open செய்ய இயலாமல் செய்து இருக்கிறதே, அந்த இடைக்காலத் தடையை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அந்த இடைக்காலத் தடை விதித்தமைக்கு நீதிமன்றம் என்ன காரணத்தைச் சொல்லியிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் 22-4-1999ஆம் நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசின் சார்பில் தமிழகத்தில் எதிர்கால இளைஞர்கள் Computer-கணினிப் பயிற்சி மூலமாக வேலைவாய்ப்புகளை நிரம்பப் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நிதிநிலை அறிக்கையிலே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கின்றோம். 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆவது, 12 ஆவது வகுப்புகளில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், அந்தப் பயிற்சி அளிப்பதற்கு நிறுவனங்கள் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அந்த முயற்சியில்கூட இன்னின்ன நிறுவனங்கள் என்று அரசே குறிப்பிடாமல், ஒப்பந்தப்புள்ளி-tender-கோரப்பட்டு, தகுதியுடைய நிறுவனங்கள் அந்த ஒப்பந்தப் புள்ளிகளிலே கலந்துகொண்டு போட்டியிட்டு, அவர்கள்--நிறுவனங்கள்--மூலமாக இந்தக் கணினிப் பயிற்சியைப் பள்ளிகளிலே தொடங்கலாம் என்கின்ற எண்ணத்தோடு கடந்த 20-3-1999 அன்று ஏடுகளிலே விளம்பரங்கள் செய்யப்பட்டன. அந்த ஒப்பந்தப் புள்ளிகள் 19-4-1999 அன்று திறக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

1,200 மேல்நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக கணினிப் பாடததை எடுத்துக்கொண்டு, அதிலே வெளிவருகின்ற மாணவர்கள், ஆண்டுதோறும் ஒரு பள்ளிக்கு 40 பேர் என்றால், ஒவ்வொரு ஆண்டும் 48 ஆயிரம் பேர், குறைந்தது 48 ஆயிரம் பேர் software பயிற்சி பெற்றவர்களாக வெளியே வருவார்கள்; வேலைவாய்ப்புக்கு உரியவர்களாக வெளிவருவார்கள் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டு, அதற்கான விளம்பரமும் செய்யப்பட்டு, 19 ஆம் தேதி அந்த ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இடையில் சந்திரவதனம் மற்றும் நான்கு பேர் ஒரு வழக்கை உயர் நீதிமன்றத்திலே தொடுத்து, உயர் நீதிமன்றம் இந்த Tenders-ஐத் திறக்கக்கூடாது என்று இடைக்காலத் தடை விதித்திருப்பதாக, நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிட்ட ** என்கின்ற வழக்கறிஞர் அவர்களே ஒரு தந்தியின் மூலமாக நம்முடைய Elcot நிறுவனத்திற்குச் செய்தியை அனுப்பினார்கள்.

உடனடியாக நீதிமன்றத்தை அணுகி, நீதிபதி முன்னிலையில் தலைமை வழக்கறிஞர், கூடுதல் தலைமை வழக்கறிஞர் இடைக்காலத் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நீதிபதிகள் ஏற்காமல் அரசு பிரதிவாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி, வழக்கை 21 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கின்றார்கள். எனவே, இந்த இடைக்காலத் தடையை நீக்குவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும். இங்கே கேட்டார்கள், என்ன காரணத்தால் இந்த இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது என்று. தடை விதிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தைத் தவிர, வேறு காரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், மனுதாரர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தங்களைப் போன்ற B.Sc., Computer Science படித்த பட்டதாரிகள் இருக்கும்போது, எங்களை விட்டு விட்டு இந்த ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பது நல்லதல்ல, நிறுவனங்களுக்கு அளிக்கக்கூடாது என்பதைப்போலத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவில்லை எனக் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் 22-4-1999ஆம் நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நாமே நேரிடையாக B.Sc., படித்தவர்களை, Computer Science படித்தவர்களை நியமிக்கவில்லை. ஆனால், இந்த ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்று, அதன் மூலமாகக் குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்கள் இந்தப் பணியை ஆற்ற வரும்போது, அவர்கள் இந்த B.Sc., படித்தவர்களையும், Computer Science படித்தவர்களையும் நிச்சயமாக எடுத்துக்கொள்வார்கள். அதிலே இந்த மனுதாரர்களும்கூட இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். அது வேறு விவகாரம். ஆனால், அரசாங்கமே நேரிடையாக எடுத்தால்தான் இவர்களெல்லாம் இந்த மனு போடுவதற்கு, இத்தகைய தடையை வாங்குவதற்குத் தகுதி இருப்பதாக என்னால் கருத முடியும்; ஆனால் நாம் அழைத்திருப்பதோ நிறுவனங்களை. நிறுவனங்கள்தான் இந்தப் பயிற்சி பெற்றவர்களை அமர்த்தி இவற்றைச் செய்ய முடியும்.

முற்பகல் 10-35

நாம் ஏன் நிறுவனங்களை இதிலே அழைத்திருக்கிறோம் என்றால், ஆண்டுக்காண்டு Computer-இலே software முறை மாறக்கூடும். மாறிக்கொண்டே இருக்கிறது. நான் அதை பட்ஜெட்டிலேயே குறிப்பிட்டிருக்கின்றேன். நித்தம் நித்தம் மாறுகின்ற புதுமைகள்--புதுமைகள்கூட நித்தம் நித்தம் மாறும்--என்று குறிப்பிட்டிருக்கின்றேன். இந்த ஆண்டு புதுமையாக நாம் கருதுவது அடுத்த ஆண்டு புதுமையில்லாதவொன்றாக ஆகிவிடும். எனவே, அரசாங்கமே இந்த Computers-ஐ வாங்கினால், அதிக நஷ்டத்திற்கு ஆளாக நேரிடும். எனவே, தனித்தனி நிறுவனங்கள்--மூலமாக இந்தப் பணியைச் செய்யச் சொல்லலாம் என்றுதான் நிறுவனங்களுக்கு

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 ஏப்ரல் 20

நாம் இந்தப் பணியை ஒப்படைப்பதற்காக, இத்தகைய ஒப்பந்தம் பற்றிய விளம்பரத்தைச் செய்தோம். அந்த விளம்பரத்தை வைத்து இதுவரையிலே 1,000 பேர் மனு செய்திருக்கின்றார்கள். நேற்றையதினம் இந்தச் செய்தியைப் படிக்காமல் சில பேர் எங்களைச் சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்து விட்டார்கள். ஏன், இந்த ஒப்பந்தம் இன்றைக்குத் திறப்பதாக இருந்தீர்களே, நாங்களெல்லாம் வந்திருக்கிறோமே, என்ன காரணத்தால் ஒப்பந்தம் திறக்கப்படவில்லை என்று அவர்களெல்லாம் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவ்வளவு வேகமாக என்னால் சொல்ல முடியாது. எப்பொழுதுமே கையிலே இருக்கிற அகப்பையில் உளுந்து இருந்தால் அல்லது பயறு இருந்தால் அல்லது பருப்பு இருந்தால் அதை வேகமாகச் சுழற்ற முடியாது. அது இல்லாத அகப்பையை வேகமாகச் சுழற்றலாம். திரு. சுப்பராயன் அகப்பையிலே உளுந்து இல்லை. ஆகவே, வெறும் அகப்பையை வேகமாகச் சுழற்றுகிறார். என் கையிலே இருக்கிற அகப்பையிலே கொஞ்சம் உளுந்து இருக்கிறது அல்லது பயறு இருக்கிறது. வேகமாகச் சுழற்ற முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், நீதிமன்றங்கள் இதுபோன்ற இடைக்காலத் தடை கொடுக்கிற நேரத்தில், ஒரு நல்ல காரியத்திற்காகச் செய்யப்பட்டுள்ள இந்த அறிவிப்பை, ** ஆனாலும், தொடர்ந்து நாம் மேல்முறையீடு செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான பேரவைத் தீர்மானத்திற்கு உயர்நீதிமன்றம் தடையாணை பிறப்பித்தது குறித்து விவாதிக்கக் கூடுவதாக இருந்த பேரவைத் தலைவர்கள் மாநாடு ஒத்திவைப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் வழக்கிலே ஏற்கெனவே தாங்கள் அளித்த தீர்ப்பில் இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டுமென்ற வகையில் உத்தரவிட்டீர்கள். அதற்குப் பிறகும்கூட சென்னை உயர் நீதிமன்றம்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் 22-4-1999 ஆம் நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1999 ஏப்ரல் 20] [திரு. சி. ஞானசேகரன்]

ஓர் இடைக்கால உத்தரவை அளித்து, மாண்புமிகு உறுப்பினரை ஜாமீனிலே விடுவித்து, அந்த மனு நேற்று விசாரணைக்கு வந்து தாங்களும், இந்தச் சட்டமன்றச் செயலகத்தினுடைய செயலாளரும் சம்மனை வாங்கவில்லை என்கிற காரணத்தினாலே, அதுகுறித்து மேற்கொண்டு சட்டக் கருத்துகளை மூன்று மூத்த வழக்கறிஞர்களிடம் பெற வேண்டுமென்பதற்காக, உயர் நீதிமன்ற நீதிபதிகள், 3 Advocate General, பழைய Advocate General-களினுடைய opinion-ஐ இப்பொழுது கேட்டிருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்றத்தோடு மோதக்கூடாது என்கிற எண்ணம் இப்பொழுது ஓரளவுக்கு அந்த நீதிபதிகளுக்கு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதை முன்கூட்டியே அவர்கள் தெரிந்திருந்து, இடைக்கால உத்தரவை அளிக்காமல் இருந்திருந்தாலே நன்றாக இருந்திருக்கும்.

தாங்களும் இந்த இறையாண்மையைக் காப்பதற்காக சபாநாயகர்கள் மாநாட்டை நம்முடைய சென்னையிலேயே லோக்சபாவினுடைய சபாநாயகரை வைத்து நடத்துவதாக அறிவித்திருந்தீர்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? நம்முடைய சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பதற்குத் தாங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை என்னவென்பதை அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மாதம் 24 ஆம் தேதி பேரவைத் தலைவர்களின் மாநாடு நடப்பதாக இருந்தது. அது புதுடில்லியிலா அல்லது சென்னையிலா என்ற பிரச்சினைதான் முடிவு செய்யப்படாமல் இருந்த நேரத்தில், இந்த நாட்டின் தலைநகரிலே ஏற்பட்ட அரசியல் மாற்றம் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்; நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆகையினால், என்னைப் பொறுத்தவரையில், இன்று சபாநாயகராக இருக்கக்கூடியவரின் நிலை என்னவென்று எனக்கு தெரியாது. இப்பொழுதுதான் எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது, இந்த மாநாடு ஒத்திவைக்கப்படுகின்றது என்று. ஆனால், உறுதியாக, விரைவிலே கூட்டுவதற்கு ஏற்பாடு செய்வோம்.

நீங்கள் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்த summon-ஐப் பெற முடியாது என்று நானும், செயலாளரும் எடுத்த முடிவு, சட்டமன்றத்தின் இறையாண்மையைக் காப்பதற்குத்தான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகின்றேன்.

[1999 ஏப்ரல் 20

### (அ) மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கணினிக் கல்விப் பயிற்சி அளிக்க பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பதற்கு உயர் நீதிமன்றம் தடையாணை வழங்கியிருத்தல்--தொடர்ச்சி

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் உயர்ந்த நோக்கத்தோடு செயல்படுத்துகிற திட்டங்களில் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்பதிலே இருவேறு கருத்துகள் இருப்பதற்கு இடமில்லை. இதிலே குறிப்பாக, கணினி போன்ற ஒரு முன்னோடியான திட்டத்தை அரசாங்கம் அறிவிக்கின்றபோது இதிலே வழக்குமன்றம் செல்கிற வாய்ப்பு இருக்கிறதா என்பதனை-Intelligence-உளவுத் துறை ஆராய்ந்து ...(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே போய் Intelligence எப்படி ஆராய முடியும்? உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம்.

### (இ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை உயர் நீதிமன்றத்திற்கு வழங்குதல் குறித்த முடிவு

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி விவகாரம் சம்பந்தமாக உயர் நீதிமன்றம் அனுப்பிய நோட்டீஸை நீங்களும், செயலாளரும் வாங்கவில்லை. அதையொட்டி நேற்றைக்கு இந்தச் சட்டசபைக் கூட்டத்திற்குப் பிறகு 3 முன்னாள் தலைமை வக்கீல்கள் நியமனம் என்ற உத்தரவு போட்டிருக்கின்றார்கள். மேலும் அதிலே என்னுடைய கட்சியைச் சேர்ந்த தாமரைக்கனி அவர்கள் மனு கொடுத்திருக்கும்பொழுது, 22 ஆம் தேதி, 23 ஆம் தேதி, 24 ஆம் தேதி ஆகிய சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிய அந்தக் கோப்புகள் வேண்டுமென்று என் மூலமாக நான் கொடுத்திருந்தேன். அதைக் கொடுக்க முடியாது, அந்த நிகழ்ச்சிகளைக் கொடுக்க முடியாது என்று தெரிவித்திருந்தீர்கள். இன்றைக்கு அவர் கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறார். "நான் அங்கே இல்லை. ஆகவே 22, 23 மற்றும் 24 ஆகிய தேதிகளின் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் வேண்டுமென்று உத்தரவிடவேண்டும்" என்று கோர்ட்டில் மனு கொடுத்திருக்கிறார். அதுகுறித்து கோர்ட்டிலிருந்து தங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறதா? அப்படி வந்தால் நீங்கள் அதைக் கொடுப்பதற்கு ஆவன செய்வீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 20]

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரத்திற்குக் கொடுக்கின்ற மரியாதையை நான் நீதிமன்றத்திற்கு இந்த விஷயத்தில் கொடுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களிடம் தெளிவாகச் சொல்லிவிட்டேன், இந்த அவையின் மரபு என்ன என்று. நூலகத்தில் அன்றாட நிகழ்ச்சிகளின் நடவடிக்கைக் குறிப்புகள் இருக்கும். எந்த உறுப்பினர் வேண்டுமானாலும் அதைப் பார்த்துக்கொள்ளலாம். அதை எழுதவேண்டுமானாலும்கூட, யாரையாவது துணைக்குக் கொண்டுவந்து எழுதச் சொல்லலாம். அதை யார் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரத்திற்கு எழுதினார்கள் என்பது அவருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். நான் சில பேர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை அதிலே ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால், எழுதுவதற்கு வெளியிலிருந்து ஆள், அவர்களுக்கு வேண்டியவர்களைக் கொண்டு வரலாம். இங்கே சட்டமன்றத்தில் வேலை பார்க்கிறவர்களை வைத்து எழுதக்கூடாது. எந்த உறுப்பினருக்கும் அந்த உரிமை கிடையாது. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அந்த உரிமை கிடையாது. ஆகவே, சுந்தரம் அவர்களுக்குச் சொன்ன பதில்தான் நீதிமன்றத்திற்கும். நீதிமன்றத்திலேயிருந்து அந்தக் கோப்புகளைக் கேட்டால் அதே பதில்தான் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 3. கவன ஈர்ப்பு

### தென்காசி புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. ரவி அருணன் அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1999 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

தென்காசியில் புதிய பேருந்து நிலையம் கட்ட ரூ. 120 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 30 இலட்சம் மற்றும் மத்திய, சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 90 இலட்சம், இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்களாகும். இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 83 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் ரூ. 84.13 இலட்சம் செலவில் மத்திய பக்க பேருந்து நிற்குமிடம், கடைகள், பொதுக்கழிப்பிடம், கட்டணக் கழிப்பிடம் தண்ணீர் விநியோகப் பணிகள், சைவ உணவகக் கட்டடம், இதற்கான மின்விளக்கு வசதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வடக்கு பக்க பேருந்து நிற்குமிடம், தெற்கு பக்க பேருந்து நிற்குமிடம், 'ஆட்டோ நிலையம்', மிதிவண்டி நிறுத்துமிடம், காவல் துறை அறை, 'வேன்' நிற்குமிடம், பெயர்ப்பலகை அமைத்தல், பணியாளர் தங்கும் அறை, பயணச்சீட்டு வழங்கும் அறை, அசைவ உணவு விடுதிக் கட்டடம், சிறுபாலம், பொருள் பாதுகாப்பு அறை, இதற்கான மின்வசதிப் பணிகள், சிமெண்ட் சாலை அமைத்தல் போன்றவை பாக்கியுள்ளன. ஏற்கெனவே, அனுமதிக்கப்பெற்ற பணிகளில், முடிக்காமல் இருக்கும் பணிகளுக்கான மதிப்பீடு பொருள் விலையேற்றத்தினால் உயர்வதாலும், கூடுதலாக சில அத்தியாவசிய வசதிப் பணிகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாலும், இத்திட்டப் பணிக்கான மதிப்பீடு ரூ. 120 இலட்சத்திலிருந்து ரூ. 170.36 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது. இக்கூடுதல் செலவுகளுக்கான நிதி உதவி அளிக்க தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இதுகுறித்து மேல்நடவடிக்கை தொடரப்படுகிறது. இப்பணிகள் அனைத்தையும் முடித்து 31-7-99-க்குள் புதிய பேருந்து நிலையத்தைப் பயனுக்குக் கொண்டுவர நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பணி



1999 ஏப்ரல் 20] [திரு. கே. ரவி அருணன்]

7 ஆண்டுகள் ஆகியும் இன்னும் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு கால தாமதம் ஏற்பட்டதால் அந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு 120 லட்சத்திலிருந்து தற்போது 170 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதுவரை தென்காசி நகராட்சி செலவு செய்த 83 இலட்ச ரூபாய் நிதிக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாமல் தென்காசி நகராட்சி இதுவரை 51 இலட்ச ரூபாய் வட்டி மட்டுமே செலுத்தியுள்ளது. ஆகவே இனியும் காலதாமதம் இல்லாமல் அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள காலக் கெடுவிற்குள் அந்தத் திட்டத்தை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே அறிவித்திருக்கிறார்கள். திட்டம் 1992-ல் ஆரம்பிப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர், நான் மற்றும் பல பேர் அந்த இடங்களுக்குச் சென்று-ஏழத்தாழ 3 முறை நேரில் நான் பார்வையிட்டு இருக்கிறேன். அதற்குரிய நடவடிக்கைகள் அதற்குப் பிறகுதான் எடுக்கப்பட்டன என்பதும் மற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தொடக்க காலத்தில் எடுக்கப்பட்ட பணிகளோடு சில பணிகள் இதிலே இடையிலே சேர்க்கப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளிகள் விலை ஏற்றத்தினாலும், பணிகள் அதிகம் சேர்க்கப்பட்ட காரணத்தினாலும், சற்றுக் கூடுதலாக அதிகரித்துவிட்ட காரணத்தாலும், அந்த நகராட்சியில் நிதிவசதி இல்லாத காரணத்தாலும், எந்தத் துறையிடத்தில் கடன் பெறலாம் என்பதை யூகித்து, இருக்கிற தகுதிக்கேற்ப கடனைப் பெறவேண்டுமென்று முயற்சித்து அந்தக் கடனுக்கும் ஓர் அளவுக்கு அனுமதி கிடைக்கிற நிலை இருக்கிறது. இதில் ஏறத்தாழ 170 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் தற்போது திட்ட மதிப்பீடாகியிருக்கிறது. எனவே இந்தப் பணி மீண்டும் விரைவாகவே தொடங்கப்படவேண்டுமென்று இந்த 55வது பிரிவின்கீழ் இந்தக் கவனஈர்ப்பு வருவதற்கு முன்னாலேயே அறிவுறுத்தியிருக்கிறேன். நிச்சயமாக 31-7-1999-க்குள் இந்தப் பணியை நிறைவேற்றிவிடமுடியும் என்று நம்புகிறேன். அதற்கான உரிய நடவடிக்கையைத் தொடர்ந்து எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலைய வளாகத்திற்குள் சிமெண்ட் Concrete தளம் அமைப்பதற்கான பணி, மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை. அந்தப் பணிக்கு 83 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அந்த சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்க அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை முடியட்டும். எந்தெந்தப் பணிகளை எதிலெதில் எடுத்துக்கொள்வது, எந்தெந்த அளவு நிதி ஒதுக்குவது என்பதையெல்லாம் முடிவு செய்து, பிறகு கூடுமான வரையில் சிமெண்ட் தளம் அமைக்க வேண்டுமென்ற பணியை இதில் சேர்த்திருக்கிறோம். சிமெண்ட் தளம் அமைக்கிற பணிதான் இதிலே பாக்கியிருக்கிறது. அநேகமாக எல்லா இடங்களிலும் சிமெண்ட் தளம் இருந்தால்தான் நல்லது. சாலை என்பதே தொடர் சாலைதான். இந்தச் சாலையிலிருந்து அங்கே உள்ளே போகிற சாலை சிமெண்ட் சாலைதான். ஆனால், உட்பக்கத்திலே சிமெண்ட் சாலை அமைக்கின்ற பணி இல்லை. அவை விரைவாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நிதியை யாரிடத்தில் எப்போது பெறுவது என்பதை, நிதிநிலை பற்றி அறிவித்திருக்கின்ற அறிவிப்பையொட்டி, இங்கே மானியக் கோரிக்கைகள் முடிவுற்ற பிறகுதான் அறிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### கோரிக்கை எண் 25-கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25-கைத்தறியும் துணித் தொழிலும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 196,88,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2748, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் துணிகளை அரசே கொள்முதல் செய்து நெசவாளர்களின் துயர் நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1963, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இடங்கரை சாலை, எடப்பாடி நகரம் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு மானிய விலையில் போதிய நூல் வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3084, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி பிரதமச் சங்கங்களின் மூலம் 1996-97-ல் விற்பனை செய்யப்பட்ட துணிகளின் விற்பனையில் உச்சவரம்பைத் தாண்டி விட்டதால் நிராகரிக்கப்பட்ட மானியத் தொகையை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4329, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3303, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும் மானிய விலையில் நூல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3558, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்லை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2335, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட துணி ரகங்களை விசைத்தறியில் தயார் செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4475, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மண்டல கைத்தறிக் கண்காட்சியை நாகையில் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2791, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி பட்டு கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,96,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4443, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி நெசவாளர்களுக்கு வழங்கும் மானியத் தொகையினை உயர்த்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3040, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 512, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழில் நசிந்து வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** வெட்டுத் தீர்மானம் எண் 3876, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட துணி ரகங்கள் விசைத்தறியில் நெய்யப்படுவதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2575, திரு. ஆர்.ஆர். சேகரன்.



**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறிகள் மூலம் தயார் செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3702, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**DR. E.S.S. RAMAN:** Hon. Speaker, Sir, "To discuss the need to supply yarns to the members of Weavers Co-operative Societies in Pallipat Taluk on credit basis", I move—

"That the sum of Rs. 196,88,19,000/- allocated under Demand No. 25-Handlooms and Textiles, be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3642, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, "To discuss the need to promote export of handloom goods and alleviate difficulties of the handloom weavers'—I move—

"That the sum of Rs. 196,88,19,000/- allocated under Demand No. 25-Handlooms and Textiles, be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3778, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "பேட்டையிலுள்ள தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலைக்கு தரமான பஞ்சு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4098, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, கடலையூரிலும், எட்டயாபுரத்திலும் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை அரசே கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1303, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறித் துணி ரகங்களுக்கு அளிக்கப்படும் தள்ளுபடியைக் கூடுதலாக அதிகரித்துத் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 196,88,19,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 133 முதல் 179 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேச இருக்கின்றார்கள். விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார் அவர்கள் 10 நிமிடங்களும், மற்றவர்கள் எல்லாம் 7 நிமிடங்களும் பேசுவதற்கு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தை டாக்டர் அ. செல்லக்குமார் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் காலமாக எத்தனையோ தொழில்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆனால், கைத்தறித் தொழில் மட்டும்தான் கால வேகத்திற்கும், மாற்றத்திற்கும் ஈடுகொடுத்து, இன்றைக்கும் மக்கள் மத்தியிலே தனக்கென ஒரு நிலையான இடத்தை, நிரந்தரமாகப் பெற்றிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்கும்போது, இயந்திர கதியிலே சிக்கிக் கொள்ளாமல், மனித உயிர்த் துடிப்போடு இது இயங்கிக் கொண்டிருப்பதுதான் என்பதை நாம் பார்க்கின்றோம். அதைத்தான் மகாகவி பாரதியார் சொன்னார், 'பட்டுநூல் ஆடையும், பஞ்சில் உடையும் பண்ணி மலையெனக் குவிப்போம்' என்று. அதை அவர் அழுத்தந்திருத்தமாகச் சொன்னது மட்டுமல்ல, பாரதிதாசன் அவர்கள் சொல்கிறபோது, 'ஆடையில் சிறந்தது கைத்தறி ஆடை, மக்கள் அனைவருக்கும் நல்லது அந்த தேனடை, ஓடையில் தேனை அள்ளி உண்ண வாரீர், அள்ளி உண்டு, கைத்தறிக்கு உதவி பண்ண வாரீர்!' என்று பாரதிதாசன் அவர்கள் தெள்ளத்தெளிவாகக் கைத்தறியின் முக்கியத்துவத்தைப் பற்றி நாட்டு மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்) தலைமை]**

இப்போது கைத்தறித் தொழில்--இந்தியத் திருநாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நேரடியாக அல்லது மறைமுகமாக அதிகமான வேலைவாய்ப்பை இந்த நாட்டுமக்களுக்கு உருவாக்கிக் கொடுக்கின்ற ஒரு துறையாக இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே இந்தத் துறையினுடைய

முக்கியத்துவத்தைப் பற்றி ஆளுகின்ற அரசுகள் உணர்ந்து கொண்டுதான் பல காலகட்டங்களிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் இப்போது இந்த கைத்தறித் தொழில் ஒரு சிக்கலான சூழ்நிலையிலே நின்று கொண்டிருக்கிறது என்பதை நாம் அத்தனைபேரும் உணர்ந்து பார்க்கிறோம். கடந்த காலங்களிலேகூட இந்த கைத்தறி நெசவாளர்கள் தாங்கள் நெய்து வந்த, உற்பத்தி செய்த துணிகள், ஏறத்தாழ ரூ. 360 கோடிக்கு அதிகமாகத் தேங்கி இருந்ததும், அதற்கு அரசினுடைய மானியம் 30 சதம் என்று ஒதுக்கீடு செய்ததன் காரணமாக ஏறத்தாழ ரூ. 200 கோடிக்கு அதிகமான துணிகள் விற்பனையாகி இருக்கின்றன என்பதும், இன்னும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்கான துணிகள் தேங்கியிருக்கின்றன என்ற நிலையையும் நாம் இப்போது பார்க்கிறோம். எனவே 30 சதவிகித தள்ளுபடி என்பது கடந்த மார்ச் திங்களோடு நிலுவையிலே நின்றுவிட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து தருகின்றபோதுதான் அந்த நெசவாளர்கள் உற்பத்தி செய்திருக்கின்ற துணிகள் விலை போவது மட்டுமல்ல, அதன் மூலமாக நெசவாளர்களுடைய வாழ்வும் வளமாகிறது என்பதை இந்த அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழக அரசினுடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையை தாக்கல் செய்தபோது அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயற்கை இழை நூல்களுக்கும், செயற்கை இழைகளுக்கும் வரி 8%-லிருந்து 2%-ஆகக் குறைத்திருக்கிறார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இதுபோன்று செயற்கை இழை நூல்களுக்கும், செயற்கை இழைகளுக்கும் வரிகள் குறைக்கப்படுகிறபோது, எஞ்சியிருக்கிற மற்றத் துறைகளிலே உற்பத்தி செய்கின்றபோது போட்டிச் சந்தையில் அவர்களால் ஈடுகொடுத்துச் செயல்பட முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள். எனவே, இதுபோன்று வரிக் குறைப்பு ஒரு பக்கம் கொடுக்கிறபோது, இன்னொரு பக்கத்திலே இதுபோன்று கைத்தறித் துணிகளுக்குத் தரும் தள்ளுபடியைத் தொடர்ந்து தந்து இன்னும் அதிகமாக போட்டிச் சந்தையிலே அவர்கள் ஈடுகொடுத்துச், செயல்படுவதற்கு ஏற்ற வகையில் நீங்கள் உதவியாக இருக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்வேன். இதுபோன்று கைத்தறித் துணிகள் ஆண்டுக்கணக்கிலே தேங்கிக்கிடக்கிறபோது அதனால் ஏற்படுகின்ற வட்டி நஷ்டத்தை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அந்த holding cost மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு



ஆண்டுதோறும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே அதை நாம் கருத்தில் கொண்டு செயல்படுவோம் என்று சொன்னால் holding cost இல்லாத சூழ்நிலையில், தேங்கிக் கிடக்கிற நிலையில் வட்டி இழப்பு ஏற்படும் சூழ்நிலையைத் தவிர்ப்போம் என்று சொன்னால் நிச்சயமாக இன்னும் அதிகமாக அவர்களுக்கு நாம் வழங்கி வருகின்ற தள்ளுபடியை உயர்த்திக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த 300 கோடி ரூபாய்த் தேக்கம் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட 30 சதவிகிதத்திலே ஏற்கப்பட்டு ரூ. 202 கோடி அளவுக்கு அதிலே துணி விற்பனை நடந்து முடிந்துவிட்டது. தற்போது தெரிவித்த இந்தச் செய்தி இந்த இரண்டு மாவட்டங்களிலே உள்ள கைத்தறி லுங்கிகள் பற்றிய சுமார் 7 கோடி ரூபாய் அளவிற்கான தேக்கத்திற்குத்தான் இந்த 30 சதவிகிதம் கொடுக்கப்பட்டு, அதிலும் சரிபாதி லுங்கிகள் இப்போது விற்பனை செய்யப்பட்டு முழுவதுமாகத் தேக்கத்தில் இல்லாமல், ஓரளவிற்கு இருக்கக்கூடிய தேக்கம்தான் இப்போது உற்பத்தி அளவிலே இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச வேட்டி-சேலை நெய்கின்ற, நெய்து கொடுக்கின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய அன்பான வேண்டுகோள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கூலியை மேலும் 50% உயர்த்திக் கொடுப்பதன்மூலம் தான் அவர்களுடைய வருமானத்தை நாம் சராசரி தனி மனிதனுடைய தினசரி வருமானத்தோடு ஒப்பிட்டு அவர்களை வாழ வைக்க முடியும் என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால் கைலியை அதாவது லுங்கியைத் தயாரிப்பதற்காக கிடைக்கின்ற மாத வருமானத்தைப் பார்க்கின்றபோது, ஏறத்தாழ சராசரியாக ஒரு நெசவாளருக்கு 1400 ரூபாய் மாத வருமானம் வருகிறது. இந்த இலவச வேட்டி சேலைகளை அவர்கள் நெய்வதன் மூலமாக அவர்களுக்கு வரக்கூடிய வருமானம் என்பது 800 ரூபாய்க்கும் குறைவாக இன்றைக்கு இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

முற்பகல் 10-55

ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே 400 லுங்கிகள் அவர்கள் தயார் செய்தார்கள் என்று சொன்னால், இலவச வேட்டி என்று பார்க்கின்றபோது 200 வேட்டிகள்தான் அவர்களால் தயார் செய்ய முடியும். வேட்டியினுடைய நீளம் 3½ மீட்டர், லுங்கி என்பது 2 மீட்டர்தான். எனவே நீங்கள் லுங்கிகளுக்குத் தள்ளுபடி செய்து கொடுத்ததுபோல், இன்னும் சொல்லப்போனால், அதற்குப் பதிலாகக் கூட இலவச வேட்டிகளை நெய்கின்றபோது அதற்கான வருமானத்தை, கூலியை 50% உயர்த்திக் கொடுத்தால்கூட போதுமானது. அதனால் அரசுக்கு எந்தவிதத்திலும் நஷ்டம் ஏற்படப் போவதில்லை. லாபமாகத்தான் அமையும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுபோல இன்றைக்கு நபார்டு வங்கிமூலம் அனுமதிபெற்று காசுக்கடன் தடையின்றி வங்கிகளுக்குக் கிடைக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும். சர்க்கரை ஆலைகளுக்கு எப்படி சில நிபந்தனைகளுக்குட்பட்ட அடிப்படையில் நபார்டு வங்கி blocked account என்ற தலைப்பின்கீழ் செயல்பட்டு வருகிறதோ அதேபோன்று இந்த நெசவாளர்களுக்கும் நீங்கள் NABARD வங்கியோடு பேசி அதற்கு ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாகப் பார்க்கிறோம், தமிழகத்தில் நொடிந்து இருக்கின்ற, மூடிக்கிடக்கிற கூட்டுறவு நூற்பாலைகளை இயக்க, நபார்டு வங்கியிடமிருந்து 158 கோடி ரூபாய் பெற்று மறுவாழ்வு அளிக்க திட்டங்களைத் தீட்டுகிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் இன்னும் அந்தத் தொழிற்கூடங்கள், அந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்ற சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது.

அரியூர் கூட்டுறவு நூற்பாலை ஏறத்தாழ 1½ ஆண்டுகாலமாக மூடிக்கிடக்கிறது. பல போராட்டங்களைத் தொழிலாளர்கள் அங்கே நிறைவேற்றியும்கூட, அரசு இதுவரை 'நாங்கள் திறப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்' 'முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்' என்று தான் கடந்த 3 ஆண்டுகளாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்ன தடை இருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை. இன்னும் அந்த 158 கோடி ரூபாயை NABARD வங்கிமூலமாகப் பெற்று, நாங்கள் அந்த 18 நூற்பாலைகளை இலாபத்தில் ஓட்டுவதற்கு முயற்சி



செய்து கொண்டிருக்கிறோம், இந்த ஆண்டு செய்வோம் என்று ஒவ்வொரு ஆண்டினுடைய வரவு செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்கின்றபோதும் அதிலே தவறாமல் வருகின்ற வரிகளாக, சொற்றொடர்களாக இந்த வரிகள் இருக்கின்றன. ஆனால், நெசவாளர்களுடைய வாழ்விலே மட்டும் ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நூற்பாலைகளைத் திறப்பது தாமதப்பட்டு வருகிறது என்ற செய்தியும் தொடர்ந்து பல நேரங்களில் தெரிவிக்கப்பட்டும் இன்று வரை நூற்பாலைகள் திறக்கப்படுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்றும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நான் முதலிலேயே சொல்வது இந்த அவைக்கும் மற்றவர்களுக்கும் பேசுவதற்குச் சற்றுச் சுலபமாக இருக்கும் என்ற அடிப்படையில் தெரிவித்துக்கொள்கிறேன். முதற்கட்டமாக நம்முடைய நூற்பாலைகளில் 8%-லிருந்து 10% அளவிலே இருக்க வேண்டிய ஊதியம் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு மேல் இருப்பதுதான் நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மிகப் பெரிய சங்கடத்தை, நஷ்டத்தை ஏற்படுத்தியது. இன்று முதற்கட்டமாக, அரியூர் ஆலையைப் பற்றிச் சொன்னார்கள். அரியூர் ஆலையிலே 50,000 Spindles-க்காகத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு, அங்கே 25,000 Spindles-தான் இயங்கி வந்தன. இன்று அரியூர் நூற்பாலையில் 705 பேர் உள்ள அந்த ஆலையில் 268 பேருக்கு voluntary retirement scheme என்ற அடிப்படையில் தொகை அளிக்கப்பட்டு, அவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எங்களுடைய நோக்கம் முறையாக இந்த ஆலையை இயக்க வேண்டும் என்பது. அதற்கான அடிப்படை வேலைதான் இந்த voluntary retirement scheme. அரியூர் நூற்பாலையில் 268 பேருக்கு முறையாகத் தொகை அளிக்கப்பட்டு voluntary retirement scheme-லே வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். அதுபோல எந்தெந்த ஆலைகள் திறக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை இருக்கிறது என்பதை ஒத்துப் பார்க்கின்றபோது ஒட்டுமொத்தமாக 1042 பேருக்கு, இந்த நூற்பாலைகள் திறக்கப்படும் என்ற முடிவை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பின்பு, இன்றைக்கு voluntary retirement scheme-லே வெளியே அனுப்பக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

முற்பகல் 11-00

அதுமட்டுமல்ல, கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 61-லே பார்த்தால் சட்டபூர்வமான நிலுவைக்காக, காலக்கடனுக்காக, நிலுவைக் காசுக் கடனுக்காக மற்றும் வழிவகைக் கடனுக்காக, மற்றும் பல கடன்களை அடைக்க 138 கோடியே 42 இலட்சம் ரூபாய் இன்று அளிக்கப்படுகிறது. ஆகவே, நூற்பாலைகளைத் திறப்பதில் இந்த அரசு மிக உன்னிப்பாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கொடுத்திருக்கின்ற விளக்கத்திலேகூட இன்னும் எங்களுக்குத் தெளிவு பிறக்கவில்லை. கடந்த ஆண்டு பட்ஜெட்டின்போது நாங்கள் இந்தக் கருத்தைச் சொல்லிக் கேட்டுக்கொண்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து ஜூன் 31 ஆம் தேதி இந்த ஆலை திறக்கப்படும் என்று சொன்னார்கள். ஜூனில் 31 ஆம் தேதி கிடையாது. (குறுக்கீடு) ஆனால் 31 ஆம் தேதி என்று சொல்லி உடனடியாகத் திறப்போம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லி ஓராண்டு காலம் உருண்டோடிவிட்டது. ஆனால் இன்னும்கூட திறக்கப்படவில்லை. ஏற்கெனவே இதற்காக 185 கோடி ரூபாய் போன பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டது. இப்போதும் ஒதுக்கப்பட்டு, இந்தத் துறை நபார்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலேயே ஓராண்டு காலம் உருண்டோடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், ஆலையை எப்போது திறப்பீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாத விஷயம் இதில் ஒன்றுமில்லை. நிச்சயம் அந்த ஆலை திறக்கப்படும் என்பதில் உங்களுக்கும் நம்பிக்கை உண்டு; எனக்கும் நம்பிக்கை உண்டு. கடந்த ஆண்டு எடுக்கப்படும் என்று சொன்ன நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்வது எந்தவிதத்திலும் சரியல்ல. அதற்குப் பின்பு எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இந்த 185 கோடி ரூபாய் Revival Package Programme. நிச்சயமாக அந்தப் பணிகளை முடிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கி வருகிறோம் என்பதை இதைவிடத் தெளிவாக எப்படித் தெரிவிக்க முடியும்?



**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதுபோல மானாமதுரை முத்தனேந்தல் சோமசுந்தரம் பஞ்சாலை தொழிலாளர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தத் தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்திய பிறகு இன்றைக்கு மீண்டும் தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னபோது, நீதிமன்றத்திலே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரசே ஏற்று நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தினுடைய ஆணை வந்த பிறகும், இன்றும் அந்த ஆலை மூடிக் கிடக்கிறது. ஏன் இதுபோன்ற அரசு நடத்துகின்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் எல்லாம் மூடப்படுகின்ற சூழ்நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்றன என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும். எந்தக் காலகட்டத்திலே கேள்வி கேட்கின்றபோதும், வினா தொடுக்கின்றபோதும் நாங்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், என்றைக்கு அந்த முயற்சி வெற்றி அடையும் என்பதை இந்த அரசு தெள்ளத் தெளிவாக சட்டமன்றத்திலே, இந்த அவையிலே விளக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற கதிர்களின் எண்ணிக்கையிலே 67 சதவீதம் தமிழகத்திலேதான் இருக்கின்றன. இன்றைக்கு மத்திய அரசுகூட ஜவுளி மறுவாழ்விற்காக ஒரு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. 25 ஆயிரம் கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். என்னுடைய அன்பான வேண்டுதல் எல்லாம் இந்த 25 ஆயிரம் கோடி ரூபாயில்--67% ஸ்பின்டில்கள் தமிழகத்திலேதான் இருக்கின்றன. எனவே அதற்கான உரிய சதவீதத்திலே-- தமிழகத்தினுடைய தொழில் நிறுவனங்கள் மறுவாழ்வு பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். தமிழகத்து முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். பண்டாரம் பரதேசிகள் எல்லாம் தமிழகத்திலே நுழைவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன் என்று ஒரு காலகட்டத்திலே சொல்லியிருக்கிறார். இன்றைக்கு அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தக் கொள்கையிலே என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், வடக்கு... (மணியடிக்கப்பெற்றது). சப்ஜெக்டை முடித்துவிடுகிறேன். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பது இன்றைக்குத்தான் நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது. இதிலே நாம் கவனம் செலுத்தவேண்டியது என்னவென்று சொன்னால், 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மறுவாழ்விற்காக

அவர்கள் திட்டத்தைத் தருகிறபோது ஒன்றைச் சொல்கிறார்கள். புதிய இயந்திரங்களை வாங்குவதற்கு மட்டும்தான் இந்த மறுவாழ்வுக்கு அவர்கள் ஒதுக்குகின்ற subsidy கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்று சொன்னால், வடமாநிலங்களில் இருக்கின்ற மிகப் பெரிய தொழிலதிபர்கள் மட்டும்தான் அந்த subsidy-யைப் பெறுகின்ற வாய்ப்பு இருக்குமே தவிர, தமிழகத்தைப் போன்ற மத்திய நிலையிலே இருக்கின்றவர்கள், கீழ் நிலையிலே இருக்கின்ற தொழிலதிபர்கள், அவர்கள் இரண்டாம் தர இயந்திரங்களை வாங்கித்தான் தொழில்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களோடு போட்டிப்போட்டு தொழிலை நடத்த முடிகிறது. எனவே இந்த 25 ஆயிரம் கோடி ரூபாயையும் (மணியடிக்கப்பெற்றது). ஒரு நிமிடம் பேசி முடித்துவிடுகிறேன். 10 நிமிடங்கள் அமைச்சர் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** குறுக்கீட்டையும் சேர்த்து, நேரம் அதிகமாகிவிட்டது.

முற்பகல் 11-05

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இந்த 25 ஆயிரம் கோடி ரூபாயில் 67 சதவீதம் தமிழகத்திற்கு வந்து சேருகின்ற பொறுப்பினை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லை என்று சொன்னால், பண்டாரங்களிடமும் பரதேசிகளிடமும் இந்த அரசு ஏமாந்துவிட்டதாக ஆகிவிடும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய Technology upgradation fund 25 ஆயிரம் கோடி ரூபாய் நிச்சயம் கிடைக்கும். நாளை நிச்சயமாக பட்ஜெட் நிறைவேறும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது; நிச்சயம் 25 ஆயிரம் கோடி ரூபாயில் ஒதுக்கப்பட்டு இருக்கின்ற தொகை 3 ஆயிரம் கோடி ரூபாய், குறிப்பாக, தமிழகத்தில் இருக்கின்ற நூற்பாலைகளுக்கு இல்லை என்ற பிரச்சினை ஆரம்பத்திலே இருந்தது. முதல்வர் அவர்கள் நேரடியாகப் பிரதமரை சந்தித்துப் பேசி, நானும் அது சம்பந்தமாக டில்லிக்குச் சென்று பேசிய பின்பு தெளிவாக இந்த விளக்கப் புத்தகத்திலே, இன்று காலையிலேதான் தகவல் கிடைத்தது, அதிலே Spinning Mill ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்னும்



பல, நாம் எதை எதை வைத்து இருக்கிறோமோ அத்தனையும் அதிலே அடக்கப்பட்டு, இந்த Technology Upgradation Fund-ஐ நாம் முழுமையாகப் பெறக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதை, அதுவும் கலைஞர் அவர்களுடைய முழு முயற்சியால், தொடர்ந்து கொடுத்த அழுத்தத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** ஒரே ஒரு .நிமிடத்தில் உறுப்பினர் தன்னுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இப்போது நூல்களினுடைய கட்டுப்பாடு காரணமாக, மிக அதிகமான ஸ்பின்னிங் மில்ஸ் எல்லாம் மூடப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றன. அதன் காரணமாக இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இப்போது நடுவீதியிலே நின்று கொண்டு இருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழகத்தின் பருத்தி உற்பத்தி, நமது தேவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது 20 சதவீதம்தான் இருக்கிறது. மீதத்தை இறக்குமதி செய்துதான் நம்முடைய தேவைகளை நிவர்த்தி செய்கின்ற இடத்திலே நாம் இருக்கின்றோம். எனவே, மத்திய அரசாங்கம், இப்போது Cotton technology mission என்று ஒன்றை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). அதன் மூலமாகப் பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த திட்டம் போட்டுச் செயல்படுத்துகிறார்கள். அதையும் நாம் தமிழகத்தில் அறிமுகப்படுத்த வேண்டும். இந்தக் கரும்பு உற்பத்தியிலே எப்படி நாம் கவனம் செலுத்துகிறோமோ, அதேபோன்று காட்டன் உற்பத்தியிலேயும் நாம் விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்டுவோம் என்று சொன்னால்--கடல் ஓரங்களிலே கரும்பு உற்பத்தியிலே அதனுடைய yield எல்லாம் குறைந்து வருகின்ற சூழ்நிலையில், மாற்றாக-- நாம் பருத்தி உற்பத்தியிலே கவனம் செலுத்துவோம் என்று சொன்னால், ஒரு பக்கம் விவசாயிகளுக்கு வாழ்வு கொடுத்ததாகவும், இன்னொரு பக்கம் இங்கே இருக்கின்ற நூற்பாலைகளுக்கு மறுவாழ்வு கொடுத்ததாகவும் ஆக்க முடியும். எனவே, விஞ்ஞானபூர்வமாக நாம் சிந்தித்து, இந்தப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வைக் கண்டு இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு மறுவாழ்வினைத் தருகிற முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன். (குறுக்கீடு)

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரே ஒரு நிமிடம் மட்டும் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** அதிக நேரம் பேசிவிட்டீர்கள், போதும். திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

***திரு கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கைத்தறித் துறையின் மானியத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 196,88,19,000 ரூபாய் ஒதுக்கிக் கொடுத்தமைக்காக நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களைப் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறன் உடையவன் என்ற திருவள்ளுவருடைய கருத்துக்கு ஏற்ப மாண்புமிகு நமது முதல்வர் அவர்கள் 1999-2000 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுக் கணக்கினை இங்கே சமர்ப்பித்து இருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறித் துறைக்கு இன்னல்கள் ஏற்படுகின்ற போதெல்லாம் நமது முதல்வர் அவர்கள் அதைக் கைதூக்கி, நெசவாளர்களைத் தூக்கிவிடுகிறார்கள். 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே கைத்தறி நெசவாளர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள்; அதனால் கைத்தறித் தொழில் எவ்வளவு இழி நிலை அடைந்தது என்பதையெல்லாம் நாடு அறியும். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற ஜவுளிகளை Co-optex கொள்முதல் செய்யாமல், அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் கைத்தறி ஜவுளிகளை கொள்முதல் செய்து கொள்ளை அடித்த ஆட்சியினர் தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினர். ஆகவே, அந்த கைத்தறித் துணிகள், கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தியான ஜவுளிகள் தேக்கம் ஏற்பட்டது மட்டுமல்லாமல், Co-optex-லே கொள்முதல் செய்த கைத்தறி ஜவுளிகள் அனைத்தும் விற்பனை ஆகாமல், கைத்தறி துணிகள் தேக்கம் ஏற்பட்டது. 1996-ல் மீண்டும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், இந்த கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்குவது எப்படி?



கைத்தறி நெசவாளர்களின் வாழ்விலே வாழ்வா, சாவா என்று இருக்கிற நிலையைப் போக்க வேண்டுமென்று எடுத்த முடிவின் காரணமாக, ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சென்று, ஆய்ந்து ஒரு நல்ல அறிக்கையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, குழு தமிழகத்திலே உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்ககளுக்குச் சென்று ஆய்ந்து, அறிக்கையைக் கொடுத்தவுடன், சென்ற நிதிநிலை அறிக்கையின்போது சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் முதல்வர் அவர்கள், அந்தக் குழு பரிந்துரைத்த 26 கோரிக்கைகளில் 24 கோரிக்கைகளை நிறைவேற்றி இருக்கிறார்கள். அவற்றில் ஒருசில, முக்கியமானவற்றைப் பற்றி எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தள்ளுபடி மானியம் நிலுவையிலே நின்றிருந்த ரூ. 43.25 கோடியை உடனே வழங்கும்படி முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அது மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியுள்ள ஜவுளிகளை Co-optex மூலமாக உடனடியாக 50 கோடி ரூபாய்க்கும் மேலான ஜவுளிகளைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளுபடி மானியத்தை அரசு 3 மாத காலத்திற்கு மேலாக வைத்திருக்காமல் உடனே வழங்க வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுக்க வேண்டி, 1998-99 ஆம் ஆண்டிலே இலவச வேட்டி, சேலை தயாரிக்கின்ற பணியைக் கைத்தறித் துறைக்கே ஒதுக்கிக் கொடுத்து, அதன்மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுக்கின்ற அந்த நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். கைத்தறித் துறை அமைச்சருடைய சீரிய முயற்சியின் காரணமாக 1998 ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் தயாரித்த இலவச வேட்டி, சேலைகள், நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டு, அவை அனைத்தும் ஏழையெளியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறபோது, பொது மக்கள் அனைவரும் இந்த வேட்டி, சேலைகள் நமக்கும் கொடுக்கமாட்டார்களா என்று எண்ணுகின்ற அளவிற்கு

இப்போது கைத்தறி வேட்டி, சேலைகள் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு, கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படுமென்று 1998–99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். 60 வயது நிரம்பிய கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் ரூபாய் 150 கொடுக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதைக் கைத்தறி நெசவாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. ஏனென்று கேட்டால் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இருந்தால்தான் ஓய்வூதியம் கொடுக்கப்படும் என்று கூட்டுறவுச் சங்கங்களிலே கூறப்படுகிற காரணத்தினாலே 60 வயது நிரம்பியவர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிடைக்கவில்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது இப்போது இருக்கின்ற 60 வயது நிரம்பிய எல்லா நெசவாளர்களுக்கும் இந்த ஓய்வூதியமான 150 ரூபாயை வழங்கி, இனி வருங்காலங்களில் நெசவாளர்களுக்குச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலே உறுப்பினராக இருந்தால்தான் ஓய்வூதியம் கொடுக்கப்படும் என்கிற வகையில் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>காப்பீட்டுத் தொகை.</u> கைத்தறி நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகை ரூ. 25,000 என்று இருந்தது 1998–99 ஆம் ஆண்டு ரூ. 35,000 ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டது. இப்போது 35,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாயாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்திக் கொடுத்திருப்பதற்காக, அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>ஜவுளித் கொள்கை.</u> தமிழகத்திலே கைத்தறி, விசைத்தறி, பின்னலாடை, நூற்பாலை என்று 4 பெரும் பிரிவுகளாக உள்ளன. அதோடு இணைந்து பதப்படுத்துதல் (பிராசசிங் செய்தல்), ஆயத்த ஆடை தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி போன்ற தொழில்கள் நடைபெறுகின்ற காரணத்தால், இந்த ஜவுளித் துறையில் ஏறத்தாழ 1 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுகிறார்கள். முன்னேறி வரும் நாடுகளுக்கு, ஏற்றுமதித் தொழிலைச் செய்கின்ற இந்த நேரத்திலே இந்த ஜவுளித் தொழிலை நவீனப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதை நவீனப்படுத்துகின்ற வகையில்



புதிய ஜவுளிக் கொள்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்றும் நான் எதிர்பார்க்கிறேன்.

விசைத்தறிக்கு ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். விசைத்தறி என்பது தமிழ்நாட்டில் குடிசைத் தொழிலாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 20 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், சுயவேலைவாய்ப்பின் கீழே, இங்கே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே விசைத்தறிக்கென தனி வாரியம் அமைக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11–15

அதுமட்டுமின்றி, சேலத்திலே ஏற்றுமதி ஜவுளிகள் அதிகமாக உற்பத்தியாவதால் ஆயத்த ஆடை பயிற்சிக் கல்லூரி ஒன்றை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வளர்ந்து வருகிற நாகரிக உலகத்திற்கேற்ப அந்த ஆயத்த ஆடை பயிற்சிக் கல்லூரியை சேலத்திலே அமைத்துக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாயம் தோய்த்தல் விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழில்களுக்கெல்லாம் சாயம் தோய்த்தல் மிக முக்கியமானது. பட்டுப் பாவாக இருந்தாலும், ஊடு நூலாக இருந்தாலும் சாயம் தோய்க்க வேண்டும். அந்த சாயம் தோய்த்தல் தொழில் சேலத்தைப் பொறுத்தவரையில் ஒரு குடிசைத் தொழிலாக இருக்கிறது. . அந்தக் குடிசைத் தொழிலாக இயங்கும் சாயப் பட்டறைகள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் மூடப்படுகின்றன. மின்சார இணைப்புகள் துண்டிக்கப்படுகின்றன. ஆனால் சேலத்தைப் பொறுத்தவரையில் மாசுக் கட்டுப்பாடு தேவையில்லை. ஏனென்றால், சேலத்தின் மத்தியிலே ஓடுகின்ற திருமணிமுத்தாறு ஒரு ஜீவ நதியல்ல. அது சேலம் மாநகரத்தின் சாக்கடை தண்ணீர் செல்கின்ற ஒரு நதியாக இருக்கின்ற காரணத்தால், சாயத் தொழில் கழிவுநீர் அனைத்தும் அந்தச் சாக்கடை நீரோடு செல்கின்ற காரணத்தால், எப்படி சென்னை மாநகரில் சாக்கடை நீரைச் சுத்திகரிப்புச் செய்கிறோமோ அதைப்போல சேலத்திலும் சாக்கடை நீரைச் சுத்திகரிப்புச் செய்தால் அது விவசாயத்திற்குப் பயன்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாணவர்களுக்கு உதவித் தொகை.</u> சேலத்தில் இருக்கின்ற இந்திய கைத்தறித் தொழில்நுட்பக் கழகத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு

உதவித் தொகை (Stipend) மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த மாநில அரசு உதவித் தொகை 200 ரூபாய் கொடுக்கின்றது. பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு புதுவை அரசு உதவித் தொகை 300 ரூபாய் கொடுக்கிறது. மகாராஷ்டிரா, கோவா போன்ற மாநிலங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த மாநில அரசுகள் 500 ரூபாய் கொடுக்கின்றன. நமது தமிழ்நாட்டில் இருக்கிற மாணவர்களுக்கு மிகக் குறைவாக ரூ. 40 மட்டும் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது). இங்கே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடத்திற்கு 18 பேர்தான். ஆகவே அந்தத் தொகையை ரூபாய் 400-ஆக உயர்த்திக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதுமட்டுமல்ல, போக்குவரத்துத் துறையிலே ஒரு மருத்துவக் கல்லூரி உள்ளது போல கூட்டுறவுத் துறையிலே மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அது தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே கைத்தறி நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும், அனைத்து கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகின்றவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கும் அதிலே முன்னுரிமை கொடுத்து அந்த மருத்துவக் கல்லூரியிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது முதல்வர் அவர்கள் கூட்டுறவுத் துறையானாலும் சரி, ஏனைய துறைகளானாலும் சரி, அனைத்துத் துறை அமைச்சர்களையும் அழைத்துப் பேசி, ஆலோசனை கூறி வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). இந்தியாவிலேயே தமிழகம் முதன்மையாக விளங்கவேண்டுமென்று பாடுபடுகின்ற நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே நாங்கள் எல்லாம் பணியாற்றுகிறோம் என்ற பெருமையோடு எனது உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் குறித்த மானியக்



கோரிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கடுமையான தொழில் நெருக்கடியில் உலக அளவில் தாக்குதலுக்கு ஆளான ஒரு துறையாக இந்த கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை இருந்தது. நெருக்கடி ஏற்பட்டு இருந்த காலகட்டத்தில் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டது. அதன் பிறகு, இந்தத் தொழிலை நெருக்கடியிலிருந்து மீட்டு எடுக்கவும், இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து வருகிற, வேளாண் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிகப்படியானோர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிற நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்கிடவும் இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதை நான் நினைவிலே வைத்திருக்கிறேன்.

கைத்தறித் தொழிலில் இருக்கிற பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, அதன் 24 பரிந்துரைகளையும் அரசு முழுமையாக ஏற்றுக்கொண்டது. இவை தொடர்பாக பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்ததைப் பற்றி நான் இந்த நேரத்திலே நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1975-76 ஆம் ஆண்டிலேயே சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கி செயல்படுத்தி வந்தாலும், அந்தத் திட்டத்தின் மூலமாக இதுவரையிலே 3,44,000 நெசவாளர்களில் 91,684 நெசவாளர்கள் மட்டுமே உறுப்பினர்களாகப் பதிவாகி இருக்கிறார்கள் என்பது நாம் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டிய நிகழ்வாக இருக்கிறது. அதுபோல குடும்ப ஓய்வூதியத் திட்டத்திலேகூட, 3 இலட்சத்து 44 ஆயிரம் நெசவாளர்கள் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களிலே அமலாகின்ற இந்தத் திட்டத்திலே இதுவரையிலும் 31,190 உறுப்பினர்கள்தான் பதிவாகியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளிலே நாம் எடுத்த நடவடிக்கையை ஒட்டித்தான் இந்த உறுப்பினர்களுடைய சேர்க்கையும் இருக்குமே ஒழிய, முழுமையாக நீங்கள் இதில் எதிர்பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முழுமையாக எதிர்பார்க்கவில்லை. 3½ இலட்சம் நெசவாளர்கள் இருக்கின்ற இடத்திலே 31,190 உறுப்பினர்கள் மட்டும் இருக்கிறார்கள் என்பதிலிருந்து நாம் இன்னும் இதிலே கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர வேறு நோக்கத்தில் அல்ல.

அதேபோல, நெசவாளர் மரணம் அடைந்தால் 15 ஆயிரம் என்ற இழப்பீட்டுத் தொகையை 40 ஆயிரம் ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருப்பது எல்லாம் பாராட்டுவதற்கும், வரவேற்பதற்கும் உரியதாகும்.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கென ஒரு புனரமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டதும் வரவேற்பதற்குரியதாகும். தேங்கிய துணிகளை விற்பதற்கு சிறப்புச் சலுகைகளை வழங்கியதும் மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனாலும் கூட இவ்வளவு நல்ல நடவடிக்கைகளை, தொடர்ந்து எடுத்திருக்கின்ற இந்த நிலையிலே நேற்றையதினம் நெசவாளர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே ஆர்ப்பாட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றையதினம் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலே கைத்தறி நெசவாளர்கள் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இவ்வளவு நல்ல நடவடிக்கைகளை எடுத்ததற்குப் பிறகும், அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டதற்குப் பிறகும், அவர்கள் ஏன் போராட்டத்திலே ஈடுபடுகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும், ஆய்வு செய்ய வேண்டும். நான் ஒரு விவரத்தை அமைச்சரிடத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விற்பனை மானியம் என்பது கைத்தறித் துறைக்கு உதவக்கூடிய செயல்களிலே மிகவும் முக்கியமான ஒன்று. 1996-97-ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட வகையிலே தள்ளுபடியை நான் குறிப்பிடுகிறேன். ரிபேட் என்ற அடிப்படையிலே 1996-97-ஆம் ஆண்டிலே நிராகரிக்கப்பட்ட மானியம் ஒன்று நிலுவையாக நின்று கொண்டிருக்கிறது. அதன் காரணமாக நடைமுறை மூலதனத்தை இழந்து பல்வேறு பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து செயல்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இந்தப் பேரவையிலும் ஏற்கெனவே கூறியிருக்கின்றேன். மாநில கைத்தறி ஆலோசனைக்



குழுவிலும் கூறியிருக்கிறேன். இப்போதும் வலியுறுத்த விரும்புகிறேன். அந்த நிலைமையை மாற்றாமல் அதிலே ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைத் தீர்க்க முடியாது. அந்த நிலைமைக்கே காரணம் கடந்த கால ஆட்சியில் போடப்பட்ட முன்னுக்குப் பின் முரணான உத்தரவுகள்தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த உத்தரவுகளை முறைப்படுத்தி, நிராகரிக்கப்பட்ட மானியத்தை வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி, நிச்சயமாகத் தீர்வு காணவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, இந்த அரசு வந்ததற்குப் பிறகு அயல்பணியிடங்கள் என்ற அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றி வந்த துறை அலுவலர்களை மாற்றிக் கொண்டதற்காக நான் பாராட்டுகிறேன். இதில் 40 இலட்சம் ஒரு ஆண்டுக்கு விற்று வரவு என்று இருப்பதை இரண்டு கோடி அளவில் விற்று வரவு இருக்கிற சங்கங்களுக்கெல்லாம் அயல்பணி இடங்களில் இருந்து துறை அலுவலர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். நான் இந்த இடத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உற்பத்தியிலேயும், விற்பனையிலேயும் நேரடியாகச் சம்பந்தப்படாத துறை அலுவலர்கள் பிரதம சங்கங்களிலே இருப்பதனால் பெரிய அளவில் பலன் ஏதும் இல்லை என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று. சென்னிமலையிலே ‘சென்கோப்டெக்ஸ்’ என்ற ஒரு தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அந்தத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கத்திலே பணியாற்றிய ஒரு பணியாளர் ஒரு தவறு காரணமாக பணி நீக்கம் செய்யப்படுகிறார். அப்படிப் பணி நீக்கம் செய்யப்பட்ட அவரைப் பணி நீக்கம் செய்தது சரியல்ல என்று தொழிலாளர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. ஏறத்தாழ 18 ஆண்டு காலமாக-சென்னை உயர்நீதிமன்றம் வரையில் தொழிலாளர் தரப்பில் நியாயம் எடுத்துச் சொல்லப்பட்டு உயர்நீதிமன்றம் நியாயத்தை ஏற்றுக்கொண்டு விட்டது. அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே செயல்படுகிற செயலாளர் அதற்குத் தீர்வு காண்பதற்கு எந்தவிதமான முன்முயற்சியும் எடுக்கவில்லை. தற்போது கைத்தறித் துறையினுடைய தலைமையரை அணுகி இதுகுறித்து உதவி கோரப்பட்ட நேரத்திலே, அவர் கொடுத்த வழிகாட்டுதலைக்கூட அந்தச் செயலாளர் அமல்படுத்தவில்லை. இப்படி அந்தத் துறை அலுவலர் அங்கே இருப்பது பிரதம சங்கங்களுக்கு எந்த வகையிலும் உதவி செய்வதாக இல்லை. ஆகவேதான் பெருமளவுக்கு அதனுடைய

நிதிச்சுமையைக் குறைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளி பிரச்சினைக்கு ஆரம்பத்திலேயே தீர்வு காணப்பட்டிருந்தால் இரண்டு இலட்ச ரூபாய் அளவிலேயே தீர்வு ஏற்படுத்தியிருக்க முடியும். இன்றைக்கு அந்தப் பிரதம சங்கம் 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஈட்டுத் தொகையாகக் கொடுக்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

அதேபோல, கூட்டுறவு நூற்பாலைகள் பிரதம சங்கங்களுக்கு நூல் வழங்கவும், எளிய முறையில், மலிவான விலையில் நூல் வழங்கவும் ஏற்படுத்தப்பட்டன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே தொடர்ந்து இடர்ப்பாடுகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. அதற்காக மாநில அளவிலும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட அதில் இருந்த இடர்ப்பாடுகள் முழுமையாக நீக்கப்படவில்லை. ஒன்றை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். டான்ஸ்பின் என்கின்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பஞ்சு வழங்குவதற்கான நிறுவனமாக அது செயல்பட்டு வருகிறது. அதனுடைய செயல்பாடுகளைப் பற்றி பார்க்கிறபோது 10 சதவிகிதம் அளவில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பருத்தி வழங்கியதிலேயே 11 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது என்றால், அதனுடைய செயல்பாடு 90 சதவிகிதம் என்ற அளவிற்கு வருமானால் எந்த அளவிற்கு இலாபம் ஈட்டமுடியும் என்று நாம் கவனிக்க வேண்டும். அந்த அளவிற்கு மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு துறை கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, கூட்டுறவு நூற்பாலைகள் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். நான் அந்தக் கோணத்திலே அதுபற்றி ஆய்வு செய்யவில்லை. கூட்டுறவு நூற்பாலைகளை இலாபகரமாக இயக்குவது குறித்து, இட்காட் குழுவும் இராகவன் குழுவும் பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, துறையின் செயலாளர் தலைமையிலேயே வேறு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, பரிந்துரைகளெல்லாம் பெறப்பட்டு, அதன் அடிப்படையிலேதான் NABARD திட்டத்தின் அடிப்படையிலே



கூட்டுறவு நூற்பாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. நான் இங்கே ஒன்றை அரசின் கவனத்திற்குக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கள் உபரியாக இருக்கிறார்கள், தொழிலாளர்கள் உபரியாக இருக்கிறார்கள் என்று திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படுகிறது. இங்கே அமைச்சர் அவர்கள் ஒன்றிற்கு விளக்கம் கூறுகிறபோதுகூட, ஓர் ஆலையிலே வழங்கப்படுகிற ஊதியம் 8 முதல் 10 சதவிகிதம் வரைதான் இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரிலே, நாசரேத் என்ற இடத்தில் இருக்கிற அந்தக் கூட்டுறவு நூற்பாலை குறித்து ஒரு விவரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நிர்வாகப் பணியாளர் தொகுதியிலே 17 பேர் உபரியாக இருக்கிறார்கள். அந்த 17 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆறு ஆண்டு காலமாகத் தொடர்ந்து எந்த வேலையும் இல்லாமல் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இப்படி நிர்வாகப் பணியாளர் தொகுதியிலே இருக்கிற சீரமைப்பு குறித்து அரசு அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் என்ன கருத்தைச் சொல்கிறார்களோ அதே கருத்தைத்தான் நானும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தொழிலாளர், 'ஒயிட் காலர் ஜாப்' என்று நீங்கள் திருத்திச் சொல்லியிருக்கிறீர்கள். நான் இரண்டையும் ஏற்றுத்தான் ஒட்டுமொத்த விகிதம் அதிகம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகச் சீரமைப்பு செய்யப்படுமானால், இப்போது பணியாற்றக்கூடிய ஒரு தொழிலாளர்கூட வேலையிலிருந்து எடுக்கப்படாமல், அல்லது Voluntary Retirement Scheme-ல் அனுப்பப்படாமல் அவர்களுக்கு முழு அளவில் வேலை கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்கிற கோணத்தையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். அதுபோல நெல்லை மாவட்டத்திலே இருக்கிற தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை புனரமைப்புத் திட்டத்திற்காக 2½ கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது. அந்த 2½ கோடி ரூபாய் மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் போகிறபோது, மத்தியக் கூட்டுறவு

வங்கியிலே 1¼ கோடி ரூபாய் கடன் கொடுக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் கொண்டார்கள். பிறகு, அந்த ஆலையினுடைய மின் கட்டணத்திற்காக ஒரு கோடி ரூபாய் செலவாகி விட்டது. மாதச் சம்பளத்திற்காக மீதியிருக்கிற பணம் செலவாகிவிட்டது. இப்போது நபார்டு திட்டத்திலே ஆலையின் முழுச் சொத்தையும் ஈடு செய்து கடன் பெற்றதற்குப் பிறகு நடைமுறை மூலதனத்திற்கு என்ன செய்வது; இந்தப் புனரமைப்புத் திட்டத்தை எப்படி வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், ஆலையிலே இன்னும் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் கவனத்திற்கு வருகின்றன. அதே தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையிலே கழிவுப் பஞ்சோடு நல்ல பஞ்சு சென்று விடுவதாகவும், அதைத் தொழிலாளர்களே ஒரு கட்டத்தில் பார்த்து பிடித்திருப்பதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கின்றது. அந்தத் தகவல் அமைச்சர் அவர்களுக்கும் கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அதுபோல, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். பஞ்சாலைக்கழகம் தன்னுடைய பணியை இப்போது ஆற்றுகிறதா என்றால், நிச்சயமாக அதற்குத் திருப்திகரமான பதிலைச் சொல்ல முடியாது. பஞ்சாலைக் கழகம் என்பது விரயமாகப் பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிற ஒரு பகுதியாகத்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதிலும் இப்போது முத்தனேந்தல் சோமசுந்தரம் ஸ்பின்னிங் மில் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே சென்னை உயர்நீதிமன்றம் ஜனவரி மாதத்திலேயே தீர்ப்பு அளித்திருக்கிறது, அரசு அந்த ஆலையை ஏற்று நடத்த வேண்டுமென்று. அந்த ஆலையை நாம் எந்த அளவிற்கு ஏற்று நடத்த வேண்டும் என்பதையும் யோசிக்க வேண்டும். ஏற்கெனவே இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி அவர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டபோது, தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, அரசு அதை ஆதரவாகப் பரிசீலிக்கும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டி.என்.டி.சி.ஈ.-யிலே இருக்கிற நூற்பு ஆலைதான் சோமசுந்தரம் நூற்பு ஆலை. அதிலே 1995-96 முதல் 1998-99 வரை, அதேபோல, 1994-95-ம் உள்ளடக்கி, இதுவரை அந்த



ஆலைக்கு வேறு காரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையும் சேர்த்து, 2,49,37,662 ரூபாய். எந்தப் பஞ்சாலை மோசமான நிர்வாகத்திலே இருக்கிறதோ, அதில் பெற்ற இலாபத்தை, இந்த சோமசுந்தரம் நூற்பாலை சாப்பிட்டுவிட்டது. மேலும் இருக்கின்ற தொழிலாளர்களோடு இப்போது பேச்சுவார்த்தை லேபர் யூனியன் மூலமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அவர்கள், அதற்கும் ஓரளவிற்கு ஒத்துக் வந்து இருக்கிறார்கள். அப்படி வருகிறபோது அவர்களுக்கும் உரிய தொகையைக் கொடுத்து, அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை நிச்சயம் தீர்க்கக்கூடிய பணியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

முற்பகல் 11-30

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைந்து அந்தப் பேச்சுவார்த்தையை முடித்து முத்தனேந்தல் சோமசுந்தரம் நூற்பாலையை அரசே ஏற்று நடத்த முன் வரவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து விசைத்தறிக் கூடங்கள் இருக்கின்றன. இந்தத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட விசைத்தறிக் கூடங்கள் தமிழ்நாட்டில் 19 இடங்களில் இருக்கின்றன. பல கூடங்கள் இப்போது மூடிக்கிடக்கின்றன. அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கிறார்கள். அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள், இப்படி வறுமையிலே மிகவும் வதைப்பட்டுக் கொண்டிருக்கிற மிகச் சாதாரண தொழிலாளர் பகுதி மக்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்த அரசு பெருமுயற்சி எடுக்க வேண்டும்.

குறிப்பாக, இலவச வேட்டி-சேலை கைத்தறியிலேதான் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இருந்தாலும் பல நேரங்களிலே விசைத்தறியிலே உற்பத்தி செய்யப்படுகிறது. விசைத்தறியிலே உற்பத்தி செய்யப்படுகின்றபோது தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவை வழங்கப்படுமானால் அதை இலாபகரமாக இயக்குவதற்கான குறிப்புகள் என் கையிலே இருக்கின்றன. எப்படி இலாபகரமாக இயக்கமுடியும் என்ற முறையிலே நான் ஒரு திட்டத்தைக்கூட தயாரித்து

வைத்திருக்கின்றேன். அதை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்க விரும்புகின்றேன். அந்த அடிப்படையிலே இலாபகரமாக இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக ஒன்று. நமது அரசு வந்ததற்குப் பிறகுதான் கைத்தறியைப் பாதுகாப்பதற்காக, ரக ஒதுக்கீடு சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 5 இடங்களில் அமலாக்கப் பிரிவு, செயலாக்கப் பிரிவு தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டதற்குப் பிறகு சென்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது இரண்டு இடங்களிலே குற்றச்சாட்டு கண்டறியப்பட்டதாகக் கூறப்பட்டது. இப்போது 15 இடங்களிலே கண்டறியப்பட்டு முதல் தகவல் அறிக்கைகளும் தாக்கல் செய்திருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். பாராட்டுகிறேன். ஆனாலும்கூட, 3 இலட்சத்து 13 ஆயிரம் விசைத்தறிகள் இருக்கின்ற இடத்தில் 15 பேர்தான் அத்துமீறி இருக்கிறார்கள் என்பது ஒரு நல்ல செய்தியானாலும்கூட இன்றும் கூடுதலாக இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்றுதான் நெசவாளர்கள் தரப்பிலே இருந்து வருகிற முறையீடாக இருக்கிறது. அமலாக்கப் பிரிவை மேலும் வேகமாக, தீவிரமாக அதனுடைய நடவடிக்கைகளை அதிகப்படுத்திச் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்று. தனியார், விசைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு எந்தச் சட்டப் பாதுகாப்பும் இல்லை. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்று அரசு அவ்வப்போது அறிவிக்கிறது. அது எந்த இடத்திலும் அமலாவதில்லை. அதுமட்டுமல்ல, பல்வேறு சமூகக் கொடுமைகளுக்கும் சமூக நிர்பந்தங்களுக்கும் ஆளாகிறார்கள். எனவே, விசைத்தறித் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளையும், விசைத்தறி உரிமையாளர்களாக இருக்கின்றவர்களுடைய பிரச்சினைகளையும் கண்டறியவும் அரசு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து அதனுடைய அறிக்கையைப் பெற்று அதனடிப்படையில் தொழிலாளர்கள், உரிமையாளர்கள் இரு தரப்பினரின் பிரச்சினைகளையும் கண்டறிந்து சுமுகமாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு, மீண்டும் ஒரு முறை தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.



**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கையின் மீது கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சென்னை மாநகர மேயர் தளபதி அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கைத்தறித் துறையில் நம்முடைய கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் நீண்ட பாரம்பரியத் தொழிலாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது. நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்குவதில் விவசாயத் துறைக்கு அடுத்தபடியாக முக்கியமான பொருளாதாரச் செயல்பாடாக நம்முடைய கைத்தறித் துறை விளங்குகிறது. கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தறிக்கூடத்துடன் இணைந்த வீடுகள், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர்கள் வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை கலைஞர் அரசு செயலாற்றி வருகிறது. தமிழகத்தில் கைத்தறித் தொழிலை நம்பி வாழும் ஏழை நெசவாளர்கள் தங்குதடையின்றி வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும், அதன்மூலம் அவர்கள் பொருளாதாரரீதியாக முன்னேற்றம் அடைவதற்கும் கைத்தறித் தொழில் தொய்வடையாமல் இருப்பதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கு ஓர் உயர்மட்டக் குழு அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் செயல்படுத்தி, அதன் வாயிலாக ஏழை நெசவாளர்களின் நல்வாழ்விற்கு வழி கண்ட முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கமாக ஆண்டு முழுவதும் வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அக்டோபர் 1998 முடிய வழங்கப்பட்டது. மேலும் லுங்கி ரகங்களுக்கென்று மார்ச் 1999 முடிய தள்ளுபடி நீட்டிப்புச் செய்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் இறந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கும் காப்பீட்டுத் தொகையை ரூபாய் 40,000 ஆக உயர்த்திக் கொடுத்துள்ளதை நெசவாளர்கள் நன்றியுடன் பாராட்டுகிறார்கள்.

கைத்தறித் தொழில் வேகமாக மாறிவரும் காலச் சூழ்நிலை மாற்றத்தினால் பல்வேறுவிதமான சிக்கல்களில் சிக்கிக்கொள்கிறது. உதாரணமாக, குடியாத்தம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் லுங்கிகள் சிறந்த தரம் மற்றும் நேர்த்தியாக இருப்பதால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. தற்போது ஏற்றுமதி வாய்ப்புகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக குடியாத்தத்தில் உற்பத்தி செய்யப்படும் லுங்கிகள் அதிகமாகத் தேக்கம் அடைந்துள்ளன. இதனால் நெசவாளர்கள் வேலையின்றி வறுமையில் வாடும் நிலை உள்ளது. வறுமையில் வாடும் நெசவாளர்களின்பால் எப்பொழுதும் கருணை காட்டும் தமிழக முதல்வர் அவர்கள் தயவுசெய்து தேங்கியுள்ள விற்பனை ரகங்களுக்கு உடனடியாக வழி கண்டு குடியாத்தம் பகுதி வாழ் நெசவாளர்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமாய் கருணையுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-35*

என்னுடைய தொகுதியில், லுங்கி உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடியாத்தம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மட்டும் உற்பத்தி செய்த சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள லுங்கிகள் தேங்கியுள்ளன. இதைத் தவிர, தனியாரிடத்திலேயும் லுங்கிகள் தேங்கியுள்ளன. இதனால் தனியார் கைத்தறி உற்பத்தியாளர்கள் பெருமளவில் தொழிலை நிறுத்திவிட்டார்கள். இதனால், நெசவாளர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுவாக, தமிழகத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. *1996-97*-இல், *1439* கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. *1997-98*-இல் *1386* ஆகக் குறைந்து, *1998-99*-இல் *1382* ஆகக் குறைந்துள்ளது. இதற்கெல்லாம் காரணம், கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட லுங்கி ரகம், விசைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படுவதுதான். அதிலும் விசைத்தறியாளர்கள், லுங்கி ரகத்தை உற்பத்தி செய்து, கைத்தறியில் செய்ததைப்போல, பசை குத்தி, விற்பனை செய்து வருகிறார்கள். எனவே, விசைத்தறி மூலம் உற்பத்தியாகும் லுங்கி ரகத்திற்குக் கடுமையான தடை விதிக்கும்படி தமிழக முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், உயர் மட்டக் குழு பரிந்துரை செய்த சிட்டா நூலுக்கு *2* சதவிகித வரியைத் தள்ளுபடி செய்யும்படியும் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் நூற்பாலையை உடனே திறக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்கள், செயலாளர்களுக்குண்டான சம்பளத்தை அரசே ஏற்க ஆவன செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நட்டத்திலே இயங்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியின் சார்பில் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக, எங்கள் தொகுதியில் மோர்தானா அணைக்கட்டுத் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. அந்த மோர்தானா அணைக்கட்டுத் திட்டத்திலிருந்து, குடியாத்தம் நகருக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கிக் கொடுக்கும்படி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடியாத்தம் நகருக்கு, புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்கும்படி நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், குடியாத்தம் பகுதியிலிருந்து நகருக்கு வெளியே வரவேண்டுமென்று சொன்னால், சுமார் அரை ஃபர்லாங்கு தூரத்தைக் கடக்க ஒரு மணி நேரம் ஆகிறது. ஆகவே, அந்த புறவழிச் சாலை அவசியமாகத் தேவைப்படுகிறது. அதற்குண்டான விண்ணப்பத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அங்கு புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியிலே குடிசைத் தொழிலாக தீப்பெட்டித் தொழில் விளங்கி வருகிறது. அந்தக் குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தீப்பெட்டித் தொழிலாளர்கள் நலனைக் கருதி, இயந்திரம் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய தீப்பெட்டிகள் வருவதற்குத் தடை செய்ய வேண்டும். காரணம், இயந்திரம் மூலம்

[திரு. வி.ஜி. தனபால்] [*1999 ஏப்ரல் 20*

உற்பத்தி செய்தால், குடியாத்தம் தொகுதியிலுள்ள தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வேலை இழக்கக்கூடிய நிலை உருவாகும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இயந்திரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் அந்தத் தீப்பெட்டித் தொழிலுக்குத் தடை விதித்து, கையால் உற்பத்தி செய்யும் தீப்பெட்டி உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதைத் தவிர, பட்டாசு மற்றும் தீப்பெட்டிக்கு என்று ஒரே அரசாணை உள்ளது. அதைத் தனித்தனி அரசாணையாக அறிவிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குடியாத்தம், தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்கே E.S.I. மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல தரமான பருத்தியைக் கொண்டு, தரமான மென்மையான நூலையெல்லாம் நூற்று, அவற்றை ஒன்றோடொன்று கைத்தறி மூலம் பின்னச் செய்து, தரமான மென்மையான பருத்தித் துணிகள் எல்லாம் நெய்யப்படுகின்றன. அதேபோல், பருத்தி நூலைக் கொண்டு ஜமக்காளம் என்று சொல்லப்படுகின்ற முரட்டுத் துணியும் கைத்தறியினால் நெய்யப்படுகின்றது. நல்ல தரமான பருத்தித் துணிகளைக் கொளுத்துகின்ற கோடை வெயிலிலேயும் சரி, நல்ல குளிர்காலத்திலும் சரி, போர்த்திக்கொள்ளவோ அல்லது இதமாக உடுத்திக் கொள்ளவோ முடியும். ஜமக்காளத்தைக் கொண்டு, அதை விரித்துப் படுத்துக்கொள்ளலாம் அல்லது விரித்து அமர்ந்து கொள்ளலாம். ஆனால், ஜமக்காளத்தைக் கொண்டு போர்த்திக்கொள்ள முடியாது. எந்தச் சூழ்நிலையிலேயும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய தரமான பருத்தி ஆடையைப் போன்று நம்முடைய ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியிலே ஆட்சி செய்கின்ற, அனைவராலும் மதவாதக் கட்சி என்று



*1999 ஏப்ரல் 20*] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

சொல்லப்படுகின்ற பி.ஜே.பி.-க்கு ஆதரவாக, வாக்களிக்காமல் நடுநிலை வகித்திருக்கலாம் என்பது எங்களுடைய கருத்து. ஆனால், கோடை காலத்திலே, 106 டிகிரி வெயில் கொளுத்துகின்ற கோடை காலத்திலே, ஜமக்காளத்தைக் கொண்டு போர்த்திக் கொள்வதைப்போல தேவையில்லாமல் இந்த நேரத்திலே மதவாதம் பரவாயில்லை என்று சொல்லி, பி.ஜே.பி.-க்கு ஆதரவு அளித்ததால், இன்றைக்கு சிறுபான்மை மக்கள் எல்லாம் அலமலந்து நிற்கிறார்கள்.

*பிற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானி ஜமக்காளத்தைப் பற்றி அவர் பேசினால் சிறப்பாக இருக்கும். தேவையற்ற சூழ்நிலையை இங்கே உருவாக்க வேண்டியதில்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** தேவையற்ற சூழ்நிலை என்று சொன்னாலும், இது மக்களுடைய கருத்து என்பதை இங்கே தெளிவுபடுத்துவது அவசியமாக இருக்கிறது.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சி 13 மாதங்கள் ஆண்டிருக்கிறது. எந்த இடத்திலுமே, எந்தச் சந்தர்ப்பத்திலுமே எந்தச் சிறுபான்மை மக்களுக்கும் எந்தக் கேடும் செய்யவில்லை என்பது அனைவரும் அறிந்த விஷயம். எனவே, பாரதிய ஜனதா கட்சி மதவாதக் கட்சி என்று சொல்வது என்பது ஏதோ அரசியல் நோக்கத்திற்காகச் சொல்வதைத் தவிர, உண்மை எதுவுமில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** பாரதிய ஜனதா கட்சி மதவாதக் கட்சியாகச் செயல்படுவதால்தான், மதவாதக் கட்சி என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதனால் உண்மையிலே நாங்கள் எல்லாம் வேதனைப்படுகிறோம். அந்த வகையிலே நிச்சயமாக இதை மறுபரிசீலனை செய்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நல்ல முடிவு எடுக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். சிறுபான்மை மக்கள் எல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளவர்களுக்கு நம்முடைய அரசு ஓய்வூதியம் வழங்கிக்கொண்டிருக்கின்றது. கூட்டுறவுச்

சங்கத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்தான் அந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தனியாக நெசவு செய்கின்ற நலிந்த தொழிலாளர்களுக்கும், அந்தத் திட்டத்தை அரசு விரிவுபடுத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இலவச வேட்டி, சேலைகள் திட்டத்தில் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகு மிகத் தரமான வேட்டி, சேலைகள் எல்லாம் வழங்கப்பட்டு, அதை எல்லோரும் கேட்டு வாங்கி உடுத்திக்கொள்ளக்கூடிய வகையிலே மிக நல்லமுறையிலே இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தில் கைலிகளையும் தயவு செய்து சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, மீண்டும் மீண்டும் இந்த மாமன்றத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சுமார் 9,000 நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களின் முக்கியமான தொழில் கைலி நெசவுதான். அப்படிப் பார்க்கும்போது என்னுடைய தொகுதியில் சுமார் 5 கோடி ரூபாய்க்கு மேலாக கைலிகள் தேங்கிக் கிடக்கின்றன. இப்படி தேங்கிக் கிடக்கின்ற கைலிகளைக் கொண்டு, அவற்றையும் இலவச வேட்டி, சேலைத் திட்டத்திலே சேர்க்கும்போது நிச்சயமாக அந்த நெசவாளர்கள் பயனடைய வாய்ப்பு இருக்கிறது. நெசவுத் தொழிலில் கைத்தறி நெசவுக்கென்று இருக்கக்கூடிய கைலி நெய்வதை விசைத்தறியினரும் நெய்யக்கூடிய இந்த நேரத்திலே நெசவாளர்கள் எல்லாம் தாங்கள் நெய்யக் கூடிய கைலிகளை விற்பனை செய்ய முடியாமல் மிகவும் வேதனைக்குள்ளாகி இருக்கிறார்கள். எனவே, அரசு, இந்த விஷயத்தில் கடுமையாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்து, கைலிகளை விசைத்தறிகளில் நெய்வதைத் தடைசெய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய புவனகிரி தொகுதியிலே கூட்டுறவு நெசவாளர்கள் நெய்வதற்கென்று ஒரு நெசவுக் கூடம் இருக்கின்றது. அந்த நெசவுக் கூடம் இப்போது படுமோசமான நிலையிலே, கீழே விழுந்துவிடக்கூடிய நிலைமையிலே இருந்துகொண்டிருக்கின்றது. அதிலே 10 பேர் மட்டும் அமர்ந்து வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. முன்பு 100 பேர் அமர்ந்து வேலை செய்யக்கூடிய சூழ்நிலையில் இருந்த அந்தக் கைத்தறி நெசவுக் கூடம், இப்போது 10 பேர் மட்டும் உட்கார்ந்து நெய்யக்கூடிய நிலைமையிலே



இருக்கின்றது. எனவே, அந்தக் கைத்தறி நெசவுக் கூடத்தை நம்முடைய அரசு புனரமைப்புச் செய்து அதனை விரிவாக்கி நல்ல முறையில், பயன்படுத்தக்கூடிய வகையில் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் செயலாளர்களுக்கு இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சேர்ந்து சம்பளம் வழங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இது சில இடங்களில் பிரச்சினைகளை உருவாக்கி இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட சில இடங்களில், அந்தச் செயலாளர் எங்களுக்குத் தேவையில்லை, எனவே, அவருக்கு நாங்கள் சம்பளம் கொடுக்க மாட்டோம் என்றெல்லாம் பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, அரசு இதிலே கவனம் செலுத்தி, அந்தச் செயலாளர்களுக்கு அரசே ஊதியம் வழங்க ஆவன செய்ய வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, அந்தச் செயலாளர்களுக்கு அரசே சம்பளம் வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நெய்கின்ற நெசவாளர்களுக்கும் சரி, தனியாக நெசவு செய்கின்ற நெசவாளர்களுக்கும் சரி, இயற்கை இடர்ப்பாடுகளின் போது கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படுகிறது. தனியாக, நெசவு நெய்யக்கூடியவர்கள்கூட மிக ஏழ்மையான நிலையில் உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே, அதனைக் கருத்தில்கொண்டு தனியாக நெசவு நெய்யக்கூடியவர்களுக்கும் அதே போன்ற நிவாரணத் தொகையினை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 தினங்களுக்குள் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் பதிவு செய்வது என்ற முடிவை இந்த அரசு எடுத்துள்ளது. எங்கெங்கு 25 நெசவாளர்கள் சேர்ந்து ஒரு சங்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ, எந்தவிதக் கட்சி பாகுபாடும் இல்லாமல் 15 நாட்களுக்குள் சங்கங்களை உருவாக்கி அவர்களுக்குத் தரக்கூடிய வாய்ப்பை இந்த அரசு ஒரு கொள்கையாக வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இருந்தாலும், ஏற்கெனவே இந்த மாதிரி சூழ்நிலை இருந்திருக்கின்ற காரணத்தினாலே இதைத் தங்களுக்கு

தெரிவித்திருக்கின்றோம். அதனாலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. முகம்மது இஸ்மாயிலினுடைய தொகுதிக்குட்பட்ட திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நூற்பாலை மலைக் கோவிலில் உள்ளது. அந்த நூற்பாலையிலிருந்து Voluntary Retirement வேண்டுமென்று விரும்பக்கூடிய தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு விரைந்து பட்டுவாடா செய்து அவர்கள் விரும்புகிற ஓய்வை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கூட்டுறவு நூற்பாலைகள் நிதி நெருக்கடிக்கு ஆளாகின்றன. அவர்களுக்கு வழங்குகின்ற சம்பளத்தில் இன்றைக்குப் புதியதாக இரண்டு தொழிலாளர்களை நியமித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலிருந்து விருப்ப ஓய்வு பெற விரும்புகின்ற தொழிலாளர்களுக்கு விரைந்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து விருப்ப ஓய்வை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. பா. அருண்குமார்.

**திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்களைக் கூற எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய மேயர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியத் திருநாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கிராமங்களில் வாழும் ஏழை மக்கள் அனைவருக்கும் குறைந்த முதலீட்டில் வேலைவாய்ப்பு அளிக்கின்ற விதத்தில் அமைந்துள்ளதுதான் கைத்தறி மற்றும் விசைத்தறி என்றால் அது மிகையாகாது.

தற்போது இந்தத் தொழிலானது வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் காரணமாகவும், நவீன இயந்திரங்களின் போட்டியினாலும், மூலப் பொருட்களின் விலையேற்றத்தினாலும், விற்பனைச் சந்தையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை மற்றும் முந்தைய ஆட்சியாளருடைய



ஊழல் மற்றும் செயலின்மை காரணமாகக் கடந்த ஆட்சியில் தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி, வருமானம் இல்லாமலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் மூடப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டும், கடந்த ஆட்சியில் எங்கும் ஊழல், எதிலும் ஊழல், இலவச வேட்டி, சேலை வழங்கியதிலும் ஊழல் போன்ற காரணங்களால் இத்துறையே சீர்கெட்டு, அழிந்துவிடும் நிலைமைக்குச் சென்றுவிட்டது.

1996 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மகத்தான திட்டங்களைத் தீட்டியும், செயல்பட்டும், தேவையான நிதி ஒதுக்கீடு செய்தும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தி அதன்மூலமாக நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தியதன் காரணமாகக் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வில் ஒரு வரலாற்றை உருவாக்கியவர் ஆவார்கள். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கைத்தறி நெசவாளர்களுடைய துயரத்தைத் துடைக்க பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கைத்தறித் துணியைத் தோளில் சுமந்துசென்று வீதியில் விற்று நெசவாளர்களுடைய துயர நிலையை நாட்டிற்கு எடுத்துக் காட்டியவர் நம்முடைய முதல்வர் என்றால் அது மிகையாகாது.

1996 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் பொறுப்பு ஏற்ற பிறகு இத்துறைக்கென்று வரலாற்றில் பொறிக்க வேண்டிய சாதனைகள்-- நெசவாளர்களுடைய கூட்டுறவுச் சங்கத்தினுடைய தேர்தலை நடத்தியது. அதேபோல 27 வருட காலமாக நடைபெறாமல் இருந்த Co-optex தேர்தலையும் நடத்தியது. மேலும் விழாக் காலங்களில் வழங்கிய 20 சதவிகித Rebate தொகையை ஆண்டு முழுவதும் வழங்கியதோடு மட்டும் அல்லாமல், விழாக் காலங்களில் 10 சதவிகித கூடுதல் Rebate வழங்கியதும் அதுவும், காலாண்டு இறுதிக்குள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியதும் சாதனையாகும். மேலும் நெசவாளர் இறந்தால், வாரிசுகளுக்கு ரூ. 25,000 உதவித் தொகை என்று இருந்ததை நடப்பு ஆண்டில் ரூ. 40,000 ஆக உயர்த்தியதும் சாதனையாகும்.

மேலும், தறிகளுடன் கூடிய இணைந்த வீட்டு வசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர்கள் நல்வாழ்வு செறிவு ஓய்வூதியத் திட்டம், நெசவாளர்கள் குறை தீர்க்க உயர் மட்டக் குழு அமைத்தது,

உயர் மட்டக் குழு அளித்த 24 பரிந்துரைகளை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்த உத்தரவிட்டது, நூற்பலையைச் சீரமைக்க ரூ. 155 கோடி வழங்கி கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு போனசாக 15 கோடி வழங்கியதும் சாதனைகள் ஆகும்.

முற்பகல் 11-50

மேலும், இந்தத் துறை மெருகேற, நம்முடைய முதல்வர் அவர்கள் 1973 ஆம் ஆண்டு ஏழை நெசவாளர்கள் அனைவருக்கும் மானியம் வழங்கினார். அதேபோல ஒரு குறிப்பிட்ட தொகையை எல்லா நெசவாளர் குடும்பங்களுக்கும் நேரடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், கைத்தறி நெசவாளர்களுக்கு வருடம் முழுவதும் வேலை கிடைக்கும் வகையில் நெசவாளர்கள் சங்கங்களின் நிதிநிலைமையை வளப்படுத்தக் கோரி, காசுக் கடன் மற்றும் பங்குத் தொகையில் அரசினுடைய முதலீட்டை அதிகரிக்க வேண்டுகிறேன்.

மேலும், கிராமப்புற மாணவர்களுக்குத் தொழில் சார்ந்த பட்டப் படிப்பில் 15 சதவீத இட ஒதுக்கீடு செய்து கொடுத்ததைப் போல, கைத்தறி நெசவாளர்களுடைய குழந்தைகளுக்குத் தனி இட ஒதுக்கீடு செய்து கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

மேலும், கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு மற்றும் தறிக்கூடம் கட்டுவதற்காகக் குறைந்த வட்டியில் நீண்டகாலத் தவணையில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் வீடு கட்ட அனைவருக்கும் தொகையை அதிகப்படுத்தி, அனைத்து நெசவாளர்களும் பயன்பெறுகின்ற வகையிலே இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுகிறேன்.

**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்) தலைமை]**

மேலும், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் சிட்டாநூல் சில நேரங்களிலே தரம் இல்லாமல் இருப்பதாகக் கூறுகின்றார்கள். அதைத் தரமான நூலாகவும், தடையில்லாமல் கிடைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.



மேலும், எனது கோவை மாவட்டத்தில் கோரா காட்டன் சேலைகள் மிகுந்த அளவு தேக்கமடைந்திருக்கிறது. காரணம், மற்ற மாநிலங்களில் விற்பனை சற்றுக் குறைந்த காரணத்தால் அதற்குக் கூடுதல் தள்ளுபடி கொடுத்து தற்போதுள்ள தேக்க நிலையைப் போக்க வேண்டுகிறேன்.

மேலும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துச் சேலைகள், வேஷ்டி, துண்டுகள், கோரா காட்டன் முழுவதையும் Co-optex நிறுவனமே கொள்முதல் செய்துகொள்ள ஆவன செய்ய வேண்டுகிறேன். மேலும், Co-optex நிறுவனத்தின் விற்பனை மையங்களை இன்னும் அதிகப்படுத்தியும் தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ காலங்களில் சிறப்பு விற்பனை மையங்களை மேலும் அதிகப்படியாக ஆக்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். தற்போதுள்ள விற்பனை மையங்களையெல்லாம் காலத்திற்கேற்ப நவீன முறையிலே சீர் செய்ய வேண்டுகிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சில பிரச்சினைகளைச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே மூடப்பட்டுள்ள எஸ்.ஆர்.எஸ். என்கின்ற இராமகிருஷ்ணா ஸ்டீல் மற்றும் டான் இன்டியா, ராஜலெட்சுமி மில்ஸ் போன்ற தொழிற்சாலைகளை, நூற்பாலைகளைத் திறப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

மேலும் என்னுடைய தொகுதியிலுள்ள கிழக்குப் பகுதியான இரும்பொறை, சின்ன கல்லுப்பட்டி, இலுப்ப நத்தம், முடுகரை கிராமப் பஞ்சாயத்துக்களுக்குட்பட்ட பகுதிகள் மிகுந்த அளவு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயத் தொழில்கள் கேள்விக்குறியாகிவிட்டன. எனவே, இவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து பாசனம் செய்வதற்குரிய நடவடிக்கையை எடுக்கச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

மேலும், அரசின் பரிசீலனையில் உள்ள அவினாசி குடிநீர்த் திட்டம் மற்றும் குளம் குட்டைகளில் நீர் நிரப்புத் திட்டங்களை, இந்த ஆண்டு நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

மேலும், என்னுடைய மேட்டுப்பாளையம் நகருக்கு ஒரு புறவழிச் சாலையும் அதேபோல தோலாம்பாளையம் to கோபனாரி சாலையையும் முழுவதுமாக அமைத்துத் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களால் நடப்பாண்டில், நடப்புத் தொடரிலேயே அறிவிக்கப்பட்ட பொன்விழா குடிநீர்த் திட்டம், சிறுமுகை, காரமடை ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கும் தேவையான இரண்டாவது குடிநீர்த் திட்டத்தை (மணியடிக்கப்பெற்றது) நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மேலும், நெல்லித் துறை Dam, பவானி ஆற்றின் குறுக்கே இருக்கக்கூடிய சமயபுரம், ஊமப்பாளையம், வெள்ளிப் பாளையம் ஆகிய 4 இடங்களில் தடுப்பு அணை கட்டி நீர் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மேலும், நீலகிரி மலைக்குச் செல்லும்போது வசூல் செய்யப்படக்கூடிய வாகன நுழைவுக் கட்டணத்தை மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவாத்து அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்ட லாரி, டூரிஸ்ட் கார் மற்றும் அனைத்து வாகனங்களுக்கும் இரத்து செய்ய வேண்டுகிறேன். அல்லது முடிந்தால், முற்றிலும் இந்த Tollgate-ஐ நீக்க வேண்டுகிறேன்.

மேட்டுப்பாளையத்திலே செயல்பட்டுவரும் காய்கறி, உருளைக் கிழங்கு மண்டிகளை நகருக்கு வெளியிலே மாற்றுவதற்குரிய நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அத்திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் 2 வருட காலமாகக் கிடப்பிலே இருக்கின்றது. ஆகவே, அதையும் உடனுக்குடன் நிறைவேற்றித்தர வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிஷத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

மேலும், மேட்டுப்பாளையம் நகரத்திலே இயங்கிவரும் முன்சீப் கோர்ட், தீயணைப்பு நிலையம், வணிக வரி அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே நிலம் ஒதுக்கீடு செய்து......(மணியடிக்கப்பெற்றது).



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. பா. அருண்குமார்:** ஒரேயொரு நிமிஷத்தில் பேசி முடித்துவிடுகிறேன். அதற்கு நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, நிர்வாக வசதிக்காக, வாடகை கொடுக்கக்கூடிய, நிதியிழப்பைத் தடுக்கின்ற வகையிலே புதிய கட்டடங்கள் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

மேலும், நீலகிரி மற்றும் மேட்டுப்பாளையம் சுற்று வட்டாரப் பகுதியிலே விளையும் விளை பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ள குளிர்சாதன வசதி கொண்ட கிடங்குகளை அரசு மூலம் கட்டித்தர வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

*முற்பகல் 11-55*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பான மானியக் கோரிக்கையின்மீது பேசுவதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன்; வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன். சாதாரணமாக வாழ்க்கை முறையிலே உணவு, உடை, உறையுள் என்று வரிசைப்படுத்தப்பட்டிக்கின்ற அந்த அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளில் இரண்டாவதாக இருக்கின்ற துணி-உடை-பற்றி இருக்கின்ற இந்தத் துறையிலே என்னுடைய கருத்துக்களை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வைக்க விழைகின்றேன்.

கைத்தறித் துறையிலே இருக்கின்ற தேக்க நிலையை ஆராய்வதற்காக தமிழக அரசு உயர் மட்டக் குழுவினை அமைத்து, அதன் சார்பாக பல நடவடிக்கைகளை எடுத்தது. அதற்குப் பிறகும் பல்வேறு ஆலோசனைகள் வழங்குவதற்காக கைத்தறிக் குழுவை தமிழக அரசு நியமித்திருக்கின்றது. பல்வேறு கோரிக்கைகள் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு வந்தாலும், இந்தத் துறையில் இருக்கின்ற குறைகள் முழுமையாக நீங்கியபாடில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எங்கள் வணக்கத்திற்குரிய தலைவர், மக்கள் தலைவர், ஐயா மூப்பனார் அவர்கள் பிறப்பால் விவசாயியாக

இருந்தாலும் உணர்வால் நெசவாளராக வாழ்பவர்கள். அவர்கள் பிறந்த ஊரான சுந்தரப்பெருமாள்கோவில், நெசவாளப் பெருமக்களை முழுக்க முழுக்கக் கொண்டு விளங்குகின்ற பகுதி என்பதனால் நெசவாளர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் முழுமையாக அறிவார்கள். அவர்களும், அவரைச் சார்ந்த தமிழ் மாநில காங்கிரசும் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகளிலே தன்னுடைய முழுமையான கவனத்தைச் செலுத்தி வருகின்றது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

25 நெசவாளர்களைக் கொண்ட ஒரு சங்கத்தை ஆரம்பிக்க வேண்டுமானால் உடனடியாக ஒரு வார கால அவகாசத்திலே அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டு அங்கு இருக்கின்ற ஏழை நெசவாளர் பெருமக்களுக்குத் துணி வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் அவர்கள் ஓர் அறிக்கை மூலமாகவே நாட்டுக்கு அறிவித்திருந்தார்கள். இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட கோரிக்கைகள் வருகின்ற நேரத்திலே அந்தச் சங்கங்கள் உடனடியாகப் பதிவு செய்யப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன என்று பல்வேறு பகுதிகளிலேயிருந்து செய்திகள் வருகின்றன. குறிப்பாக, கூட்டுறவு வங்கிகளில் concurrence என்று சொல்லப்படுகின்ற இசைவு மிகவும் தாமதப்படுத்தப்பட்டு கிடைக்கின்றது. அந்த இசைவு வந்த பிற்பாடுதான் நாங்கள் பதிவு செய்ய இயலும் என்று சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் தெரிவிக்கின்றார்கள். என்னுடைய தொகுதியாகிய பள்ளிப்பட்டு தொகுதியிலேகூட பல்வேறு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் நிறுவ வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு, இப்போதும் நிலுவையில் இருக்கின்ற செய்தியை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

காசுக் கடன் --cash credit-- கேட்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த concurrence என்று சொல்கின்ற இசைவு வேண்டும் என்பதை வலியுறுத்துவதிலே அர்த்தம் இருக்கின்றது. நாங்கள் கூட்டுறவு வங்கிகளிலே கடன் கேட்க மாட்டோம் என்று எழுதி வாங்கிக் கொண்டும்கூட, அப்படிப்பட்ட நிலைமையிலேகூட பதிவு செய்யப்படாமல் அதிலே இருக்கின்ற Chief Promoter என்று சொல்லப்படுகின்ற முதன்மைக் கூட்டுறவாளர் தக்க நிலையிலே உதவி செய்யவில்லை என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.



பொதுவாக இந்தக் கைத்தறிக்குப் பயன்படுகின்ற சிட்டா நூலைப் பொறுத்தவரையிலே நெடுங்காலமாக ஒரு பெருங்குறை நெசவாளப் பெருமக்கள் மத்தியிலே நிலவி வருகின்றது. அண்டை மாநிலமாக இருக்கின்ற ஆந்திராவிலே, சிட்டா நூலுக்கு வரி விதிக்கப்படுவதில்லை. அதேபோல பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகா போன்ற மாநிலங்களிலே வரி விதிக்கப்படுவதில்லை. நம்முடைய மாநிலத்திலே மாத்திரம் இந்தச் சிட்டா நூலுக்கு, கைத்தறிக்கு மட்டுமே பயன்படுகின்ற 'யாங் யாங்' என்று சொல்லப்படுகின்ற இந்தச் சிட்டா நூலுக்கு 2 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. இதை நீக்க வேண்டும் என்று உயர் மட்டக் குழுவிலும் பரிந்துரைக்கப்பட்டது. அதைக் கருணையுள்ளத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் சிந்தித்து உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படிச் செய்தால், நிச்சயமாகப் பக்கத்து மாநிலமான ஆந்திராவிலே இருக்கின்ற நெசவாளப் பெருமக்களோடு நம்முடைய தமிழ்நாட்டு நெசவாளப் பெருமக்கள் போட்டி போடுகின்ற ஒரு சூழ்நிலை அமைய ஏதுவாக இருக்கும் என்று நான் இங்கே கூற விரும்புகிறேன். பொதுவாக கூட்டுறவு வங்கிகள் இத்தகைய நெசவாளச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டும் என்பதுதான் கூட்டுறவு இயக்கத்தினுடைய தாத்பரியம். ஆனால், காசுக் கடன் என்பது கூட்டுறவு வங்கிகளிலே நெசவாளப் பெருமக்களுக்கு அவ்வளவு எளிதாக வழங்கப்படுவதில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஏதோ முன்னே இருந்தவர்கள் தவறு செய்தார்கள் என்பதற்காக இப்பொழுது பதிவு செய்து கூட்டுறவு இயக்கத்திலே தங்களை இணைத்துக் கொள்கின்ற நெசவாளப் பெருமக்களுக்கு அத்தகைய வாய்ப்பும், வசதியும் மறுக்கப்படுவது நியாயமும் இல்லை, நீதியும் இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, சிறப்பாக இயங்குகின்ற, சிறப்பாக இயங்குவதற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற நெசவாளப் பெருமக்களுக்குக் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வழங்கப்படுகின்ற அந்தக் கடன் வசதி நிச்சயமாக வழங்கப்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பகல் 12-00

தாயையும், சேயையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அதுபோல கைத்தறி என்பது தாயாக இருந்தால், விசைத்தறி என்பது சேயாக

வளர்ந்திருக்கின்றது. நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே குறிப்பிட்டதைப்போல, விசைத்தறி என்பது ஏதோ பெரிய தொழில்கூடங்களிலே செய்கின்ற தொழில் அல்ல; ஓலைக் குடிசையிலும், ஓட்டு வீடுகளிலும் செய்கின்ற ஒரு தொழிலாக, வாழ்கின்ற இடத்திலேயே இணைந்து செய்யப்படும் தொழிலாக விசைத்தறி இயங்கி வருகின்றது. இதை நம்முடைய அமைச்சர் பெருமக்களும், மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்....

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூட்டுறவுச் சங்கம் என்பதை விசைத்தறிச் சங்கத்திற்காகச் சொல்கிறாரா அல்லது நெசவாளர் சங்கத்தைப்பற்றிச் சொல்கிறாரா என்று எனக்கு ஒரு ஐயம் ஏற்படுகிறது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது விசைத்தறிக்கு மட்டும் அல்ல, கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அந்த நிலை நீடிக்கிறது என்பதை நான் பல உதாரணங்கள் மூலமாகச் சொல்ல முடியும். குறிப்பாக, காஞ்சிபுரத்தில் இருக்கின்ற கூட்டுறவு வங்கி எந்தவொரு சங்கத்திற்கும் தன்னுடைய இசைவைத் தெரிவிக்கவில்லை என்ற செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

விசைத்தறியைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல இப்போது வளர்கின்ற சூழ்நிலையிலே, வளர்கின்ற ஒரு துறையாக அந்த விசைத்தறி இருந்து வருகிறது. Conversion என்ற வகையில் ஒரு மாற்றாக, இப்போது கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறி நெசவாளர்களாக மாறிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு சீரான மின் கட்டணத்தை விதிக்க வேண்டுமென்ற கோரிக்கை நெடுநாட்களாக, நீண்டகாலமாக இருந்து வருகிறது. நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட *1991* ஆம் ஆண்டு வடாற்காடு மாவட்டத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. முகம்மது சகி அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்திலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தத் தேர்தலிலே நாம் வெற்றி



பெறுவோமானால் மகிழத்தக்க வண்ணம் ஒரு முடிவெடுக்கப்படும் என்று அவர்கள் அதிலே தெரிவித்திருந்தார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களிலே அந்த விசைத்தறிக்குச் சீரான மின் கட்டணம், குறைவான மின் கட்டணம் விதிக்கப்படுகின்றது. இலவச மின்சாரம் இல்லாவிட்டாலும்கூட, ஒரு Uniform tariff என்று சொல்லப்படுகின்ற அந்தச் சீரான மின் கட்டணம் இந்த விசைத்தறி நெசவாளர்களுக்கு, குறிப்பாக குறுகிய அளவிலே செய்கின்ற ஒரு Small Scale Industry என்று சொல்லப்படுகின்ற அந்த அளவிலே செய்கின்ற விசைத்தறி நெசவாளப் பெருமக்களுக்கு அளிக்கப்படுமானால் நிச்சயமாக ஒரு முன்னேற்றம், அவர்களுடைய வாழ்விலே ஏற்றம் ஏற்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட, ஒரு தர்க்கத்திற்காக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் இங்கே நெசவாளர் பெருமக்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டபொழுது, ஆந்திராவில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகின்றதா என்று திருப்பிக் கேட்டார்கள். அந்தவிதத்தில் பல்வேறு முரண்பாடுகள் நம்முடைய மாநிலத்திலே இருந்தாலும்கூட எதையும் சீராகச் செய்கின்ற முதல்வரவர்கள் இந்தத் துறையிலே தன்னுடைய அன்பான கவனத்தைச் செலுத்தி மகிழத்தக்க வண்ணம் ஒரு Uniform tariff அதாவது ascending order-ல் அதாவது ஏற்றமிகு கட்டணத்திலே இல்லாமல் ஒரு சீரான கட்டணத்திலே விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு சலுகை அளிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளிப்பட்டு தொகுதியைப் பொறுத்தவரையிலும் அங்கு நெசவாளப் பெருமக்கள் மிகுதியான அளவிலே வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை வழங்கிட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியதைப்போல மானாமதுரையிலே இருக்கின்ற சோமசுந்தரம் ஸ்பின்னிங் மில் என்று சொல்லப்படுகின்ற அந்தக் கூட்டுறவு நூற்பாலையை அரசாங்கம் எடுத்துக்கொண்டு அதைச் சிறப்பாக இயக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த நூற்பாலையிலே பணிபுரிகின்ற நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வாழ்வு ஊதியமாக ரூபாய் ஐநூறோ அல்லது ஆயிரமோ அளித்து அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விசைத்தறி வாரியம் அமைக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே கேள்வி நேரத்திலேயும் சொல்லியிருக்கின்றார்கள்; உரையிலும் சொல்லியிருக்கிறார்கள்.

மகாராஷ்டிராவை அடுத்து அதிகமான விசைத்தறிகளைக் கொண்டு இயங்குகின்ற மாநிலமாக நம்முடைய தமிழகம் விளங்குகின்றது என்ற குறிப்பினை அவர்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அத்தகைய விசைத்தறி வாரியம் அமைக்கப்படுமேயானால் நிச்சயமாக ஒரு சிறந்த மாற்றம் நெசவாளப் பெருமக்களுடைய வாழ்விலே ஏற்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அப்படி அமைக்கப்படும் விசைத்தறி வாரியம் கைத்தறி நெசவாளர்களுக்கு எதிரான ஒன்றாக இருக்காது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால் இரண்டிலும் இருப்பவர்கள் ஒரே சமமான, ஒரே சீரான தொழிலைச் செய்பவர்கள் என்கின்ற ஒரு செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். Weaver என்று சொல்லப்படுகிறவர், கைத்தறியில் இருந்தாலும் சரி அல்லது விசைத்தறியில் இருந்தாலும் சரி, இரண்டு பேருமே அதை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிற தொழிலாளர்கள்தான் என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, அத்தகைய விசைத்தறி வாரியத்தை இந்தத் துறையின் சார்பாக வெகு விரைவிலே ஏற்படுத்தி அந்த விசைத்தறி வாரியத்தின் மூலமாக பல்வேறு நவீன உத்திகளைக் கையாண்டு நெசவாளப் பெருமக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-05*

அதே நேரத்தில் தேங்கிக் கிடக்கின்ற துணிகளைக் கொள்முதல் செய்வதற்கும், நியாயமான விலையில் நூல் கிடைப்பதற்கும் அரசாங்கம் ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள



வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையிலே நம்முடைய சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு பயணம் செய்கின்றபோது, பல்வேறு நூற்பாலைகளை நேரில் கண்டோம். வேலூருக்கு அருகில் இருக்கிற அரியூர் நூற்பாலைக்கு நாங்கள் சென்றபோது, அங்கே அமர்ந்து பேசுவதற்கான வாய்ப்பு வசதிகள் கூட சரியாகச் செய்து தரப்படவில்லை. ஏனென்றால் கட்டண பாக்கிக்காக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியினை அங்கேயிருந்த இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, அத்தகைய நிலைமைகளையெல்லாம் போக்கி, இருக்கின்ற அத்தனை கூட்டுறவு நூற்பாலைகளும் தனியார் நூற்பாலைகள் உட்பட அனைத்து நூற்பாலைகளும் சிறப்பாக இயங்குவதற்கான நடவடிக்கைகளை, சிறப்பான உத்திகளைத் தமிழக அரசு கையாண்டு இந்தத் துறை சிறந்து விளங்கிட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்களும், அதிகமான தொழிலாளர்களும் பெருமளவில் ஈடுபடுகிற தொழிலாக இருக்கின்ற நெசவுத் தொழிலைப் பேணிக் காக்க வேண்டியது அரசினுடைய நீங்காத கடமைகளுள் ஒன்றாக இருக்கிறது. அதிலும் குறிப்பாகக் கூட்டுறவு நெசவாளர்களை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி அவர்களின் உற்பத்தியைப் பெற்று வியாபாரரீதியாகவும் அவர்களுக்குத் துணை நின்று அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நேரத்தின் அருமை கருதி, நீங்களும் குறிப்பிட்டதைப்போல ஒரு மணிக்குள் முடிக்க வேண்டுமென்ற காரணத்தினாலே, சுருக்கமாக ஒன்றிரண்டைக் கூறி நிறைவு செய்ய விரும்புகிறேன். புள்ளிவிவரங்களுக்குள் போனால் நீண்ட நேரமாகும். இதில் சுருக்கமாகக் கூற விரும்புவது பொதுவாக நெசவாளர்களைத் தனியார்கள் பிடியிலிருந்து காப்பாற்றி அதிகபட்சமாகக் கூட்டுறவுத் துறைக்குள்ளே கொண்டுவந்து சேர்க்க வேண்டியது அரசினுடைய பொறுப்பாகும். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக நெசவாளர்கள் கூட்டுறவுத் துறைக்குள்ளே, கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளே வருகிற எண்ணிக்கை சதவீதம்,

அதிகரித்து வருகிறது. இதிலே கூட்டுறவு நெசவாளர்களைப் பொறுத்தவரையில் அது கைத்தறியாக இருந்தாலும் சரி, பட்டாக இருந்தாலும் சரி, இதிலே அவர்களுடைய உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவி செய்வதோடு கால மாறுதல்களுக்கேற்பவும், மக்களின் மன நிலைமைகளுக்கேற்பவும், மக்களின் தேவைகளுக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும், அது கலராக இருந்தாலும் சரி, டிசைனாக இருந்தாலும் சரி, அவற்றில் அதிகமான அறிவை கூட்டுறவுத் துறையில் இருக்கிற நெசவாளர்கள், சங்கங்கள் பெறுவதற்கு அரசு எல்லா வகையிலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு திரு. சொக்கர் அவர்கள்கூட ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அது சம்பந்தமாகப் பேசியிருக்கிறேன் என்றும் சொன்னார்கள். இங்கேயிருந்து நூல் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்குச் செல்கிறது. பங்களாதேஷிலிருந்து லுங்கிகளாக மாற்றப்பட்டு இங்கே இந்தியாவுக்கும் சரி, மற்ற வெளிநாடுகளுக்கும் சரி ஏற்றுமதியாகிறது. நம்முடைய நெசவாளர்களுக்கு அதற்கேற்ற Technology இங்கே இல்லாத காரணத்தாலே வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய அளவுக்கோ அல்லது கைலிகளில் தரமான கைலிகளை உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கோ, அவர்களுக்குப் பயிற்சி தருவதற்கு இங்கே இருக்கிற கூட்டுறவு நெசவாளர்கள் சிலரை அதுபோன்ற நாடுகளுக்கு அனுப்பியோ அல்லது அங்கேயிருந்து சிலரைக் கொண்டுவந்தோ, இங்கேயிருக்கிற நமது நெசவாளர்களுக்குப் பயிற்சி தந்து உதவினால் இங்கிருந்து நூல் போவதற்குப் பதிலாக ஏற்றுமதி அதிகமாகும் என்ற கருத்தைக் கூறியிருக்கிறேன் என்று சொன்னார். அது நல்ல கருத்து, அதை நானும் வலியுறுத்துகிறேன். ஆனால் இந்த Co-optex-ஐப் பொறுத்தவரைக்கும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி என்பது ரூ. 3 கோடி. 3 கோடி என்பது, சாதாரண ஏற்றுமதியாளர் சின்ன அளவிலேகூட, 3 கோடி, 2 கோடி, 10 கோடி, 20 கோடி ரூபாய் அளவுக்கு அனுப்புகிறார். எனவே, Co-optex-ஐப் பொறுத்தவரை, அதனுடைய கொள்முதல், அதனுடைய விற்பனை ஆண்டுதோறும், ஏறக்குறைய ரூ. 250 கோடி. நான் அப்போது அமைச்சராக இருந்தபோது, 100 கோடி ரூபாய்தான். இப்போது ஏறக்குறைய ரூ. 250 கோடியை எட்டியிருக்கிறது. ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. நாங்கள் அப்போது



சிங்கப்பூர் போய் இதற்காகத் தனியாக show-room எல்லாம் திறந்தோம். வெளிநாடுகளிலேகூட இதற்காக, Co-optex மூலமாக அலுவலகங்கள், வியாபார நோக்கத்தோடு ஆங்காங்கே திறக்கப்பட்டன.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ. 327 கோடி அளவிற்கு வியாபாரம் நடந்தது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். திரு. திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் சொன்னது, அப்போது 100 கோடி ரூபாய் இருந்தது. இப்போது ரூபாய் 200 கோடியாகி, ரூ. 250 கோடியாகி, இப்போது ரூ. 300 கோடியை தாண்டியிருந்தால் அது மகிழ்ச்சிக்குரியது. நான் ஏற்றுமதி பற்றி சொன்னேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி என்பது சுமார் ரூ. 3 கோடி அளவிற்கு இருக்கிறது. அதை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சரிகையைப் பொறுத்தவரை, அது சேலையாக இருந்தாலும், வேட்டியாக இருந்தாலும் அதிகமான மூலப்பொருளாக அது தேவைப்படுகிறது அல்லது துணைப் பொருளாக தேவைப்படுகிறது. அதிலே தமிழ்நாட்டினுடைய தேவையென்பது ஏறக்குறைய 56,000 கிலோ கிராம். காஞ்சிபுரத்தில் ஒரு சரிகை ஆலை உள்ளது. அதனுடைய உற்பத்தி 15,000 கிலோ கிராம். கும்பகோணத்திலே கூடுதலாக 2,000 கிலோ கிராம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு இன்னொரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டையும் கூட்டினால்கூட, ஏற்கெனவே 25%. இப்போது இதையும் சேர்த்தால் 40%. தமிழ்நாட்டிற்கு மொத்தம் எவ்வளவு தேவையோ அதிலே 40% சரிகைதான், தமிழ்நாட்டிலே கும்பகோணத்தோடு சேர்த்து உற்பத்தி செய்யக்கூடிய நிலை இங்கிருக்கிறது. எனவே இது இலாபகரமாக நடக்கக்கூடிய ஒரு தொழிற்சாலை. என்னைப் பொறுத்தவரையில் இதை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

இல்லையென்றால் இதற்குத் தேவையான சரிகையை இங்கேயே பெறக்கூடிய அளவிற்கு 100 சதவிகித உற்பத்தியை மேற்கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). உரையை முடித்து விடுகிறேன்.

இலவச வேட்டி சேலையைப் பொறுத்தவரையில் கடந்த 5 ஆண்டுகாலத்திலே மிகப் பெரிய ஊழல் இதிலே நடைபெற்று இப்போது பலரும் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, வெளி மாநிலங்களிலே கொள்முதல் செய்வதை நிறுத்திவிட்டு, இங்கேயே கூட்டுறவுச் சங்கங்களிலேயே நெசவாளர்களிடமிருந்தும் சரி, போதவில்லையென்றால் விசைத்தறி நெசவாளர்களிடமிருந்தும் சரி, கொள்முதல் செய்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதிலே அதிக அளவிலே, முதலிலே, first priority கூட்டுறவு நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்களிடம் இல்லையென்றால்தான் நீங்கள் விசைத்தறிக்குப் போக வேண்டுமென்று நான் அரசை வற்புறுத்தி இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த வீடுகள் கட்டித் தருவதற்கு மத்திய அரசு மானியம் தருகிறது, மாநில அரசும் மானியம் தருகிறது. இந்தக் குறிப்பிலே நான் பார்க்கிறபோது--இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள்--1997-98-லே 1200 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. 1998-99-லே 920 வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. ஆனால் இந்த ஆண்டிலே வீடுகள் உண்டா, இல்லையா என்பதைப் பற்றி எந்தக் குறிப்பும் இதிலே இல்லை; இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இந்த ஆண்டும், ஆண்டுதோறும் கட்டுவதைப்போல 1000 வீடுகளை நெசவாளர்களுக்குக் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மத்திய அரசு இதற்கு மானியம் கொடுக்கிறது. எனவே 1000 வீடுகளை குறைந்தபட்சம் கட்டித் தருவதற்கு-- அதிலே நெசவாளர்களும் கொஞ்சம் share போட வேண்டும். நாம் மானியம்தான் கொடுக்கிறோம், மற்றபடி லோன்தான் கொடுக்கிறோம். எனவே, அந்தத் திட்டத்தைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல தமிழ்நாட்டில் பெரும்பாலும் பஞ்சாலைகளுக்கு நலிவுற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மத்திய அரசினுடைய கொள்கையாகும். பஞ்சை ஏறக்குறைய 5 இலட்சம் பேல் அளவிற்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது என்று மத்திய அரசு எடுத்திருக்கிற முடிவு என்பது தவறான, மிகத் தவறான முடிவாகும். இதற்கு cotton lobby என்பார்கள். மத்திய அரசிலே இருக்கிற cotton lobby-ன் காரணமாக மத்திய அரசு ஆண்டுதோறும் இந்த முடிவு எடுக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை எதிர்த்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்படி அனுப்பக் கூடாது, பாதிக்கும் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலே தொடர்ந்து வற்புறுத்த வேண்டும். வற்புறுத்துகிற அளவிற்கு மத்தியில் அரசாங்கமே கிடையாது, அது வேறு விஷயம். நமது அரசு மத்திய அரசிடம் தொடர்ந்து வற்புறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே வெற்றி காண வேண்டும். ஏற்கெனவே மத்திய அரசு சில உதவிகளை பஞ்சாலைகளுக்கு செய்தபோது, துணித் தொழிலுக்கு என்று வருகிறபோது, நூலுக்கு சேர்க்காமல் இருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி வற்புறுத்தியதன் காரணமாக அன்றைக்கு இருந்த வாஜ்பாய் அரசு அதை ஏற்றுக்கொண்டு Textiles Mills-ஐயும் அதிலே சேர்த்துக்கொண்டார்கள். எனவே, அதுபோல இதிலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

இன்னொன்று, கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் TANSPIN என்று ஒன்றை ஆரம்பித்து, அதிலே என்ன பண்ணுகிறார்கள் என்றால், பஞ்சு கொள்முதல் செய்கிறார்கள். அந்த இணையம் வந்து 10 சதவீதம் இலாபத்தில் நடக்கிறது. சென்ற ஆண்டுகூட 11 இலட்சம் ரூபாய் அதிலே இலாபம் வந்திருக்கிறது. ஆனால் அதிலே கொள்முதல் என்பது ஏறக்குறைய கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சில் 10 சதவீதம் மட்டுமே அங்கிருந்து வாங்கப்படுகிறது. எனவே அதிலேயே 11 இலட்ச ரூபாய் இலாபம் வருகிறது. எனவே இதை விரிவுபடுத்தி, மேலும் Share Capital தேவைப்பட்டாலும் அரசாங்கம் அதிகமாகக் கொடுத்து அல்லது Working Capital-ஐக் கூடுதலாக்கி, என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், 100 சதவீதமும் இந்தக் கூட்டுறவு

நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சினை நீங்களே வாங்கி விநியோகம் செய்கிறபோது, இந்த 11 இலட்சம் இலாபம் என்பது இன்னும் அதிகமாகிற வாய்ப்பு இதன் மூலம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

தமிழக அரசு பஞ்சு வியாபாரிகளுக்குத் தர வேண்டிய பாக்கிகளை எல்லாம் கொடுக்க வேண்டுமென்று இங்கே சகோதரர் சட்டமன்ற உறுப்பினர், அவர் பேச வாய்ப்பில்லாததால் எழுதி என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னொன்று. கடைசியாக, என்னுடைய தொகுதியிலே, செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, எம்.ஜி.ஆர். காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலையை வேண்டுமென்றே ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது மூடிப்போட்டு வைத்திருந்தார். நான் 5 வருடங்களாக பலமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது சட்டமன்றத்திலே பேசினேன். அப்போது இருந்த காது, செவிட்டுக் காது. அதனாலே அது கேட்காத காரணத்தாலே அந்த நூற்பாலையைத் திறக்க எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. அதிகாரிகள் எல்லாம்கூட திறக்கத் தயாராக இருந்தார்கள். இருந்துக் கூட வேண்டுமென்றே அது நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, சட்டமன்றத்திலே நான் பேசியதை அடிப்படையாகக் கொண்டும் புதுக்கோட்டையில் முதல்வர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் நானும் கலந்துகொண்டேன், அப்போதும் பேசினேன். அந்த அடிப்படையிலே, அதே மேடையிலேயே இன்னும் 10 நாட்களில் திறக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அது அறிவித்தபடியே உடனே, பஞ்சாலையும் திறக்கப்பட்டது. அதற்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்த நூற்பாலையில் 10 சதவீதம் வேலைதான் நடைபெறுகிறது. மொத்தம் உள்ள 60 Frames-ல் 10 Frames தான் ஓடுகின்றன. 250 பேரில் 50 பேர் மட்டும வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களை எல்லாம் வேலையிலிருந்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே



மீண்டும் நான் முதலமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்வது முழு அளவிலே அந்த ஆலையை இயக்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். யாரையும் வேலையைவிட்டு நிறுத்தாமல்-சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது-சம்பளம் கொடுக்க, முறையாக அந்த ஆலை இயங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மானாமதுரையில், முத்தனேந்தல் சோமசுந்தரம் பஞ்சாலையை எடுத்து நடத்த வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அதையும் அரசு எடுத்து நடத்த முன்வர வேண்டும். இது என்னுடைய கோரிக்கை மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கையுமாகும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் திரு. தா. கிருட்டிணன் அவர்களுடைய கோரிக்கையும் ஆகும் என்பதைக் கூறி இந்த நேரத்திலே வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. பா. வேல்துரை.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, என்னுடைய சில கருத்துகளை நான் சொல்ல முற்படுகிறேன். தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை என்பார்கள். இப்போது கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கை நூலைப்போன்று மெலிந்து காணப்படுகிறது. எனவே அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவது நமது அரசினுடைய தலையாய கடமை. இன்றைக்கு கைத்தறித் துறையிலே 60 வயதிற்கு முன்பாக இறந்த நெசவாள குடும்பங்களுக்கு 40,000 ரூபாய் வழங்கப்படும் என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். ஆனால் இறந்தால் 40,000 ரூபாய், இருந்தால் எந்தவிதமான நன்மையும் இல்லை என்பதை நெசவாளர்கள் என்னிடத்திலே கூறுகிறார்கள். எனவே, 60 வயதிற்கு முன்பு இறக்கின்றவர்களுக்கு எப்படி 40,000 ரூபாய் வழங்கப்படுகிறதோ அதுபோல 60 வயதைத் தாண்டுகின்ற நெசவாளர்களுக்கும் நீங்கள் ஒரு பணிக்கொடையாக 25,000 ரூபாய் வழங்கினால் அந்தக்

குடும்பங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். எனவே, நீங்கள் பென்ஷன் கொடுத்தாலும்கூட, 60 வயது பூர்த்தியாகின்ற நெசவாளர்களுக்கு 25,000 ரூபாய் கண்டிப்பாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோன்று, நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிறீர்கள். அதிலே காப்பீடு போன்றவற்றில் வராத நெசவாளர்களுக்கும் 60 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு முறையாக தொழில் செய்கின்றவர்களுக்கு நீங்கள் அந்த பென்ஷன் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதுபோன்று எனது தொகுதியிலுள்ள கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், புதுக்குடி, சேரன்மாதேவி, பத்தமடை, முக்கூடல் ஆகிய ஊர்களிலே கைத்தறி நெசவு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தாலும்கூட, அங்கே இப்போது Bed-sheet ரகங்கள் சுமார் 20 இலட்சம் ரூபாய்க்கும், செயற்கைப் பட்டு ரகங்கள் 15 இலட்சம் ரூபாய்க்கும், துண்டு ரகங்கள் 10 இலட்சம் ரூபாய்க்கும், ஆக மொத்தம் 45 இலட்சம் ரூபாய்க்கான துணிகள் தேங்கி இருக்கின்றன. எனவே, நீங்கள் 30 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்குவீர்களானால் அந்த தேக்கம் எல்லாம் காலியாகி அந்த நெசவாளர்கள் வாழ்க்கையிலே ஒளி ஏற்படுவதற்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுபோன்று, கல்லிடைக்குறிச்சியிலே 1989-90-லே கூட்டுறவுத் துறையிலே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே வீடுகள் ஒதுக்குவதிலே முறைகேடுகள் நடந்து அங்கே ஓ.எம். பீர்முகமது என்பவர் பாதிக்கப்பட்டு, இன்றைக்கு தற்கொலை செய்துகொள்வேன் என்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். எனவே, அதிலே நடந்த முறைகேடுகளை ஆய்ந்து அந்த பீர்முகமதுக்கு அந்த வீட்டை ஒதுக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, இலவச பட்டா வைத்திருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் வேகமாக நடைபெறவில்லை. எனவே, இலவச வீட்டுமனைப் பட்டா வைத்திருப்பவர்களுக்கு முறையாக இலவச வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, கடனுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். அதிலே மானியம் வழங்கப்படுகிறது. ஆனால் கடன் அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். மானியத்தை அவர்களுக்குக் கொடுத்தால் அவர்களே அவர்களுடைய காலி இடத்தில் வீடு கட்டுவதற்கு வசதியாக இருக்கும், கடன் சுமையும் இருக்காது என்பதை நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கூட்டுறவு நெசவாளர்களுக்கு தனியாக ஒரு பேங்க் இருந்தால் எளிதாக கடனைப் பெற்று அவர்களுடைய தொழிலை வேகமாக செய்வதற்கு வாய்ப்பு இருக்குமென்று சொல்கிறார்கள். அதையும் அரசு சிந்தித்துப் பார்த்து அந்த நடைமுறையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கூட்டுறவு மில்லில் நூல் நிறைய இருக்கிறது. அதை நேரடியாக அந்த நெசவாளர் சங்கம் வாங்க முடியவில்லை. அதை நேரடியாக வாங்குகின்ற ஒரு வாய்ப்பு இருந்தால், மிக எளிதாக நேரடியாக வாங்கிக்கொள்ளலாம். கூட்டுறவு நூற்பாலைகளிலே தேங்கிக் கிடக்கின்ற நூலும் எளிதாக விற்றுவிடும்.

அதுபோன்று, தனியாருக்கும் விற்கின்ற அந்த வாய்ப்பு, அந்த மில்லிலிருந்து நேரடியாக விற்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தால், அந்த மில்லிலும் உற்பத்தி செய்த நூல் இருப்பு தீர்ந்து உடனடியாக அந்த மில் இயங்குவதற்கு, சுலபமாக பணம் Rotation ஆவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, இங்கே நமது அரசு 185.26 கோடி ரூபாய் அந்த நலிந்த 18 மில்களுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறது. ஆனால், திருநெல்வேலியில் உள்ள பேட்டை கூட்டுறவு நூற்பாலைக்கு 3½ கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 3½ கோடி ரூபாயும்கூட முறையாக செலவழிக்கப்படவில்லை என்று சொல்லி, நமது திராவிட முன்னேற்றக் கழக தொழிலாளர்கள்கூட பெரிய உண்ணாவிரதம் நடத்தியிருக்கிறார்கள். அங்கே முறைகேடு நடந்திருப்பதாக அறிகிறேன். ஆகவே, இதுபோன்று முறைகேடுகள் இந்த 18 மில்களிலுமே நடந்திருக்கிறதா, நீங்கள் அந்தப் பணத்தைக் கொடுத்தபோது, இன்னின்ன வகைகளுக்கு இதைப் பயன்படுத்த வேண்டும், இன்னின்ன நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன, ஆகவே, அந்தந்த முதலீடுகளில், இந்தப் பணத்தை இன்னின்ன வகைகளில்

நீங்கள் செலவழிக்க வேண்டுமென்று முறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. எனவே, அங்கேயிருக்கின்ற மில் இயக்குநர் மீது அதிருப்தி அடைந்து தொழிலாளர்கள் மிகுந்த பிரச்சினையை அங்கே எழுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்த மில் நிர்வாகத்தை நீங்கள் கவனத்தில்கொண்டு உடனடியாக, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, கடந்த ஆட்சியிலே பயங்கரமான ஊழல் நடந்திருக்கிறது. ஆனாலும், அதிகாரிகள் மாற்றப்படவில்லை. அங்கே மில்லிலே எப்படி இவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று விசாரிக்கிறபோது, அவர்கள் சொல்கிறார்கள், தொழிலாளர்களைவிட அங்கே நிர்வாகத்தில் இருக்கின்ற அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள், அந்த அதிகாரிகளால்தான் நஷ்டம் ஏற்படுகிறது, எனவே அந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, அந்த மில்லினுடைய நஷ்டத்தை கட்டுப்படுத்த அரசுக்கு நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நீங்கள் அதையும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு இப்போது அங்கே இருக்கிற கஷ்டத்திலே மின்சார மானியம், வருமான வரி விலக்கு, கடனுக்கு வட்டித் தள்ளுபடி போன்ற சில காரியங்களைச் செய்தால் அந்த மில்லினுடைய நஷ்டத்தை ஈடு செய்யலாம் என்று சொல்கிறார்கள். அதற்கும் நமது அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 250 பணியாளர்கள் அந்த மில்லிலே 55 ரூபாய் ஊதியத்திலே 13 வருடங்களாக வேலை பார்க்கிறார்கள். அந்த மில் தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நல்லபடியான ஊதியமும், அவர்களுடைய பணிக்கு ஒரு பாதுகாப்பும் ஏற்படுகின்ற வகையில் ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தலையணை உறைக்கும் வரி இருக்கிறது. சிட்டா நூலுக்கும் வரி இருக்கிறது. அந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்தக் கைத்தறித் துறை நெசவாளர்கள் மிகுந்த குறையாக சொல்வது என்னவென்று சொன்னால், கூட்டுறவு நூற்பாலைகளிலே



உள்ள நூலினுடைய தரம் சரியாக இல்லையென்று சொல்கிறார்கள். அந்த நூலினுடைய தரத்தை மேம்படுத்துவதற்கு, தரமான நூலினை உருவாக்குவதற்கு தரக்கட்டுப்பாட்டை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான்காவது முறையாக கைத்தறி, துணிநூல் உள்ளிட்ட மானியக் கோரிக்கையை அமல்படுத்தி அதை அறிமுகப்படுத்த எனக்கு வாய்ப்பு அளித்த பெரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி, இங்கே உங்கள் மத்தியிலே ஒருசில விளக்கங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே அளிக்கப்பட்ட கொள்கை விளக்க சாதனைப் பட்டியலில் விவரமாக எல்லாச் செய்திகளும் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், மீண்டும் அந்தப் புள்ளிவிவரங்களுக்குள் நான் செல்லாமல் நடைமுறையிலே எப்படி இந்தத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஏதாவது மாற்றத்தை நீங்கள் தெரிவித்தால் அதையும் ஏற்றுக்கொண்டு செயலாற்றக்கூடிய அளவிற்கு இந்தத் துறை செயல்படும்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

பொதுவாக இன்று நேற்றல்ல, தொடர்ந்து, சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்று வரை, கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகத்தான் அமைந்து இருக்கிறது என்பதும் அதையொட்டியேதான் இந்த அரசு கடந்த 1996 ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்றபோதே இந்த அவையிலே முதல் மானியக் கோரிக்கையில் 15 கோடி ரூபாயை நம்முடைய முதல்வர் அவர்களிடம் இருந்து பெற்று, அன்று சீரழிந்து சிதைக்கப்பட்டிருந்த கூட்டுறவு நூற்பாலைகளும், அதேபோல 300-க்கும் மேற்பட்ட Co-optex விற்பனை நிலையங்களும் பயனடையும் நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டன. அதேபோல 1300-க்கும் மேற்பட்ட சங்கங்களின் நிதி ஆதாரம் அவர்களுடைய கடன் குரல்வளையை நெறிக்கின்ற சூழ்நிலையிலேதான் ஆட்சிப் பொறுப்பிற்கு நாம் வந்தோம். வந்தவுடன் உள்ளே என்ன இருக்கிறது என்று தெரியாத நிலையில், 15 கோடி ரூபாய் மூலதனத்திலேதான் இந்த அரசு இந்தத் துறையில் தன்னுடைய பணியை முதலிலே தொடங்கியது என்பதும், தொடங்கியவுடனே மெல்ல அடி எடுத்து வைப்பதிலே ஒரு கணக்கிட்டு ஆண்டுதோறும் 10 சதவீதம் என்று தள்ளுபடி மானியத்தை அறிவித்தோம். அதன்பின் சிறிது காலம் கழித்து, 20 சதவீதம் தள்ளுபடி மானியமாக ஆண்டு முழுவதுக்கும் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இப்படி தேக்கத்திலே இருந்த 300 கோடி ரூபாய்க்கு மேலான துணிகளை வெளியேற்ற, கூடுதலாக 10 சதவீதம் அளித்து அந்தப் பணியையும் செய்து முடித்தோம்.

அடுத்து, எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்த பின்பு, லுங்கிப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாகியது. தென் ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி குறைந்த காரணத்தால், அதற்காக 7 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த லுங்கிக்கு 30 சதவீத தள்ளுபடி மானியம் கொடுத்து, அதிலும் ஓரளவிற்கு நிறைவு பெற்று, இன்று மொத்தத்திலே தேக்கம் என்பது இல்லாத அளவிற்கு நாம் செய்து முடித்து இருக்கிறோம்.

அதேபோலத்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் அ. செல்லக்குமார், திரு. கே.ஆர்.ஜி. தனபாலன், திரு. நா. பெரியசாமி, திரு. வி.ஜி. தனபால், திரு. பா. அருண்குமார், திரு. எஸ். திருநாவுக்கரசு, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், தம்பி அ.வ. அப்துல் நாசர், திரு. பா. வேல்துரை ஆகியோர் இந்தக் கைத்தறித் துறை மானியத்திலே விளக்கமாகப் பேசி சில சந்தேகங்களை எழுப்பி இருக்கிறார்கள். முதலிலே அதற்கு நான் விளக்கம் அளிப்பது என்னுடைய கடமையாகும். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் விசைத்தறியைப் பற்றியும் கைத்தறியைப் பற்றியும், இரண்டையும் இணைப்பதைப் பற்றியும் இங்கே பேசினார்கள். கைத்தறிச் சங்கத்தைப் பொறுத்தவரையில், கடன் கொடுப்பதிலோ, நூல் கடன் கொடுப்பதிலோ எங்களுக்கு ஆட்சேபணையே இல்லை; அதுதான் எங்களுடைய பணி. ஆனால், விசைத்தறிக்குக் கடன் கொடுப்பதோ, விசைத்தறிச் சங்கங்களுக்கு....(மணியடிக்கப்பெற்றது).



பிற்பகல் 12-30

## 5. அறிவிப்பு

**மானியக் கோரிக்கை மீது பேசிய உறுப்பினர்கள், பதிலுரை முடியும் வரை அவையில் இருத்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற உறுப்பினர்கள் ஒரு மரபைக் காப்பாற்ற வேண்டும். இறுதிவரையில் அவையில் இருந்து, அமைச்சர் பதிலைக் கேட்க வேண்டும். உறுப்பினர்கள், பேசிவிட்டுப் போய்விடுவது முறையல்ல. இப்போது, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமனுக்கு அமைச்சர் பதில் சொல்கிறார். அவர் தற்போது அவையில் இல்லை.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**கோரிக்கை எண் 25-கைத்தறியும் துணித் தொழிலும்**--தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிச் சங்கங்களுக்கு, கைத்தறி நெசவுச் சங்கங்களுக்குரிய தகுதிகள் அனைத்தையும் கொடுக்க இயலாத ஒரு சூழ்நிலை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஏற்கெனவே அந்தப் பகுதிக்குக் கொடுத்த காரணத்தால்--கடந்த ஆட்சியிலும், நாமும் சில நேரங்களில் வேறு வழியின்றி கொடுத்த காரணத்தால்-- 20 இலட்சம் ரூபாய் விசைத்தறிச் சங்கங்களிலே பாக்கி இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பிடியிலிருந்து நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு கேட்டுக்கொண்டார். தனியார் பிடியிலிருந்து வரவேண்டுமென்பதற்காகத்தான் குறுகிய காலத்திற்குள் நெசவாளர்கள் வேறு சங்கங்களுக்குச் சென்றாலோ அல்லது தனியாகச் சங்கம் அமைத்துக் கொண்டாலோ, அவர்களுக்கு உரிய அத்தனை சலுகைகளையும் வழங்குவது என்ற முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது.

ஏற்றுமதியைப் பற்றியும் இங்கே தெரிவித்தார்கள். Co-optex ஏற்றுமதி 3 கோடி ரூபாய். ஆனால் மற்ற ஏற்றுமதிகளைக் கணக்கிட்டுப் பார்த்தால், இது மிகக் கேவலமான நிலை. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால் கரூரிலே மட்டும் 800 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி நடக்கிறது. இந்தத் துறையிலே இருக்கின்ற சிரமங்களை நீங்களும் அறிந்திருக்கின்ற காரணத்தால்தான் ஒரு புதிய திட்டம் இங்கே அறிவிக்கப்பட இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சரிகை ஆலையைப் பற்றி இங்கே சொன்னார்கள். "இவ்வளவு இலாபம் வருகிறதே, 40 சதவீதம்தானே நீங்கள் உற்பத்தி செய்கிறீர்கள், 60 சதவீதத்தை வெளியிலேயிருந்து வாங்குவதாகச் சொல்கிறீர்கள்" என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் அந்த Technology யாருக்கும் தெரியாது. நாம் என்னதான் சரிகை ஆலையை வைத்தாலும் நாம் வெள்ளியைக் கட்டியாக வாங்கி வரமுடியாது. நாம் வெள்ளியை நூல் இழையாக சூரத்திலிருந்து வாங்கிக் கொண்டு வந்துதான் நாம் இங்கே அதற்கு தங்கத்தினுடைய மெருகை ஏற்ற முடியுமே தவிர, வெள்ளியை இழையாக்குகின்ற அந்த உண்மையான technic-ஐ சூரத்து மக்கள் இதுவரையில் யாருக்கும் சொல்லித் தரவில்லை. ஆகவேதான் சரிகையைப் பொறுத்தவரையில் சூரத்து மக்களை நம்பி இருக்க வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனாலும், நாம் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் மூலமாக, ஒரு சில பேர்களுக்கு நல்ல வாய்ப்பினைக் கொடுத்து, பயிற்சி கொடுத்து, அவர்கள் எதிர்காலத்திலே, இந்தத் துறையிலே முன்னேறுவதற்கான வாய்ப்பையும் இங்கே ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறோம்.

"வீடு கட்டுகின்ற பணியிலே ஏன் இவ்வளவு தாமதம், ஏன் இவ்வளவு சுணக்கம்" என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறீர்கள். இதற்காக டெல்லிக்கு பல முறை சென்றிருக்கிறேன். ஒரு வருட காலத்திற்குள் முடிக்க வேண்டிய திட்டங்கள் எவற்றுக்கும், அவர்கள் ஓராண்டுக்குள் உத்தரவுகள் பிறப்பிப்பதில்லை. இந்த ஆண்டும் 1,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் போன ஆண்டுக்கான பணமே தர முடியாத நிலையிலே தொடர்ந்து இது ஒரு தொடர்கதையாகத்தான் இருக்கிறது. இந்த ஆண்டும் 1000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



"TANSPIN-ல் 11 இலட்சம் இலாபம் வந்திருக்கிறதே, ஏன் உங்களால் முழுமையாகச் செயல்படுத்த இயலவில்லை" என்று கேட்கப்பட்டது. அதற்காகத்தான் Package Programme. நடைமுறை மூலதனத்திற்குப் பணம் இல்லாத காரணத்தால்தான், அந்த நடைமுறை மூலதனத்தை ஒழுங்குபடுத்துவதற்காகத்தான், பல சிக்கல்கள் இதிலே ஏற்பட்ட காரணத்தால்தான், TANSPIN முழுமையாகச் செயல்பட முடியவில்லை.

இங்கே நம்முடைய திரு. வேல்துரை அவர்கள் பேட்டை ஆலையைப் பற்றிக்கூடச் சொன்னார்கள். NABARD ஒப்புதலைப் பெற்ற பின்பு, அந்தப் பேட்டை ஆலையை மிகச் சிறப்பாக எப்படி நடத்த வேண்டுமென்பதற்காக, நட்டத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காக, அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஏறத்தாழ 245 நபர்கள் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் செல்லக்கூடிய வாய்ப்பை உருவாக்கி, இந்த ஆலை விரைவில் இலாபகரமாக நடக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறோம். NABARD ஒப்புதல் கிடைத்த காரணத்தினால்தான் கண்டி ஒன்றுக்கு ரூபாய் 1,000 வரை பஞ்சு குறைவாக வாங்கக்கூடிய வாய்ப்பு அந்த ஆலைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதையொட்டிக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது நிச்சயமாக உற்பத்தியை அதிகப்படுத்தி, அதன் மூலம் நாம் பெறுகின்ற இலாப சதவீதக் கணக்கையும் அடிப்படையாக வைத்துச் செயலாற்றுகின்றபோது நிச்சயமாக பேட்டை ஆலையை ஒழுங்குபடுத்த முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல, மற்ற ஆலைகளையும் ஒழுங்குபடுத்தக்கூடிய வாய்ப்பு இன்று உருவாக்கப்பட்டு, தன்விருப்ப ஓய்வுத் திட்டத்திற்கு 7 கோடி ரூபாயை அளித்திருக்கிறோம். அதேபோல மற்ற Statutory Dues-க்கு ரூ. 134 கோடிக்கு மேல் அளித்திருக்கிறோம். ஆனால் இவையெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, அதை ஓட்டுவதற்கு வேண்டிய ஒப்பந்தம் போடுகின்றபோது, NABARD விதிமுறைகளின்படி தொழிலாளர்களின் ஒப்பந்தம் தேவைப்படுகிறது. அதன் காரணமாகத்தான் சில கொடுக்கப்பட்ட நிதிகள்கூட வங்கிகளிலே பழைய பாக்கிக்கு வைக்கக்கூடிய அளவிற்கு காலதாமதம் ஆகிறது. தொழிலாளர்களுடன் அந்த ஒப்பந்தம் போட முடியாத

காரணத்தால் பல இடங்களிலே Package Programme-க்காகக் கொடுத்த தொகை மத்திய வங்கியிலே பிடிபடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

அதுபோலவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்கள் விசைத்தறித் தொழிலியல் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். விசைத்தறித் தொழிலியல் சங்கத்தில் ஒரு தொழிலாளி இரண்டு தறியோ அல்லது மூன்று தறியோ என்று பார்ப்பதில் பிரச்சினை இல்லை. அவர்களுக்குத் துணையாக வைத்திருக்கின்ற Fitter, Foreman என்ற கணக்கையெல்லாம் போட்டுப் பார்க்கிறபோது, எந்தவொரு விசைத்தறித் தொழிலியல் சங்கமும் இலாபத்தில் இயங்க வாய்ப்பில்லை. அதை அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, யார் இந்தப் பணியிலே இருக்கிறார்களோ, அவர்களையே அந்த விசைத்தறியை எடுத்துக்கொள்ளச் சொல்லி அதைச் சங்கமாக மாற்றி, செலவினங்களைக் குறைத்து, இன்று அப்படி 3 இடங்களிலே தொழிலியல் சங்கங்கள் மாற்றி அமைக்கப்பட்டு, அந்தப் பணியும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதிலும் ஒருசில இடங்களிலே அந்தத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் சரியாகச் செயல்பட முடியாமல் போவதற்கும், சம்பளம் கொடுக்க இயலாமல் போவதற்கும் உள்ள காரணம், அங்கே அதற்கேற்ற வருமானம் இல்லை என்பதுதான். இலவச வேட்டி சேலை தயாரிக்கும் பணியை அவர்களுக்குத்தான் அளிக்கின்றோம். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதைப் போல, கைத்தறியிலே எந்த அளவிற்கு இலவச வேட்டி சேலையை உற்பத்தி செய்ய முடியுமோ-ஓராண்டு காலத்திற்கு எவ்வளவு உற்பத்தி செய்ய இயலுமோ-அதைச் செய்துவிட்டு அதற்கு மேல் தேவைப்படுவதைத் தான் விசைத்தறித் தொழிலியல் சங்கம், அடுத்து விசைத்தறிச் சங்கம் ஆகியவை உற்பத்தி செய்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 12(3) Settlement பற்றிச் சொன்னார்கள். 12 (3) Settlement என்பது நெசவாளர் சங்கத்தில் இருக்கிற தலைவர், நிருவாகிகள், அங்கிருக்கிற பணியாளர்களுக்காகப் போடப்படுவது. நெசவாளர்கள் இதில் சம்பந்தப்படுவது இல்லை. அங்கே white Collar Job-லே இருக்கிற பணியாளர்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொள்வதற்காக போடக்கூடிய Settlement ஆக இந்த 12 (3) Settlement மாறிவிட்டது.



ஆனால் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் ஒப்புதலின் பேரில் தான் நிதியாதாரங்கள், மற்றவை கவனிக்கப்படுகிறபோது, அவர்களுடைய பிரதிநிதி யாரும் இல்லாமல் அத்தனை நெசவாளர்களின் நலனைப் புறக்கணித்து, ஒரு 4 பேர் மட்டும் தங்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொள்வதற்கு அந்த 12 (3) Settlement பயன்படுமேயானால், அதை நாம் எல்லோரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிக்கொள்ளலாமேயொழிய, 4 பேர் மட்டும் இலட்சக்கணக்காக மாதா மாதம் சம்பளம் எடுக்கின்றபோது, அந்த நெசவாளர்களுக்கு எப்படி இலாபம் கிடைக்கும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல 1996-97 ஆம் ஆண்டு Rebate பாக்கி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கத்தினுடைய உற்பத்தியை, விநியோகத்தை கவனிக்கக்கூடிய, தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக நிருவாகக் குழுவும், அதிலே பணியாற்றக்கூடிய பணியாளர்களும் அந்தச் சங்கத்தினுடைய நடைமுறை மூலதனத்தையெல்லாம் கணக்கிலே கொண்டு, எந்த அளவிற்கு சாத்தியமோ அந்த அளவிற்கு நீண்டகாலமாகக் கூலி உயர்வு இல்லாமல் இருப்பதையும் கவனத்திலே கொண்டு செய்து கொண்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை இந்த அளவில் பார்ப்பது சரியான கருத்து இல்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி ஊதியத்தைப் பற்றி ஒரு சுற்றறிக்கை இருக்கிறது. அதுவும் குறிப்பாக நெசவாளர் சங்கத்தில் பணியாற்றுகின்றவர்களின் ஊதியத்தைப் பற்றிய சுற்றாணை, அரசு ஆணை எண் 34, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, சுற்றறிக்கை எண் 4216/98-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் நிதிகள் செலவைக் கணக்கிட, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் அது அமைக்கப்பட்டது. அந்த ஒப்புதலோடு அவர்கள் சம்பளத்தை எடுத்துக்கொள்வதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தத்தைப் போட்டுக்கொண்டு, அதுவும் retrospective effect-லே,

(குறுக்கீடு) உள்ள விவரத்தைச் சொல்கிறேன், நான் மறைத்துச் சொல்லவில்லை. retrospective effect-லே 4 பணியாளர்களும், நிருவாகமும் சேர்ந்து Labour Office-ல் போடுகிற அந்த ஒப்பந்தத்தை அந்த கணக்கிலே எடுத்துக்கொண்டால், பல கூட்டுறவுச் சங்கங்கள் நிச்சயம் நிதியாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இந்த 12(3) Settlement மூலம் ஏற்படாது. ஏனென்றால், நெசவாளர்களுக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டுமென்ற நோக்கம் அதிலே சிதைந்துவிடும். ஆனால், சட்டப்படி எங்கெங்கே அந்த ஊதியம் கொடுக்க இயலாமல் இருக்கிறதோ அதை நிச்சயம் கவனித்து எதிர்காலத்திலே செயலாற்றக்கூடிய வாய்ப்பும் உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அடுத்து, நூற்பாலைகளைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அடிப்படை வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன. ஆனால், இங்கே தெரிவித்தார்களே அதைப்போல வட்டிக்கு அந்தப் பணம் எல்லாம் போகிறதே என்ற ஒரே ஒரு நிலைக்குக் காரணம் தொழிலாளர்களிடமிருந்து ஒரு ஒப்பந்தத்தை, சின்ன கையெழுத்தை மட்டும் பெற்று வந்திருந்தால் இத்தனை வட்டியையும் மாற்றி அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும். நானும் எல்லா நிலைகளிலும், எந்த அளவுக்கு இறங்கிச் செல்ல வேண்டுமோ, அந்த அளவுக்குச் சென்று பார்த்துவிட்டேன். ஆகவே நான் எல்லா தொழிலாளர் சங்கங்களுடைய தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே இன்று இந்தத் துறைக்கு இருக்கின்ற நிலை, தொழில் மந்தம், ஜவுளித் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற பலவீனம், அவற்றையெல்லாம் உணர்ந்து தொழிலாளர் சங்கங்கள் இதற்கு ஒரு நல்ல முடிவை எடுத்துத் தெரிவித்தால் நிச்சயம் தமிழகத்திலே நாம் நூற்பாலைகளை முழுமையாக இயக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் அகில இந்திய அளவில் இருக்கின்ற 1,400 நூற்பாலைகளிலே தமிழகத்திலே மட்டும் 801 இருக்கின்றன. இந்த 801 ஆலைகளில், 100-க்கும் மேற்பட்ட தனியார் நூற்பாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால், இவற்றையெல்லாம ஒழுங்குபடுத்தாமல் இருந்தால், எதிர்காலம் என்னாவது, எதிர்காலத்திலே இந்த ஆலைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் குடும்பங்களின் நிலை என்ன? காலம், நேரம், அவகாசம் . . . . (குறுக்கீடு).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு இருக்கின்ற நெருக்கடிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் நான் மாறுபட்ட கருத்து கொள்ளவில்லை. ஆனால் நெருக்கடிகள் ஏற்படுகின்றபோது அந்த நெருக்கடிகளின் சுமைகளைத் தொழிலாளர்கள் தலையிலே சுமத்துவது என்பதை--நீதி சம்பந்தப்பட்டு நான் சொல்லவில்லை--அந்தத் தொழிலாளர்களால் தாங்க இயலாது என்பதற்காக நான் சொல்கிறேன். விலைவாசி ஏற்றம், இன்னும் பிற துயரங்கள் எல்லாம் அவர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றபோது இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக தொழிலாளர்களின் ஊதியத்தை வெட்டுவது, அவர்களுடைய வேலைப் பளுவை அதிகப்படுத்துவது, ஆட்குறைப்புச் செய்வது என்று நிர்ப்பந்திப்பது எந்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியம் என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்வதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் உலக அளவிலே ஏற்பட்டிருக்கின்ற நிர்ப்பந்தம், உலக அளவிலே ஏற்பட்டிருக்கின்ற recession இன்று குறிப்பாக ஜவுளித் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய இழப்பு, இதிலிருந்து, இந்தத் தேக்கத்திலிருந்து விடுபட நாம் அனைவரும் சேர்ந்து செயல்பட்டால்தான் இந்தப் பணியை உடனடியாக ஆற்றமுடியும் இல்லையெனில் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலைதான் ஏற்படும். காரணம் தொழிலாளர் தலைவர்கள் என்னிடத்திலே தனியாகப் பேசுகின்றபோது ஒத்துக்கொள்கிறார்கள். வெளிப்படையாக நாங்கள் அதைச் சொல்ல இயலாத நிலை இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறபோது Package Programme கொடுத்தும் எவ்வளவு பெரிய இழப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே நம்முடைய திரு. வேல்துரை சுட்டிக்காட்டியபோது நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள் எத்தகைய ஆசையோடு, எப்படிப்பட்ட திட்டத்தோடு, அனைத்து பரிந்துரைகளையும் ஏற்று வழங்கிய அந்தப் பணி முழுமையாகச்

செயல்படாமல் இருப்பது குறித்து நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்வதற்கு நீங்கள் விடமாட்டீர்களா? எல்லோரும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அவருக்கு இவர் உத்தரவு போடுகிறார். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்கெனவே அவருக்கு உத்தரவு கண்பார்வையிலே கொடுத்துவிட்டீர்களா என்றுதான் நான் அவரைக் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது Package Programme கொடுத்திருக்கிறோம், தொழிலாளர் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, தன்விருப்ப ஓய்வூதியத் திட்டத்தில் போகின்றவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதிலே சிலவற்றை cut down செய்த காரணத்தாலேயும் மற்றும் சில காரணங்களாலும் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். இப்போது தொழிலாளர்கள் எதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏனென்றால் ஒரு வருடமாக இதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவகையில் தொழிலாளர்கள் வேறுபடுகிறார்கள் என்பதை இங்கே அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அறியாதது ஒன்றும் நான் சொல்லவில்லை. இது நாட்டு நடப்பு. எப்படியாவது ஆலையை ஓட்ட வேண்டும் என்றுதான் 15 கோடி ரூபாயை நான் முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றேன். ஆனால் கடந்த ஆண்டு வரை நான் அதிலே எந்த அளவுக்கு மிச்சப்படுத்தி எப்படி அதை ஓட்டினேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். இதிலே 12 ஆயிரம் குடும்பங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை அடங்கியிருக்கிறது. ஆனால், உண்மையான நிலையை



வெளிப்படுத்துகின்ற நிலை இப்போதுதான் இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த இந்த 15 கோடி ரூபாய், ஒரு நல்ல பாடத்தை, ஒரு நல்ல படிப்பினையை, எதிர்காலத்திலே எப்படி நடத்த வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்குவதற்காகத்தான் உண்மையிலேயே பயன்பட்டிருக்கிறதேயொழிய வேறு அல்ல. இனிமேல்தான் நாங்கள் அந்த அடிப்படையிலே வேலை செய்யக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய ஆலையிலே 234 பேருக்கு இன்று தன்விருப்ப ஓய்வூதியத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த 234 பேரும் உங்களிடம் வந்து அதைச் சொல்லியிருக்கிறார்களா? அல்லது இவ்வளவு பேரைக் குறைத்திருக்கிறார்கள், பரவாயில்லை என்றாவது ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? ஆகவே, இந்த ஆலைகளை ஓட்ட வேண்டும் என்ற ஒரு நம்பிக்கையை உருவாக்குவதற்குத்தான் 7 கோடி ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி நீங்கள் ஏன் சற்றும் சிந்திக்கவில்லை. ஆகவே, நிச்சயம் நாங்களும் ஓட்ட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் ஓட்டினோம். சில நேரங்களில் தொழிலாளர்கள் அங்கே இருக்கின்ற Managing Directors-ஐ தொலைபேசியிலே, கையிலே பணத்தைக் கொடு என்று மிரட்டியதெல்லாம் உங்களுடைய ஆலையிலேதான் நடந்தது. நாங்கள் அதையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் இன்று 234 பேருக்கு தன்விருப்ப ஓய்வூதியத் திட்டம் கொடுத்திருக்கிறோம். அந்த ஆலையை நிச்சயமாக ஓட்டுகின்ற முடிவையும் நாங்கள் எடுத்திருக்கிறோம். இவற்றையெல்லாம் வெளிப்படையாகச் சொல்ல வாய்ப்பு இல்லாத காரணத்தால்தான் சொல்லக் கூடாது என்ற அடிப்படையிலேதான் நான் உங்களிடம் பல நேரங்களிலே ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையிலே இதிலே தெளிவான கருத்துகளை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன்.

அதேபோல, நூற்பாலையைப் பொறுத்தவரைக்கும், உங்களுடைய சந்தேகத்தை நான் நிவர்த்தி செய்திருக்கிறேன். அதைப் போல, பெரிய நூற்பாலைகளுக்கும், சிஸ்டா போன்ற அடிப்படையிலே இருக்கின்ற தனியார் நூற்பாலைகளுக்கும் பல சங்கடங்கள் இன்று ஏற்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்க்கின்ற விதத்திலேதான் நம்முடைய முதல்வர் அவர்கள், தொடர்ந்து கேட்டதன் காரணத்தால்தான் இன்று Technology Upgradation Fund-லே ஒரு நல்ல தொகை Spinning Sector-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இன்றுதான் அந்தச் செய்தி நமக்குப் புத்தக வடிவிலே வந்திருக்கிறது. அதை முழுமையாகப் படித்திருந்தால் இன்னும்கூட பல விவரங்களைச் சொல்ல முடியும். ஆனால், அதற்கு வாய்ப்பில்லை.

அதைப்போலத்தான் Co-optex. Co-optex-க்கு இந்த ஆண்டு இலாபம், ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாய். ஆனால், கடந்த ஆண்டு 19 இலட்சம் ரூபாய் இலாபம். இந்த ஆண்டு இந்த இலவச வேட்டி சேலையை 12 கோடி ரூபாய்க்கு வாங்கி அடுக்காமல் இருந்திருந்தால், 9 கோடி ரூபாய் இலாபம் வந்திருக்கும். இது எந்த அளவிற்கு Co-optex நிலையங்களைப் பாதித்திருக்கிறது என்றால், 327 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்தும், நாம் இலாபத்தை அடைய முடியவில்லை; ஈவுத் தொகை கொடுக்க முடியவில்லை என்றால், கடந்த காலத்திலே ஒரு சிலர் செய்த தவறே சில நிறுவனங்களை இந்த அளவிற்குக் கெடுத்திருக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். அதேபோலத்தான் பஞ்சாலைக் கழகத்திலே 11 இலட்சம் ரூபாய் இலாபம். அதேபோல, NABARD. இப்போது NABARD ஒதுக்கீடு என்பது தென் மாநிலங்களிலேயே நமக்கு இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினை; NABARD ஒதுக்கீட்டை வாங்குவதிலே இந்திய அளவிலேயே கட்டமைப்பு--infrastructure--நமக்குத்தான் இருக்கிறது. நம்மை யாரும் ஏமாற்றிவிட முடியாது. நமக்கு இல்லையென்று யாரும் நம்மைத் துரத்தி விடமுடியாது. காரணம் நமக்கு முன்பு இருந்த சில பெரியவர்கள், இந்த அமைப்புகளைப் பலமாக வைத்திருந்த காரணத்தால்தான். 1996-97ஆம் ஆண்டிலே மத்திய அரசு ஒதுக்கியதே ரூ. 759 கோடியே 44 இலட்சம். ஆனால், நம்முடைய கட்டமைப்பு பலமாக இருந்த காரணத்தால, அதில நாம் பெற்ற தொகை மட்டும் 427 கோடியே 1 இலட்சம் ரூபாய். அதைப்போல, 1997-98இல் மத்திய அரசு ஒதுக்கியது 743 கோடி ரூபாய். ஆனால், தமிழகம் அதிலே பெற்றது 419 கோடி ரூபாய். ஆகவேதான், டெல்லியிலே இருக்கின்றவர்கள் தமிழகத்திற்குச் சில சங்கடங்களை உருவாக்கினால், அதையும் எதிர்கொள்ளத்தக்க விதத்திலே, இந்த Technology Upgradation Fund-லே பெரிய அளவு நிதி வாங்கக்கூடிய சக்தி தமிழகத்திற்கு இருக்கின்றது என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இந்த 3000 கோடி ரூபாயைக் கடைசி நேரத்திலே அவர்கள் அறிவித்தாலும், 3000 கோடி ரூபாயிலே நாம்தான் அதிகம் பெறக்கூடிய வாய்ப்பு உருவாகின்ற நிலையிலேதான் இந்த அரசு பல திட்டங்களை, வழிமுறைகளை வகுத்து வருகிறது. அப்படி இல்லாவிட்டால், டெல்லியோடு நாம் போராடவும் முடியாது; போராடி நாம் வெற்றி பெறவும் முடியாது. அந்த அடிப்படையிலேதான், வரக்கூடிய அப்படிப்பட்ட எண்ணங்களையெல்லாம் கணக்கிட்டுத்தான், நேற்று இரவு வரை கூட நம்பிக்கை இல்லை-- நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கை நாளை பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்படுமானால் 1000 கோடி ரூபாய் கிடைக்கும் என்று சொன்னார்கள். நானும் தூங்கவில்லை. 25 ஆயிரம் கோடியிலே 3 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதே இதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே தான் வருகிறது. (குறுக்கீடு) Amendment இல்லை. There is no amendment. They have already accepted. It is an unanimous decision to pass it tomorrow.



பிற்பகல் 12-50

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காக மாண்புமிகு அமைச்சர் சொன்னதை ஒட்டி நான் ஒரு கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். நிதிநிலை அறிக்கையைப் பாராளுமன்றத்திலே நிறைவேற்றுவது என்பது ஒன்று. இன்னொன்று அரசியல் நிர்ணய சட்டத்தினுடைய திருத்தம். அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தால்தான் அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல சுமார் 1000 கோடி ரூபாய்க்கு நெருக்கமாகத் தமிழகத்திற்குப் பணம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, அந்த அரசியல் சட்டத் திருத்தமும் இப்பொழுது நிறைவேற்றப்படுமா? நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? சட்ட ரீதியாக வாய்ப்பு இருக்கிறதா? முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இயலுமானால் அதைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மத்திய நிதிநிலை அறிக்கையை எல்லோரும் ஏற்றுக்கொண்டு, நாளையோ, நாளை மறுநாளோ அதை நிறைவேற்றுகின்ற ஒரு காரணத்தால், நான் குறிப்பிட்ட அந்த 29 சதவிகிதம் மொத்த வரியில் நம்முடைய மாநிலப் பங்காக வரவிருக்கின்ற ஏறத்தாழ--arrears உள்பட, நிலுவை உள்பட-- 1000 கோடி ரூபாய் வருவதற்கு அதிலே வழியிருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் குறிப்பிட்டதைப்போலத் தனியாக அதற்கு ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, திருத்தத்தைச்

செய்தால்தான் அதைச் செய்ய முடியும். (குறுக்கீடு) அதற்கு அரசியல் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது. ஏற்கெனவே கடந்த அரசு இருந்தபோதும் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் நிதியமைச்சராக இருக்கும்போதும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் நிறைவேறுவதற்கு முன்பாக அந்த ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. இப்பொழுதும் அது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை சட்டம் இடம் கொடுக்குமேயானால் அனைத்து மாநிலங்களும் பயன்பெறத்தக்க அந்தச் சட்டத்தை, அந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு யாரும் ஆட்சேபணை செய்ய மாட்டார்கள். ஆகவே அதற்குரிய வழி இருக்குமானால் அதையும் நிறைவேற்ற நாம் வழிவகை காண வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள் கொண்டு வந்த திருத்தம் நாடாளுமன்றத்தில் வந்து நிறைவேறுவதற்கு முன்பாக ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள். இப்பொழுதும் நீங்கள் ஆட்சியைக் கலைத்துவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்காலத்தினுடைய முன்னேற்றத்தைக் கருதி, கைத்தறித் துறை யாரையும் நம்பி இருக்கக்கூடிய சூழ்நிலையில் இல்லாத அளவுக்கு சில அணுகுமுறைகளைக் கடைபிடிக்கவுள்ளோம். ஏற்கெனவே நாம் World Trade Organisation என்ற அமைப்பிலே கையெழுத்திட்டுவிட்டோம். தொடர்ந்து அது மாதத்தைக் கணக்கிலே வைத்துக்கொண்டு, உடனடியாகச் சந்தையிலே இருக்கின்ற பல பொருட்கள் நம் நாட்டிற்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே 2005-லே நிச்சயமாக உலகத்திலே இருக்கின்ற அத்தனை பொருட்களும் தமிழகத்தில், இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் விற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆனால் நமக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடம்; நல்ல தரமுள்ள துணி, குறைவான விலை என்ற அடிப்படையிலே நாம் எதிர்காலத்திலே செயலாற்றினால்தான் இந்தக் கைத்தறித் துறையைச் சீர்படுத்தமுடியும். அந்த அடிப்படையிலேதான் 100 கோடி ரூபாய் ஏற்றுமதித் திட்டம்



Direct Export or Deemed Export என்று வேறு சில தனியாரையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கும் நாம் எந்தவிதச் சங்கடமும் இன்றி ஏற்றுமதி அளவிலே சில சங்கங்களை அதற்கு என்று தனி அதிகாரம் தனி அந்தஸ்த்து கொடுத்து தமிழகத்திலே புதிய ஏற்றுமதி நிலையச் சங்கங்களை உருவாக்குகிற தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் அளவிலே அந்தத் திட்டம் இருக்க வேண்டும் என்றும் அடுத்த 2002-லே 100 கோடி ரூபாய் அளவிற்கு அந்தத் திட்டம் இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே இந்தத் துறையின் மூலம் உற்பத்தி செய்கிற சங்கத்திற்கு special category status என்ற வகையில் அதற்கு ஊதியம் சற்று உயர்த்திக் கொடுத்து செயல்படுவது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, இன்னும் நிறைய சொல்ல வேண்டியிருந்தாலும் அத்தனையையும் சொல்வதற்கு இங்கே வாய்ப்பு இல்லை. ஆகவே அறிவிப்புகளை நான் இங்கே அறிவித்து உங்களுடைய ஒப்புதலைப் பெறலாம் என்று கருதுகின்றேன். நான் ஏற்கெனவே ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று கருதினேன். World Trade Organisation -பற்றிப் பேசுகின்றபோது, கைத்தறித் துறை இப்படியே இருக்கிறதே, இதற்கு ஏதாவது வழிமுறை இல்லையா, கடந்த காலத்திலே எப்படியெல்லாம் இது இருந்தது என்பதைப் பார்ப்பதற்காக, நம்முடைய நூலகத்திற்குச் சென்று நான் பார்த்தேன். Salem Gazette-லே அன்றே இங்கிலாந்து நாடு நம்மைக் கண்டு எப்படி மிரண்டு இருக்கிறது என்பதை இதிலே தெரிவித்திருக்கிறார்கள்:

பிற்பகல் 12-55

"....The old time industries of the district, Salem, of which handloom weaving is by far the largest, flourished for centuries in the district, as elsewhere in India. Bales after bales of finest handloom manufactures and muslins, dyed with most tasteful oriental patterns were exported to the various parts of England and Europe. It is said that the demand for Indian handlooms becomes so great that in 1700 A.D., a law was passed in England, by which all roused with mixed stuffs and figured calicos manufactured in India were forbidden."— தவிர்க்கப்பட்டிருக்கிறது-- 1700 ஆம் ஆண்டிலே, சேலத்தின் துணிகளுடைய நேர்மை, தரம் இவையெல்லாம் ஐரோப்பிய மார்க்கெட்டிலே, அதற்கு ஏற்பட்ட மிகப் பெரிய ஆரவாரம், தேவை--ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக,

இங்கிலாந்து நாடே 1700-லே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்ற செய்தி இதிலே வந்திருக்கிறது. ஆனால், இன்று நாம் World Trade Organisation பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். நாம் இதற்காகச் சில திட்டங்களை வகுக்க வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல், இன்னொன்றும் சொல்லலாம். தனியார்கள் எந்தெந்த அளவுக்கு ஏழையெளியவர்களைச் சுரண்டினார்கள் என்பதற்கும் ஓர் ஒப்பந்தம்--திப்புசுல்தானும் East India Company-யும் போடப்பட்டு, சேலத்திலே நெசவாளர்களைப் பயன்படுத்தி கோடிகோடியாக சம்பாதித்ததையும், exploit செய்ததையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள்:

"The handloom weaving in Salem came in for attention by the State from very early times. Soon after the ratification of the treaty in 1792 between the East India Company and Thippu, Salem was selected by the Board, as a suitable place for establishing an investment and immediately efforts were made to exploit the textile industry."

இப்படி அந்தக் காலத்திலேயே கிழக்கிந்தியக் கம்பெனியே இந்த நெசவுத் தொழிலின் வளத்தை அறிந்து, அதிலே கொள்ளையடிக்க, சுரண்ட, அன்றே அதற்கான வழிமுறைகளை ஒப்பந்தத்தின் அடிப்படையிலே செய்கின்ற அளவுக்கு நம்முடைய கைத்தறித் துறை இருந்திருக்கிறது. இன்று இந்த அரசு எடுக்கின்ற முடிவு, அதுவும் குறிப்பாக, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் எடுக்கின்ற முடிவு நிச்சயமாக எதிர்காலத்திலே, நெசவாளர்கள் மற்றவர்களுக்கு ஈடு இணையாக, மற்றவர்களுக்குச் சமமாக வாழ்க்கைத் தரத்திலே திகழ்வார்கள் என்ற அடிப்படையிலேதான் பல நிகழ்வுகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அதையொட்டி நான் சில அறிவிப்புகளை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர் குழந்தைகளுக்கு, டாக்டர் எம்.ஜி.ஆர். நல நிதியிலிருந்து வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, நடப்பு நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்தப்படுகிறது:

மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம் ஆகிய தொழிற் கல்வி பயில்வோருக்கு அந்தந்தப் பாடப் பிரிவுகளில், தலா 2 மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 2,500/-லிருந்து ரூ. 3,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



B.Sc., (விவசாயம்), தோட்டக்கலை (Horticulture) மற்றும் B.Pharm ஆகிய தொழிற்கல்விக்கு, அந்தந்தபாடப் பிரிவுகளில் தலா 2 மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 2,000-லிருந்து ரூ. 2,500-ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டப் படிப்பு மற்றும் Polytechinc பயில்வோர்க்கு அளிக்கப்படும் உதவித் தொகை, தலா 2 மாணவர்களுக்கு ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேல்நிலைத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூ. 1,000-லிருந்து ரூ. 2,000- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பத்தாவது வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ. 1,000-லிருந்து ரூ. 1,500- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

M.A., M.Sc., M.Com., M.B.A., M.C.A. ஆகிய பாடப் பிரிவுகளில் படிக்கும் மாணவர்களில் தலா 2 பேருக்கு ரூ. 3,000- உதவித் தொகை இந்த நிதியாண்டு முதல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலத்தில் இயங்கிவரும் இந்திய கைத்தறித் தொழில்நுட்பக் கழகத்தில் 3 ஆண்டு பட்டயப் பயிற்சிப் படிக்கும் மாணவர்களுக்கான உதவித் தொகை முதலாண்டு ரூ. 200, இரண்டாவது ஆண்டு ரூ. 225, மூன்றாவது ஆண்டு ரூ. 250 என்று வழங்கி வருவது, வரும் கல்வியாண்டிலிருந்து மத்திய அரசினுடைய ஒப்புதலுடன் ரூ. 500-ஆக மாதம் ஒன்றுக்கு உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் குழந்தைகளுக்கு...(மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-00

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர். நல நிதி என்று சொன்னார்கள். எம்.ஜி.ஆர். அவர்களின் சொந்தப் பணத்திலிருந்து வந்த நிதியா அல்லது அரசாங்கமே அவருடைய பெயரால் ஏற்படுத்திய நிதியா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். Corpus fund என்ற அந்த அமைப்பு; அரசின் சார்பாக, அரசு கொடுத்த பணம்தான்; எம்.ஜி.ஆர். பெயரிலே வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஏனென்றால், எம்.ஜி.ஆர். ** வைத்திருந்தார். நல்ல காரியங்களுக்காக அவர் உயில் எல்லாம் கூட எழுதி வைத்திருந்தார். அதிலேயிருந்து ஒரு வேளை இது இருக்குமோ என்ற சந்தேகத்தினால்தான் நான் இதைக் கேட்டேன். அதனாலேதான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** அது அரசு பணம். அடுத்ததாக, நெசவாளர் குழந்தைகளுக்கு தொழில் நுட்பக் கல்வியளிக்க 510 நபர்களுக்கு 36.60 இலட்சத்தில் தேசிய ஆலை வடிவமைப்பு மையம், சென்னையில் கூட்டுறவுக் கல்வி நிதியின் உதவியால் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. சிறந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களால் நடத்தப்படும் 100 உறுப்பினர்களைக் கொண்ட 10 சங்கங்கள் தொடங்கப்படும். ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படும் விளிம்புத் தொகை 3,000-ல் செறிவுத் திட்ட நிதியிலிருந்து ரூ. 2000-மும், Co-optex லிருந்து ரூ. 1,000-மும் வழங்கப்படும்.

இந்திய கைத்தறித் தொழில்நுட்ப பயிற்சி மையத்திலிருந்து வெளிவரும் நெசவாளர் குடும்பத்தைச் சார்ந்த, சிறந்த ஒரு மாணவனுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-ஆக உயர்த்தி Co-optex வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இருக்கும்போது.....

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த தலைவர்களைப் பற்றி, அவர்கள்மேல் ஏதாவது தவறு வருகிற மாதிரி பேசுவது அவ்வளவு நல்லதல்ல. அவர் சொன்னபோதுகூட, எம்.ஜி.ஆர். ** வைத்திருந்தார் என்று சொன்னார். அதனை சபைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எம்.ஜி.ஆர். ** வைத்திருந்தார் என்று சொன்னால்தான் தப்பு.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்.** இல்லை, நான் சொன்னது என்னவென்றால், எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய கடைசி காலத்தில் தன்னுடைய பணத்தையெல்லாம் நல்ல காரியங்களுக்குச் செலவழிக்க வேண்டுமென்று உயில் எழுதி வைத்திருந்ததாக நாமெல்லாம் பத்திரிகையிலே செய்தி பார்த்தோம். நம்முடைய அரசு, அந்தப் பணத்தைப் பயன்படுத்தியதா என்று கேட்டேனே தவிர, எம்.ஜி.ஆர். பற்றித் தவறான கருத்து வரவேண்டுமென்று சொல்லவில்லை. எம்.ஜி.ஆர். மீது மிகுந்த மரியாதை உள்ளவன் நான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீது மிகுந்த மரியாதையை எதிர்க் கட்சித் தலைவர் வைத்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் கடைசி நேரத்திலே உயிலைப் பணத்திற்கு எழுதி வைக்கவில்லை. பணத்திற்கெல்லாம் உயிலை எழுதிவைக்கவில்லை. அவர் வைத்திருந்த வீட்டிற்கு, அவர் ஏற்கெனவே வாங்கியிருந்த குடியிருந்த இடம், வீட்டைத்தான் பிரித்து வைத்தாரே தவிர, பணத்தைப் பிரித்து உயில் எழுதவில்லை. ஆனால், அது தவறாக வரும் என்பதாலே அவரும் பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டார். **வைத்திருந்தார் என்பதைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்றுதான் இப்போது பெயர் இருக்கிறது. அதற்காக, எம்.ஜி.ஆரே அந்த சத்துணவுத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய்-- இப்போது ஏறத்தாழ 300, 400 கோடி ரூபாய் அதற்குச் செலவாகிறது என்றால்-- அதற்காக அவர் பணம் கொடுத்தார் என்று அர்த்தம் அல்ல. ஒரு அரசாங்கத்தினுடைய திட்டத்திற்கு அப்போதிருந்த முதலமைச்சருடைய பெயரால், அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலத்தான், இந்த நெசவாளர்களுடைய நலத்திற்காக, அரசின் சார்பில் அமைக்கப்பட்ட

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்த நல நிதிக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது அவருடைய பெயர் சூட்டப்பட்டிருப்பதாகத்தான் நான் கருதுகின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன ** என்ற அந்த வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுடைய வேண்டுகோளின்படி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடுவது நல்லது. அதை அவரும் ஒத்துக்கொண்டிருக்கின்றார்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்றால், அந்த வார்த்தை இருக்கும்-- இன்ன வார்த்தை சொன்னார், அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டார் என்று. அதனால் அவைக் குறிப்பிலேயே அந்த வார்த்தை இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருடைய ஒருமித்த கருத்து என்பதால், அவைக்குறிப்பிலே அந்த வார்த்தை இருக்காது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிற்சி மையத்திலிருந்து (குறுக்கீடு) அதைச் சொல்லிவிட்டேன், அதனை ஏற்கெனவே அறிவித்துவிட்டேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இருக்கும்போதே இறக்க நேரிடும் நெசவாளர் குடும்பத்திற்கு அரசு வழங்கிவரும் உதவித் தொகை ரூ. 35,000-லிருந்து ரூ. 40,000-ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்தத் தொகையுடன் கூடுதலாகத் தற்பொழுது-- Co-optex வழங்கிவரும் உதவித் தொகை ரூ. 5,000-ஐ ரூ. 8,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகளில் சிறந்த வடிவமைப்பிற்கு ரூ. 5,000 பரிசாக Co-optex வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பருத்தி ரகங்களில் சிறந்த வடிவமைப்பை வழங்கும் 3 சங்கங்களுக்கு தலா ரூ. 5,000 Co-optex வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 1-05

மத்திய அரசின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் Co-optex நிறுவனத்தால் இந்த ஆண்டு 39.05 இலட்சம் டெரிடவல் ஏற்றுமதி செய்யப்படும். சரகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் உதவி இயக்குநர்கள் அலுவலகத்திலும் சென்னையிலே இயக்குநர் அலுவலகத்திலேயும் நெசவாளர் குறை தீர்க்கும் நாள் சிறப்பாக நடைபெறும்.

நெசவாளர் குறை சம்பந்தமான கையேடு அனைத்துச் சங்கங்களுக்கும் வழங்கப்படும். இறுதியாக இலவச வேட்டி, சேலை உற்பத்தி மற்றும் அனைத்துத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் சிறப்பாகப் பணி செய்தமைக்காக அவர்களுக்கும், என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலையொட்டி இன்னும் சிறப்பாக எதிர்காலத்திலே இந்த நெசவாளர்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய பணிகளில் இந்த அரசு ஈடுபடும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து, Co-optex மேலாண் இயக்குநர், நம்முடைய கைத்தறித் துறையினுடைய இயக்குநர், செயலாளர் அனைவருக்கும் இதற்கு பூரண ஒத்துழைப்புத் தந்து சிறப்பாக இந்த நிர்வாகத்தை நடத்த உறுதுணையாக இருந்ததற்காக நன்றி தெரிவித்து எதிர்காலத்தில் நேர்மையாகவும், ஒளிவு மறைவு இன்றியும் இந்தக் கைத்தறித் துறை சிறப்பாக நடைபெற நீங்கள் தெரிவித்த பல கருத்துகளை நிறைவேற்றக்கூடிய பணிகளிலே இந்தத் துறை ஈடுபடும் என்பதைத் தெரிவித்து, உங்களுடைய வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு முழு மனதுடன் இந்த மானியத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 25--கைத்தறியும் துணித் தொழிலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25, கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர். ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 196,88,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (21-4-1999) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

144. 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (எண் 1) (வணிகம்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

145. 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (எண் 2) (வருவாய் வரவினங்கள்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

110. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் மக்கள் சாசனக் கையேடு. (தமிழ், ஆங்கிலம்)

111. மானியக் கோரிக்கை எண் 25--கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

112. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய சாதனைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

113. கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 1999. (தமிழ், ஆங்கிலம்).

# இணைப்பு

(56 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

**கோரிக்கை எண் 25--கைத்தறியும் துணித் தொழிலும்.**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000.**

## கைத்தறி மற்றும் துணிநூல், 1999-2000 ஆம் ஆண்டிற்கான கொள்கைகளும் திட்டங்களும்

### 1. முன்னுரை

1.01 கைத்தறி மற்றும் துணிநூல் துறை 1956-ம் ஆண்டு கூட்டுறவுத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, தனித் துறையாக இயங்கத் தொடங்கியது. இத்துறைக்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் துறைத் தலைவராக உள்ளார். தலைமை அலுவலகத்தில் பல்வேறு பதவி நிலைகளில் அலுவலர்களும், சரக அளவில் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்களும் துறைத் தலைவர் அவர்தம் பணியினை ஆற்ற உதவி புரிந்து வருகின்றனர். மொத்தம் உள்ள 18 சரக அலுவலகங்களில் இரண்டு சரகங்கள் துணை இயக்குநர்களை அலுவலகத் தலைவராகக் கொண்டும், மற்ற சரகங்கள் உதவி இயக்குநர்களை அலுவலகத் தலைவராகக் கொண்டும் இயங்கி வருகின்றன. தலைமை அலுவலகத்தில் இயக்குநருக்கு உதவியாக ஒரு கூடுதல் இயக்குநரும், மூன்று இணை இயக்குநர்களும், அதாவது ஒரு இணை இயக்குநர் கைத்தறி பொறுப்பிலும், மற்றொருவர் துணிநூல் பொறுப்பிலும் மூன்றாவது இணை இயக்குநர் சீருடை பொறுப்பிலும் உள்ளனர். நிதித்துறையின் துணைச் செயலர் பதவி நிலையில் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ஒருவரும், தொழிலாளர் துறையின் துணை ஆணையர் பதவி நிலையில் தொழில் உறவு ஆலோசகர் ஒருவரும் இயக்ககத்தில் உள்ளனர். துறையின் திட்டங்கள் முழுவதையும் திட்டமிட்டு வகுத்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்புகளை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கவனித்து

[1999 ஏப்ரல் 2

வரும் நிலையில், சரக அளவில் அரசின் கொள்கைக மற்றும் இயக்குநரின் உத்தரவுகளைச் செயல்படுத்துவதுட பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செய பாடுகளையும் சரக துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்க கண்காணித்து வருகின்றனர்.

1.02 "கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எ 25-ன் கீழ், 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பின்வரும் விவரப்படி ரூ. 196.88 கோ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியி

| கோரிக்கை எண் | திட்டம் சாராதது | திட்டம் சார்ந்தது | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநில அரசுத் திட்டம் | மைய அரசுத் திட்டம் | மைய அரசு உதவி | மொத்தம் |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 25. கைத்தறி மற்றும் துணிநூல் | 149.13 | 0.04 | 2.73 | 44.92 | 47.69 |

| திட்டம் மற்றும் திட்டம் சாராதது மொத்தம் | திரும்ப வசூலிப்பதை கூட்டுக | பெரு மொத்தம் |
|---|---|---|
| 7. | 8. | 9. |
| 196.82 | 0.06 | 196.88 |

1.03 நாட்டின் மரபு மற்றும் பண்பாடு ஆகியவற்றினை பாதுகாப்பதிலும் பொருளாதார வளர்ச்சியிலும் கைத்தறி தொழில் பெரும் பங்கினை வகிக்கிறது. நம்முடை கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் நீண்ட பாரம்பரி கலையாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது. நேர மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற் அடுத்தபடியாக முக்கியமான பொருளாதாரச் செயல்பாடா இத்தொழில் விளங்குகிறது.



1999 ஏப்ரல் 20]

1.04 நுகர்வோரின் தேவைக்கேற்ப புதிய வடிவமைப்புகளில் ரகங்களை உற்பத்தி செய்வதில் கைத்தறித் தொழிலில் சாதகமான சூழ்நிலை உள்ளது. இது தவிர, மிகக் குறைந்த மூலதனத்தில் இயற்கை சூழலுக்கேற்ப செயல்படும் தன்மையைப் பெற்றுள்ளது.

1.05 மாநில அரசின் சிறந்த முயற்சியின் காரணமாக விசைத்தறி மற்றும் ஆலை ஆகியவற்றின் எதிர்ப்பையும் மீறி கைத்தறித் தொழில் திறம்படச் செயல்படுகிறது. கைத்தறி நெசவாளர்கள் தற்சார்பு அடைவதை உறுதி செய்வதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது. மைய அரசுத் திட்டங்கள் உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதில் இது சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

1.06 மாநில துணி நெசவுத் தொழிலின் வரலாற்றில் முதன்முறையாக தமிழக அரசால் 1998 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மாநில துணி நெசவுக் கொள்கை, தற்போது கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது. கைத்தறித் தொழிலின் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தித் திறனை முழுமையாக எய்தல் மற்றும் அதிக வருவாய் ஈட்டுதலை, இந்த துணி நெசவுக் கொள்கை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. துணி நெசவுக் கொள்கையானது கைத்தறி, விசைத்தறி, ஆலை, பின்னலாடை ஆயத்த ஆடைகள் வளர்ச்சிக்கும் ஏற்றுமதிக்கும் உறுதுணையாக உள்ளது. பஞ்சு உற்பத்தியினை அதிகரித்தல், தரமான நூலினை உற்பத்தி செய்தல், பதனிடும் வசதியினை அதிகரித்தல், நிலையான ஏற்றுமதிக்கான வழிவகைகளை ஒவ்வொரு நிலையிலும் ஆராய்தல் ஆகியவை துணி நெசவுக் கொள்கையின் நோக்கங்களாகும். தமிழ்நாடு அரசின் துணி நெசவுக் கொள்கையினை முனைப்புடன் செயல்படுத்திடவும், இக்கொள்கையினை மதிப்பீடு செய்திடவும், அதே நேரத்தில் தேசிய துணி நெசவுக் கொள்கையுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதைக் கண்காணிக்கவும் மாநில அரசு "மாநில நெசவு பெருமன்றம்" ஒன்றினை அமைத்துள்ளது.

1.07 கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த போதிலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான

[1999 ஏப்ரல் 20

நூல் எப்பொழுதும் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து பணி கிடைப்பதை உறுதி செய்யவும் அவைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

1.08 துணி நெசவுத் தொழிலானது இந்தியாவின் மிக தொன்மையான தொழிலாகும். பெரிய அளவில் இயங்கும் தொழில்களில் ஒன்றான இத்தொழில், இந்தியாவின் பெரும் அன்னியச் செலாவணி ஈட்டும் தொழிலாகும். இந்திய பொருளாதார வளர்ச்சியில் துணித் தொழிலானது வெகுமுக்கியமான பங்கு வகிப்பதோடல்லாமல், அதிக அளவில் தொழில் வாய்ப்பினையும் நல்கிறது. தமிழ்நாட்டின் துணித் தொழிலானது பருத்தி உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், பஞ்சுவிலை ஏற்றம், போதிய அளவில் தரமுள்ள பஞ்சு கிடைக்காமை போன்ற இடர்பாடுகளை துணிநூல் தொழில் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த இடர்பாடுகளுக்கு இடையிலும் கூட்டுறவு நூற்பாலைகளின் முழுமையான உற்பத்தி காரணமாக கைத்தறி நெசவாளர்களின் பல்வேறு ரக நூல் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

1.09 மக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. தாராளமயமாக்கப்பட்ட உரிமமுறைகளினால் விசைத்தறித் தொழில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில், சுமார் 4.00 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன.

1.10 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி மற்றும் விசைத்தறி துணிகளை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், சங்கங்களின் சொந்தக் கிளைகள் மற்றும் விற்பனை முகவர்கள் வாயிலாகவும் விற்பனை செய்வதற்கு பல நடவடிக்கைகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கவும், நெசவாளர்கள் தொடர்ந்து



1999 ஏப்ரல் 20]

வேலைவாய்ப்புப் பெறவும், இந்தியாவின் முக்கிய நகரங்களில் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1.11 ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித்திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர்கள் வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத்திட்டம், கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை தமிழ்நாடு அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது.

1.12 தமிழ்நாட்டில் 801 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும் 650 சிறிய நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. தமிழகம் மகாராஷ்டிரா மற்றும் இதர மாநிலங்களிலுள்ள பின்னலாடைத் தொழில் மற்றும் விசைத்தறிகளுக்குத் தேவையான கூம்பு நூலையும், கைத்தறிகளுக்குத் தேவையான சிட்டா நூலையும் இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

**2. உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டதும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளும்**

2.01 துணிநூல் தொழிலில் ஏற்பட்டிருந்த தொய்வு காரணமாக, தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் கோ-ஆப்டெக்ஸிலும் அதிக அளவில் துணிவகைகள் தேக்கமடைந்தன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் பல்வேறு முறையீடுகள் பெறப்பட்டன. இதன் விளைவாக, துறை உயர் அலுவலர்கள் மற்றும் துறை சாராதவர்கள் அடங்கிய ஒரு உயர்மட்டக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டது. இக்குழு, கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் உள்ள பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று சரக்குத் தேக்கத்திற்கான காரணம் மற்றும் இதர பிரச்சினைகளை, ஆராய்ந்து, பல்வேறு பரிந்துரைகள் அடங்கிய ஒரு அறிக்கையினைச் சமர்ப்பித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து பரிந்துரைகளையும் ஏற்று, கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிரூட்ட 24 அம்ச நிவாரண

நடவடிக்கைகளை அறிவித்தார். இதன்மீது அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 24 அறிவிப்புகளும் துறையால் செயல்படுத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

(அ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய 1994-95 மற்றும் 1995-96ம் ஆண்டுகளுக்கான தள்ளுபடி மானிய நிலுவைத் தொகை ரூ. 43.25 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி 31-10-1998 முடிய வழங்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து மொத்தம் ரூ. 202.17 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொண்டுள்ளன.

(இ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானியத் தொகைகளை ஒவ்வொரு காலாண்டும் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. இந்த ஆணைக்கிணங்க, 1997-98ம் ஆண்டுக்கான தள்ளுபடி மானியத் தொகை முழுவதும் வழங்கப்பட்டதோடு, 1998-99ஆம் ஆண்டுக்கான முதல் இரண்டு காலாண்டுகளுக்கான (30-9-1998 வரை) தொகைகளும் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) நூல் விலை நிர்ணயம் செய்வதற்கென மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டு, அவ்வப்போது நூல் விலை மேற்படி குழுவின் கூட்டங்களில் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

(உ) மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான கைத்தறி ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, இக்குழு அவ்வப்போது கூடி நெசவாளர்களின் நலனுக்கென பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகிறது.





(ஊ) நெசவாளர்களின் பிரச்சினைகளை ஆராய மாவட்ட ஆட்சித் தலைவர்களை தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் நிதி உதவி செய்யும் வங்கிகள் மற்றும் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

(எ) நெசவாளர் இறந்தால் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ரூ. 25,000/-லிருந்து ரூ. 35,000/-ஆக உயர்த்தப்பட்டது.

(ஏ) முதியோர் ஓய்வூதியத் திட்டம், 60 வயதை அடைந்த அனைத்து கூட்டுறவு நெசவாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ஐ) வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் நெசவாளர்களுக்கு முறையாகச் சென்றடைவதை உறுதி செய்யும் வண்ணம் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

(ஒ) ரூ. 185.26 கோடி அளவிற்கு கூட்டுறவு நூற்பாலைகளின் புனரமைப்புக்கான ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. இதற்காக பல்வகை நிதிநிறுவனங்கள், நபார்டு, மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகள் முதலிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## கைத்தறிகள்

### 3. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 1,382 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 3.44 இலட்சம் கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 950.00 இலட்சம் மீட்டர் அளவுக்கு பல்வேறு வகைப்பட்ட கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறே

ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 400 கோடி அளவிற்கு இச்சங்கங்கள் விற்பனையை மேற்கொண்டு வருகின்றன. தமிழக அரசினால் திட்டப்படும் கைத்தறி நெசவாளர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நெசவாளர் நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் யாவும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக மட்டுமே கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

## 4. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

4.01 இந்தியாவில் பட்டுத் தொழில் பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே நடைபெற்று வருகின்றது. மரபு சார்ந்த கைத்தறிகளில் நெய்யப்படும் பட்டுச் சேலைகள் மற்றும் பட்டு வேட்டிகளினால் தமிழ்நாடு பெருமை பெற்று விளங்குகிறது. தமிழகத்தில் பட்டு கைத்தறிகள், தமக்கென ஒரு பெருமைக்குரிய சிறப்பிடத்தைப் பெற்றுள்ளதுடன், மேலைநாட்டு வணிகத்திலும் பெரும் பங்கு வகிக்கிறது. பட்டு கைத்தறி நெசவாளர்களின் நுண் திறத்தினால் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் மற்றும் சேலம் மையங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன. ''காஞ்சிபட்டு'' என அனைவராலும் அழைக்கப்படும் காஞ்சிபுரம் ரக பட்டுப் புடவைகள் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் புகழ்பெற்றுள்ளன. இருபக்க கரை, நுண்கலை வடிவங்கள், சேலை கரைகளில் கோர்வை நெசவு மறறும் கண்கவர் சரிகை வேலைப்பாடு போன்றவை காஞ்சிபுரம் பட்டுச் சேலையின் குறிப்பிடத்தக்கச் சிறப்புகளாகும்.

4.02 தமிழகத்தில் தற்போது 97 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 56,297 பட்டு கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் மட்டும் ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 160.00 கோடி மதிப்புள்ள 26.00 இலட்சம் மீட்டர் பட்டு ரக துணிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டு சுமார் ரூ. 180.00 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. தமிழக அரசு செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் இச்சங்கங்கள் வாயிலாக அவற்றில் உள்ள பட்டு கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.



4.03 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பட்டு ரக ஜவுளி உற்பத்திக்குத் தேவையான கச்சாப்பட்டு மற்றும் தயார்பட்டினை இதுவரை காஞ்சிபுரத்தில் உள்ள "டான்சில்க்" எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையத்திலிருந்து மட்டுமே கொள்முதல் செய்து வந்தன. அக்டோபர் 1997 முதல் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மேற்படி ''டான்சில்க்'' நிறுவனத்திலிருந்து மட்டுமல்லாது காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்தால் நடத்தப்படும் பட்டு ஏலத்தில் நேரடியாகப் பங்கேற்று பட்டு கொள்முதல் செய்திடவும் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆண்டொன்றுக்கு சுமார் 3.00 இலட்சம் கிலோ பட்டு நூலை உபயோகப்படுத்துகின்றன.

4.04 தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி இழையான சரிகைப் பட்டுப் புடவைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தியில் ஒரு முக்கியமான மூலப்பொருளாகும். பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 56,000 கிலோ கிராம் சரிகை தேவைப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலை ஆண்டொன்றுக்கு சுமார் 15,000 கிலோ கிராம் உற்பத்தி செய்து, சங்கங்களின் மொத்த தேவையில் 25 விழுக்காட்டினை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. எஞ்சிய சரிகைத் தேவைகளுக்கு, தமிழக அரசால் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மைய சரிகைக் கொள்முதல் குழு மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இக்குழு பிரதிமாதமும், அந்தந்த மாதத்தில் நிலவும் தங்கம் மற்றும் வெள்ளி விலைகளை அடிப்படையாகக் கொண்டு, சரிகைக்கான விலையை நிர்ணயிக்கிறது. இதுமட்டுமின்றி, குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரம் மற்றும் அளவின்படி சரிகை இருத்தல் வேண்டும். தமிழ்நாடு சரிகை ஆலையின் சோதனைக் கூடத்தில், சரிகையின் தரம் சோதனை செய்யப்படுகிறது. விநியோகம் செய்யப்பட்ட சரிகையின் தரம் குறைந்திருந்தால் சரிகை நிராகரிக்கப்படுகிறது. இவ்வாறான நடைமுறைகளின் காரணமாக சரிகையின் தரம் உறுதி செய்யப்பட்டு, இது பட்டுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு ரகங்களின் தரத்தில் பிரதிபலிக்கிறது.

[1999 ஏப்ரல் 20

## 5. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

5.01 தமிழகத்தில் தறியில்லாத ஏழை நெசவாளர்களின் குறைகளை நீக்கும் வகையில் மாநில அரசு தொழிற்கூட அமைப்பிலான தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியது. இத்தகைய தொழிற்கூடங்களில், நெசவாளர்களுக்குத் தறிகள் வழங்கப்பட்டு நூலும் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு மாநிலத்தில் அமைக்கப்பட்ட 190 சங்கங்களில், 134 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 11,014 தறிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் 1998-99 ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 61.13 இலட்சம் மீட்டர் மற்றும் 61.85 இலட்சம் மீட்டர் ஆகும். மேற்கண்ட 134 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிதிராவிடர்கள் மட்டும் பயன்பெறும் வகையிலும், 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் மட்டும் பயன்பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

5.02 மேற்படி தொழிலியல் சங்கங்கள் இலாபகரமாக இயங்கவும் கூடுதல் செலவினங்களைத் தவிர்க்கும் பொருட்டும், சங்கங்கள் நிலையான இலாப நோக்கோடு செயல்பட வாய்ப்பிருப்பின் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. இதுவரை 12 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 6. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல்

6.01 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ், மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவை மூலமாக சலுகை வட்டி விகிதங்களில் நிதியுதவி அளித்து வந்தன. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டியில் நடைமுறை மூலதனம் வழங்கியமைக்காக தமிழ்நாடு



1999 ஏப்ரல் 20]

மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியும் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் பகிர்ந்து கொள்ளும் வகையில் அரசால் 3% வட்டி மானியம் வங்கிகளுக்கு அளிக்கப்பட்டு வந்தன. கோ-ஆப்டெக்ஸ்க்கு விற்பனை மூலதனக் கடன் அளிப்பதற்கென தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு 1% மானியம் அளிக்கப்பட்டது. இந்த நடைமுறை 30-9-1996 வரை அமலில் இருந்தது. நபார்டு நிறுவனத்தின் வேண்டுகோளின்படி கைத்தறி வளர்ச்சி ஆணையர், புதுடில்லி அவர்களால் இந்நடைமுறை 1-10-1996 முதல் மாற்றியமைக்கப்பட்டது.

6.02 திருத்தியமைக்கப்பட்ட நடைமுறையின்படி, நடைமுறை மூலதனம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமான வங்கி வட்டி விகிதங்களிலேயே வழங்கப்படுகிறது. ஆனால், 3% வட்டி மானியம் அரசினால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நேரடியாக வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் நிதியாண்டில் அரசினால் வட்டி மானியம் ரூ. 559.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

6.03 தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) 1998-99 ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ. 448.13 கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித்துள்ளது.

6.04 தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தறி ஒன்றுக்கு 1998-99 ஆம் ஆண்டிலிருந்து அனுமதித்துள்ள நடைமுறை மூலதனத்தின் அளவு மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள மூலதனத்தின் அளவு பின்வருமாறு:

[1999 ஏப்ரல் 20

| வ.எண் | தறிகளின் வகை | தறி ஒன்றுக்கு 1998-99ஆம் ஆண்டுக்கு நிதி உதவி | 1999-2000 ஆம் ஆண்டுக்கு நபார்டு நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட நிதி உதவி |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | பருத்தி | 15,000 | 16,500 |
| 2 | தனி ரக பருத்தி | 25,000 | 27,000 |
| 3 | பட்டு | 33,000 | 38,000 |
| 4 | பாலியஸ்டர் | 25,000 | 27,000 |
| 5 | விசைத்தறி பருத்தி | 35,000 | 37,000 |
| 6 | விசைத்தறி பட்டு | 26,000 | 26,000 |
| 7 | விசைத்தறி பாலியஸ்டர் | 24,000 | 24,000 |

**7. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம்/தள்ளுபடி மானியத் திட்டம்**

7.01 தள்ளுபடி மானியத் திட்டத்திற்குப் பதிலாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ்க்கு உதவும் வகையில் மைய அரசு 1-4-1989-ல் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மைய அரசின் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் வழிமுறைகளின்படி, மொத்த நிதி உதவியில் 75% தள்ளுபடி மானியத்திற்கும் மீதம் 25% பின்வரும் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் :

(அ) வட்டி மானியம்.

(ஆ) காட்சியறைகள் அமைப்பதற்குத் தேவையான மூலதனம்/ விளிம்புத் தொகை.

(இ) மாநில மற்றும்/அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள்.



1999 ஏப்ரல் 20]

7.02 இதுவரை கைத்தறி துணி வகைகளில் விற்பனை மீதான தள்ளுபடிக்கு விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் மொத்த உதவித் தொகையில் 75%ம், இதர உள்கட்டமைப்பு வகைகளுக்கு 25%ம் பயன்படுத்தப்பட்டு வந்தன. மைய அரசின் திருத்தப்பட்ட வழிமுறைகளின்படி மொத்த நிதி உதவியில் தள்ளுபடி மானியத்திற்கு 1998-99ஆம் ஆண்டிற்கு, 50% நிர்ணயம் செய்யப்பட்டு, மீதமுள்ள 50% இதர உள்கட்டமைப்பு வகைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இது 1999-2000த்தில் இருந்து தள்ளுபடி மானியத்திற்கு மொத்த நிதி உதவியில் 25% என குறைக்கப்பட்டு மீதம் 75% இதர வகைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி, வழக்கப்படி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும்.

7.03 சாதகமற்ற சந்தை நிலவரத்தால் கைத்தறி விற்பனைக்கு அதிக நிதி உதவி தேவைப்படும். இத்தருணத்தில் திருத்தப்பட்ட வழிமுறைகள் கைத்தறித் தொழிலை மிகக் கடுமையாக பாதிக்கும் என்பதால் மாண்புமிகு பிரதமர் அவர்களை இப்பிரச்சனையில் தலையிட்டு, தற்போதுள்ள முறைப்படியே இவ்வருடத்திற்கு மட்டும் 75 விழுக்காடு தள்ளுபடி மானியத்திற்கு பயன்படுத்த வழிவகை செய்ய வேண்டும் எனவும் அடுத்த வருடத்திலிருந்து மாற்றப்பட்ட வழிமுறைகளை பின்பற்றலாம் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரியுள்ளார்கள்.

7.04 1998-99ஆம் ஆண்டுக்கு விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ், ரூ. 2097.55 இலட்சம் நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

7.05 விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் இம்மாநில அரசால், மைய அரசின் பங்கினையும் சேர்த்து, தள்ளுபடிக்காக அளிக்கப்பட்ட நிதியுதவி பின்வருமாறு :

| ஆண்டு | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | கோ-ஆப்டெக்ஸ் | மொத்தம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1994-95 | 2709.02 | 1376.53 | 4085.55 |
| 1995-96 | 2706.73 | 1392.82 | 4099.55 |
| 1996-97 | 2628.81 | 1456.74 | 4085.55 |
| 1997-98 | 2355.85 | 1456.74 | 3812.59 |
| 1998-99 | 9540.55 | 1965.85 | 11506.40 * |
| | மொத்தம் | | 27589.64 |

*மத்திய அரசின் நிதி உதவி பெறப்பட வேண்டும்.

**8 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி**

8.01 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸில் 31-3-1998ல் தேக்கமடைந்திருந்த சுமார் ரூ. 365.00 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை மூலம் கணிசமாகக் குறைக்கும் வகையில், அரசு தற்போது வழங்கப்படும் 20%, தள்ளுபடியுடன் கூடுதலாக 10% சிறப்புத் தள்ளுபடியும் அளித்து, 1-5-1998 முதல் 31-10-1998 முடிய விற்பனை மேற்கொள்ள ஆணை பிறப்பித்தது. இதன் பயனாக, 31-10-1998ல் ரூ. 202.17 கோடி (பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ்) மதிப்புள்ள சரக்குகள் விற்பனை செய்யப்பட்டன.

8.02 கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக லுங்கி ரகங்களில் தேக்கம் ஏற்பட்டது. லுங்கி உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளான கடலூர், குறிஞ்சிப்பாடி, குடியாத்தம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. எனவே, அரசு மேற்படி சிறப்புத் தள்ளுபடி சலுகையை (20% +10%) 31-10-1998ல் இருப்பில் இருந்த லுங்கி ரகங்களுக்கு மட்டும் 31-3-1999 முடிய நீடிப்பு செய்தது.



**9. இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்**

9.01 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும் கட்டுமர மீனவ ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும், கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து அரசு செயல்படுத்தி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 89.00 கோடி முன்பணமாக அரசால் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தேவைப்பட்ட சேலை மற்றும் வேட்டிகள் முழுவதும் தமிழகத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமே உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் துணிகள் உற்பத்தி செய்யும்பொழுது, அதன் நெய்தல் மற்றும் பதனிடுதல் ஆகியவற்றின் தரத்தினை பல்வேறு நிலைகளில் உறுதி செய்யப்பட்டு வருகிறது. எவ்விடத்திலிருந்தும் எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காமல் நிர்ணயம் செய்யப்பட்ட குறியீடு நாளான 31-12-1998க்கு முன்னதாக அதாவது 30-12-1998க்கு முன்னரே இலவச வேட்டி சேலைகள் விநியோகிக்க வழங்கப்பட்டன. 1999-ஆம் ஆண்டு பொங்கலுக்கான உற்பத்திக் குறியீட்டை முழுமையாக எய்தி, தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்பாகவே குறியீட்டை எய்தி விநியோகத்தை முடித்து இத்துறை சாதனை படைத்துள்ளது மட்டுமின்றி, தேவைப்படும் துணி வகைகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

9.02 2000ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான நடப்பு ஆண்டு உற்பத்தி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் தொடங்கப்பட்டுவிட்டது. பொங்கல் 2000க்குள் உற்பத்தி மற்றும் விநியோகத்தினை முடிக்க எல்லாவிதமான முயற்சிகளும் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**10. பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்**

10.01 சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் முதல் வகுப்பிலிருந்து

எட்டாம் வகுப்புவரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் 1985-86 ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நலத் துறையிடமும், தைத்த சீருடைகளை வழங்கும் பொறுப்பு கல்வித் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. துணிகளை வழங்கும் பொறுப்பு மற்றும் பட்டியல் மீது பணம் பெற்று வழங்கும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

10.02 1998-99 ஆம் ஆண்டிற்கு மொத்த சீருடைத் துணி தேவையான ரூ. 39.20 கோடி மதிப்பில் 124.15 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு முழுவதுமாக மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

10.03 இது தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைகளுக்கும் 1998-99ம் ஆண்டிற்கு ரூ. 5.71 கோடி மதிப்புள்ள 17.99 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச்சாலை அமைக்கும் திட்டம்

11.01 நெசவாளர்களின் வாழ்க்கையினை மேம்படுத்தும் பொருட்டு மத்திய அரசால் 1993-94ம் ஆண்டில் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டு 1993-94ஆம் ஆண்டு முதல் 1996-97 ஆம் ஆண்டு வரை 303 கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் 58 தரமான சாயச்சாலைகள் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் மேலும் ஒரு வருடம் அதாவது 1997-98 ஆம் ஆண்டிற்கு நீட்டிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 1993-94 முதல் 1997-98 வரை 324 கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் 36 தரமான சாயச்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. 1993-94 முதல் 1997-98 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்ட மற்றும் பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகை விவரம் பின்வருமாறு:



| ஆண்டு | கைத்தறி வளர்ச்சி மையம் | தரமான சாயச் சாலை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை | | | பெறப்படவேண்டிய நிலுவைத் தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மையம் | சாயச் சாலை | மொத்தம் | மையம் | சாயச் சாலை | மொத்தம் |
| | | | (ரூ. இலட்சத்தில்) | | | | | |
| 1993-94 | 30 | 6 | 239.320 | 12.000 | 251.320 | 60.680 | 13.590 | 74.270 |
| 1994-95 | 119 | 17 | 815.685 | 31.960 | 847.645 | 374.645 | 40.540 | 415.185 |
| 1995-96 | 99 | 5 | 271.240 | 9.580 | 280.820 | 718.746 | 11.745 | 730.491 |
| 1996-97 | 38 | 4 | 106.200 | 8.000 | 114.200 | 273.800 | 9.060 | 282.860 |
| 1997-98 | 38 | 4 | 108.070 | 8.000 | 116.070 | 271.830 | 9.060 | 280.890 |
| | 324 | 36 | 1540.515 | 69.540 | 1610.055 | 1699.701 | 83.995 | 1783.696 |

இத்திட்டம் 1998-99ம் ஆண்டிலிருந்து மைய அரசால் கைவிடப்பட்டது.

## 12. கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 1975-76 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு வீதம் தமது பங்காக செலுத்துகின்றனர். அவர்கள் பெறும் கூலியின் மீது மாநில அரசு ரூபாய்க்கு 4 காசு வீதம் தனது பங்காக வழங்கி வருகின்றது. இத்தொகை அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டு அதற்கு 7 விழுக்காடு வட்டி, மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 31-3-1999 நிலவரப்படி, 91,684 உறுப்பினர்கள் உள்ளனர். இத்திட்டத்தின்கீழ் 1998-99ஆம் ஆண்டிற்கு மாநில அரசு பங்காக ரூ. 265.00 இலட்சமும், 7 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ. 471.65 இலட்சமும் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 20

## 13. கைத்தறி நெசவாளர்கள் குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

13.01 நெசவாளர்களின் வீடு, நெசவு உபகரணங்கள் போன்றவற்றிற்கு ஏற்படும் இழப்பு மற்றும் அவர்களுக்கு விபத்தினால் மரணம் ஏற்பட்டால் பாதுகாப்பு வழங்கும் வகையில் புதிய காப்பீட்டுத் திட்டத்தை மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் விபத்தில் மரணமடையும் நெசவாளர்களுக்கு மட்டுமே பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதால், இத்திட்டத்தில் பங்கு பெறுவதில்லை என்று முடிவு செய்த தமிழ்நாடு அரசு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள குழு காப்பீட்டுத் திட்டத்தினை தொடர்ந்து 1998-99 ஆம் ஆண்டும் செயல்படுத்த வேண்டும் என மைய அரசைக் கோரியது. எனவே, தமிழ்நாடு அரசின் சுய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு காப்பீடு திட்டத்தினைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைக்காமல் மாநில அரசே செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திலுள்ள நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக ரூ. 35,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முனைமத் தொகைக்கான மைய அரசின் பங்கு ஒவ்வொரு வருடமும் கோரப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 1998-99ஆம் ஆண்டிற்கு மைய அரசின் பங்காக ரூ. 37,44,400/- தற்போது விடுவித்துள்ளது.

13.02 தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை 1-5-1998 முதல் ரூ. 25,000/-லிருந்து ரூ. 35,000/- ஆக உயர்த்தியது. 1-4-1999 முதல் இத்தொகை ரூ. 40,000/ -ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளார்கள்.

## 14. மைய சிக்கன நிதித் திட்டம்

மைய சிக்கன நிதித் திட்டமானது மாநில அரசினால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையான ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், நெசவாளர் தாம் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு தவிர மைய அரசு தனது பங்காக ரூபாய்க்கு 4 காசு வீதம் அளிக்கின்றது. மைய அரசின் 4 விழுக்காடு பங்குத் தொகையும் அரசு கணக்கில்



1999 ஏப்ரல் 20]

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இட்டு வைக்கப்பட்டு அதற்கும் 7 விழுக்காடு வட்டி மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 485.49 இலட்சம் வழங்கக் கோரி பிரேரணைகள் அனுப்பப்பட்டதில், மைய அரசு ரூ. 244.34 இலட்சம் மட்டும் விடுவித்துள்ளது. மீதமுள்ள தொகையான ரூ. 241.15 இலட்சத்தை உடன் விடுவிக்குமாறு மைய அரசினை மாநில அரசு கோரியுள்ளது.

## 15. நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்

15.01 நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் மானிய உதவியுடனும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு கழகத்தில் கடன் தொகையையும் பெற்று செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டு முதல் மத்திய அரசும் பங்கேற்று மானியம் வழங்கி வருகின்றது. ஒரு தறிக்கூடத்துடன் கூடிய வீடு அமைக்க தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:--

| | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| | (ஒரு தறிக்கூடத்துடன் | கூடிய வீட்டுக்கு) |
| ஹட்கோ கடன் | 25,000 | 25,000 |
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மத்திய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| பயனீட்டாளர் பங்கு | 3,000 | 5,000 |
| மொத்தம் | 53,000 | 57,000 |

15.02 இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்பும் ஏற்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டு மத்திய அரசின் திருத்திய விதிமுறைகளின்படி 1,200 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட முதல் தவணையாக ரூ. 140.06 இலட்சம் (மைய அரசு ரூ. 110.06 இலட்சம், மாநில அரசு ரூ. 30.00 இலட்சம்)

[1999 ஏப்ரல் 20

மானியமாக வழங்கி உள்ளது. மைய அரசு இரண்டாம் தவணையாக ரூ. 108.76 இலட்சம் விடுவித்துள்ளது. இதனையும் மாநில அரசு தனது பங்கான ரூ. 30.00 இலட்சத்துடன் சேர்த்து ரூ. 138.76 இலட்சம் விடுவித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டுக்கு 920 வீடுகளுடன் கூடிய தறிக்கூடம் அமைக்க ரூ. 116.24 இலட்சம் (மைய அரசு பங்காக ரூ. 84.04 இலட்சமும், மாநில அரசு பங்காக ரூ. 32.20 இலட்சமும்) 50 விழுக்காடு மானியமாக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

15.03 வீட்டுடன் கூடிய தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தைத் தவிர ஏற்கெனவே வீடுகள் உள்ள நெசவாளர்களுக்கு தறிக்கூடம் அமைக்க மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. கிராமப் பகுதியில் ஒரு தறிக்கூடம் அமைக்க ரூ. 7000-ம் நகர்ப்பகுதியில் ஒரு தறிக்கூடம் அமைக்க ரூ. 10,000-ம் மானியமாக வழங்கப்படுகிறது. 1,560 தொழிற்கூடங்கள் அமைக்க நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அதில் முதல் தவணையாக ரூ. 55.92 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 16. கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு செறிவுத் திட்டம்

16.01 நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தோடு 100 விழுக்காடு மானியத்துடன் உள்ளமைப்போடு கூடிய ஆரம்ப சுகாதார மையங்களும் அமைக்க நல்வாழ்வு செறிவுத் திட்டம் 1992-93 ஆம் ஆண்டு முதல் மைய அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது:--

மருத்துவச் செலவினங்களை திரும்ப வழங்குதல்.

கண் சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்ப வழங்குதல்.

குடிநீர் வழங்குதல்

மகப்பேறு உதவி

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஈட்டுத் தொகை.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள்.



1999 ஏப்ரல் 20]

16.02 1998-99 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 143.95 இலட்சத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு, அவற்றில் மைய அரசு முதல் தவணையாக ரூ. 71.96 இலட்சத்தை விடுவித்துள்ளது. மீதமுள்ள தொகை மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## 17. தமிழ்நாடு நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

17.01 கூட்டுறவுச் சங்கத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் கைத்தறி நெசவாளர் "தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" என்ற புதியத் திட்டத்தினை 1-1-1992 முதல் செயல்படுத்தும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் 5 வருடங்கள் உறுப்பினராக இருந்த எந்த ஒரு நெசவாளரும் சங்க மொத்த உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட ரகத் துணியில் சங்க வருடாந்திர உற்பத்தியில் 75 விழுக்காடு சராசரி உற்பத்தி செய்திருப்பின், அவர் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார். இத்திட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் 60 வயதுக்குள் இறக்க நேரிட்டால் அவரது மனைவி/கணவன்/வயது வராத மகன்/திருமணமாகாத மகள்/ விதவை மகள்/விதவை மருமகள்/தாயார்/தகப்பனார் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாரேனும் ஒருவருக்கு பிரதி மாதம் ரூ. 250/- வீதம் உறுப்பினர் இயற்கை எய்திய நாளிலிருந்து 10 வருடங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

17.02 இத்திட்டத்தில் 31-03-1999 வரை 31,190 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு, 376 நெசவாளர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம் பெறுகின்றன.

## 18. கூட்டுறவு நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருந்து சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் பங்கேற்றவர்கள் 60 வயது முதிர்ந்த பிறகு ரூ. 150/-ஐ முதியோர் ஓய்வூதியமாக பெறத் தகுதியுடையவராகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் பங்கேற்க தகுதி பெற்றுள்ளன. 60 வயது எய்திய நெசவாளர்களுக்கு இத்திட்டம் 1-4-1997 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான

விதிகளின்படி இத்திட்டத்திற்காக ஏற்படுத்தப்படும் நிதியினை நிர்வகிக்க பொறுப்பாட்சி குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1738 நெசவாளர்கள் பயன்பெற்றுள்ளனர். அரசு ஓய்வூதியம் வழங்குவதற்கு ரூ. 52.50 இலட்சம் இதுவரை வழங்கியுள்ளது. மேலும் 846 நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

## 19. காட்சியறை நவீனப்படுத்தும் திட்டம்

19.01 இத்திட்டத்தின் கீழ் கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்த வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறைகளைப் புதுப்பிக்கவும், அழகுபடுத்தவும் மற்றும் குளிர்சாதன வசதி அளிக்கவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

19.02 இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு 1996-97 ஆம் ஆண்டுவரை 113 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயனடைந்துள்ளன.

19.03 1997-98ஆம் ஆண்டிற்கு 9 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் வளாகத்திலுள்ள 41 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் காட்சியறை நவீனப்படுத்த ரூ. 50.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்கு கோவை விற்பனை வளாகத்திலுள்ள 30 காட்சியறைகள் மற்றும் கோ-ஆப்டெக்ஸின் காட்சியறைகளை நவீனப்படுத்த ரூ. 50.00 இலட்சம் மானியம் அரசு வழங்கியுள்ளது.

## 20. செறிவுத் திட்டம்

20.01 கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பும் நல்ல கூலியும் கிடைக்கும் பொருட்டு மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செறிவுத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

20.02 மத்திய அரசின் கொள்கைப்படி செறிவுத் திட்டம் வணிகம் மற்றும் வணிகம் சாராதது என இரு இனங்களைக் கொண்டதாகும். புதிய தறிகள் வழங்குதல், கிடங்குகள், விற்பனை நிலையங்கள், பொதுச் சேவை மையங்கள் மற்றும்



சிறிய சாயச்சாலை அமைத்தல் ஆகிய வணிக இனங்களுக்கு 50 விழுக்காடு கடனும் 50 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. வணிகம் சாராத இனத்தின்கீழ், தொழிற்கூடங்களுக்கு மின்வசதியளித்தல், தறி உபகரணங்கள் வழங்குதல், நடைமுறை மூலதனத்திற்கான விளிம்புத் தொகை, விளம்பரம் மற்றும் புதிய வடிவமைப்புகளை புகுத்துதல் போன்றத் திட்டங்கள் அடங்கும். வணிகம் சாராத இனங்களுக்கென மானியமாக வழங்கப்படும் நிதியுதவியை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற அடிப்படையில் வழங்குகின்றன. மேலும், ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத்தொகை வழங்குதல் மற்றும் தொழிற்கூடம் கட்டுதல் போன்றவற்றிற்கு 100 சதவீத நிதியும் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

20.03 1998-99 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு இத்திட்டத்திற்கென ரூ. 383.58 இலட்சம் ஒப்புதல் அளித்து, இதில் முதல் தவணையாக ரூ. 188.55 இலட்சம் மானியமாக விடுவித்துள்ளது.

## 21. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

21.01 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி ஆதாரத்தினை வலுப்படுத்தும் பொருட்டு, சாயக்கூடம், கிடங்கு மற்றும் காட்சியறை கட்டுதல் போன்றவற்றிற்கென விளிம்புத் தொகை மாநில அரசின் மூலமாக தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது.

21.02 1998-99 ஆம் ஆண்டில் மாவட்டவாரியாக வழங்கப்பட்ட ஒப்பளிப்பு விவரம் பின்வருமாறு:

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 69.10 |
| 2. | காஞ்சிபுரம் | 15.00 |
| 3. | இராமநாதபுரம் | 26.00 |
| | மொத்தம் | 110.10 |

[1999 ஏப்ரல் 20

## 22. ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம்

கிராம அடிப்படையிலான பரந்த அணுகுமுறையாக கிராமங்களைத் தத்தெடுக்கும் திட்டத்தினை மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் போதிய அடிப்படை வசதிகளும், சாலை வசதிகளும் இல்லாத மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு அவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படும். இதுவரையில், இதுபோன்ற 13 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 148.17 இலட்சம் வளர்ச்சிக்காக மத்திய அரசு மானியம் வழங்கியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு வரையில் ரூ. 129.72 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 1998-99-ல், திண்டுக்கல்லில் உள்ள கள்ளிப்பட்டி கிராமத்திற்கு ரூ. 11.45 இலட்சமும், கரூர் மாவட்டத்திலுள்ள கே.பிச்சம்பட்டி கிராமத்திற்கு ரூ. 26.40 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் செறிவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 23. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

23.01 கைத்தறித் துணி வகைகளில் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் அயல்நாட்டு சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்தவும், தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

23.02 சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு விருது வழங்கும் திட்டத்திற்காக அரசு ஆண்டுதோறும் ரூ. 22,500/- வழங்கி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ஐந்து ஏற்றுமதியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 1033.31 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 1621.81 கோடியாக உயர்ந்துள்ளது.

23.03 1996-ஆம் ஆண்டு முடிய பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 1997-ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 1999 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளன.



99 ஏப்ரல் 20]

## 4. ஆலைவாயில் விலையில் நூல் வழங்கும் திட்டம்

4.01 கைத்தறி நெசவாளர்களுக்கு ஆலைவாயில் விலையில் நூல் வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்று மைய அரசால் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கென தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் சிறப்பு முகவராக நியமிக்கப்பட்டு மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு ஆலைவாயில் நூல் விலையில், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கு என இரண்டு விழுக்காடு தொகையைக் குறைத்து சலுகை விலையில் நூல் வழங்கி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டிலிருந்து பருத்தி, விஸ்கோஸ், ரேயான், கலப்பு ரக நூலிழைகள் (Blends) கம்பளி, அக்ரிலிக் மற்றும் பாலியஸ்டர் ரக நூலிழைகளுக்கு வழங்கப்படும் நூலின் மதிப்பில் 4 விழுக்காடு மானியத்தை தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மீளப்பெறும் வகையில் இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதில் 1 விழுக்காடு கோ-ஆப்டெக்ஸ்க்கு போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த 1 விழுக்காட்டில், கோ-ஆப்டெக்ஸ் 0.5 விழுக்காட்டை நிறுத்தி வைத்துக்கொண்டு, எஞ்சிய 0.5 விழுக்காட்டை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு போக்குவரத்து மற்றும் ஏற்றி, இறக்கும் செலவினங்களுக்கு வழங்குகிறது.

24.02 இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 5482.74 இலட்சம் மதிப்புள்ள 3125.28 இலட்சம் கிலோ பருத்தி சிட்டா நூல் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

## 25. கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம், 1985

25.01 கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் பாதுகாக்கும் வகையில், விதிமுறைகள் மைய அரசினால் வகுக்கப்பட்டு, 22 ரகங்களை கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீட்டினை எதிர்த்து, நாட்டின் பல்வேறு மாநில உயர்நீதிமன்றங்களிலும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த ரிட் மனுக்களை ஒருசேர விசாரித்த உச்சநீதிமன்றம் அனைத்து

ரிட் மனுக்களையும் தள்ளுபடி செய்ததுடன், கைத்தறிக்கென 22 ரகங்களை ஒதுக்கீடு செய்தது செல்லும் என உறுதிப்படுத்தியது. ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 26-7-1996 ஆம் தேதியிட்ட ஆணையில் மைய அரசு 22 ரகங்களை 11 ரகங்களாக குறைத்தது.

25.03 கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் 1985-ஐ முனைப்புடன் செயல்படுத்த தலைமையிடத்தில் ஒரு துணை இயக்குநரும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், மதுரை ஆகிய இடங்களில் உதவி இயக்குநர் நிலையில் அலுவலக தலைவராகக் கொண்ட சரக அலுவலகங்கள் கொண்ட பிரத்தியேக அமலாக்க பிரிவு ஒன்றினைத் தொடங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

25.04 1998-99 ஆம் ஆண்டிற்கு விசைத்தறிகள் ஆய்வு செய்வதற்கு 6,000 என கைத்தறி வளர்ச்சி ஆணையர், புதுடெல்லி அவர்களால் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரையில் 24,312 விசைத்தறிகள் அமலாக்கப் பிரிவு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி, 1985 ஆம் ஆண்டு கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தை மீறிய விசைத்தறி உரிமையாளர்கள் மீது 15 முதல் தகவல் அறிக்கைகள் சம்பந்தப்பட்ட காவல் துறை அலுவலகங்களில் உதவி அமலாக்க அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

25.05 இதுமட்டுமின்றி, விசைத்தறிகள் பெருமளவில் உள்ள பகுதிகளில் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம், 1985 குறித்து விளக்குவதற்காக தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

25.06 கைத்தறி ரக ஒதுக்கீடு விதிமுறைகளை மீறும் விசைத்தறியாளர்களைக் கண்காணித்து, சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தவும் உதவி அமலாக்க அலுவலர்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

## 26. கைத்தறி விற்பனை வளாகங்கள்

26.01 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி மற்றும் பட்டு ரக துணிகளின் விற்பனையை அதிகரிக்கவும் கைத்தறி நெசவாளர்களுக்கு



தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும் கீழ்க்கண்ட இடங்களில் கைத்தறி விற்பனை வளாகங்கள் இத்துறையால் அமைக்கப்பட்டுள்ளன:

1. காஞ்சி கூட்டுறவு பட்டு, சென்னை.
2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை வளாகம், அண்ணாநகர், சென்னை.
3. எழுகடல் கைத்தறி விற்பனை காட்சியறை, மதுரை.
4. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், பாண்டிச்சேரி.
5. கைத்தறி விற்பனை வளாகம், கொச்சி.
6. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், தருமபுரி.
7. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், கோவை.

26.02 அனைத்து ரக கைத்தறித் துணிகளையும் வாடிக்கையாளர்கள் ஒரே இடத்தில் வாங்கவும், கைத்தறித் துணி விற்பனையை அதிகரிக்கவும் கோயம்புத்தூர் விற்பனை வளாகம் அமைக்க அரசு ரூ. 22.07 இலட்சம் வழங்கியுள்ளது. கோவை தேவாங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் 6,810 சதுர அடியில் இவ்விற்பனை வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்விற்பனை வளாகத்தின் கட்டுமானப் பணி தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இவ்வளாகம அடித்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகிய பகுதிகளில் 30 கடைகளைக் கொண்டது.

26.03 இத்துறையால் கைத்தறி விற்பனை வளாகம், சென்னை எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 27-10-1997 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில் 38 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் 34 காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் மூன்று அங்காடிகளை நிறுவியுள்ளது. சாதாரண துண்டு முதல் விலையுயர்ந்த பட்டுச் சேலைகள் வரை அனைத்து கைத்தறி ரகங்களும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் விற்பனை

செய்யப்படுகின்றன. இவ்வளாகம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வளாகத்தின் செயல்பாடு துறையால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## விசைத்தறிகள்

### 27. துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்தல்) ஆணை, 1993

*27.01* துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்தல்) ஆணை, 1993, 2-4-1993 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து விசைத்தறி பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் முறை மற்றும் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்படும் முறை நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக, தகவல் குறிப்பு ஒப்புதல் வழங்கும் முறை கொண்டு வரப்பட்டது. ஒரு தகவல் குறிப்புக்கு ரூ. 1,000/- என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தொகை "விசைத்தறி பதிவு நிதி" என்ற பெயரில் கேட்பு வரைவு மூலமாக அரசுக்குச் செலுத்தப்பட வேண்டும். தறியின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல் ஒரு தகவல் குறிப்புக்கு என தொகை செலுத்தப்பட வேண்டும். இதற்கு ஒப்புகை கடிதம் படிவம் 2-ல் இத்துறையின் மூலம் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுகிறது.

*27.02* தமிழ்நாட்டில் தற்போது, 3.13 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. மேலும், 21,701 விசைத்தறிகள் கொண்ட 142 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 8 சங்கங்கள் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும்.

### 28. விசைத்தறி பதிவு நிதி

*28.01* 1994 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் விசைத்தறி பதிவு நிதி ஒன்றை உருவாக்க தமிழக அரசு ஆணையிட்டது. அதன் நிர்வாகக் குழு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. விசைத்தறி பதிவு மற்றும் புதுப்பித்தலுக்கு கட்டணமாக வசூலிக்கப்பட்டு, அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை முழுவதும் மாற்றம் செய்து இந்நிதியைத் தொடங்க அரசு ஆணையிட்டது. இதற்கு பிறகு பெறப்படும் தொகை யாவும் இந்த நிதியிலேயே செலுத்தப்பட்டு வருகிறது. இத்தொகை, வங்கிகளில் குறுகிய கால முதலீடுகளாக இட்டு வைக்கப்பட்டுள்ளது.





*28.02* விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி அளித்தல், விசைத்தறி பணி மையங்களை அமைத்தல், விசைத்தறிகளுக்கான வடிவமைப்பு மையங்களை அமைத்தல், நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பதனிடும் அமைப்புகளை நிறுவுதல், கிடங்குகளைக் கட்டுதல், விசைத்தறித் துணி விற்பனைக்கு காட்சியறை நிறுவுதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்கள் அமைத்தல், விசைத்தறிகளை நவீன மயமாக்க உதவுதல் போன்ற பணிகளுக்கு விசைத்தறி பதிவு நிதி செலவிடப்படும்.

## துணிநூல்

### 29. தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலின் தற்போதைய நிலை

*29.01* ஜவுளித் தொழில் முழுவதும் தற்பொழுது கடும் நெருக்கடி நிலையைச் சந்தித்து வருகிறது. தெற்காசிய நாடுகளில் சமீபத்திய நாணய நெருக்கடியினால் தமிழ்நாட்டின் ஜவுளித் தொழில் மிகவும் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டது.

*29.02* தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கம் உடனடி நிவாரணம் கோரி மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதல்வரிடம் அளித்தது. ஜவுளித் தொழிலின் பின்னடைவுக்கான காரணம் மற்றும் தனியார் நூற்பாலைகளின் நிலை இவற்றை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04-08-1998 அன்று மாண்புமிகு கைத்தறி அமைச்சர் மற்றும் தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினை மத்திய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்க அனுப்பி வைத்தார். ஜவுளித் தொழிலின் தற்போதைய நெருக்கடி நிலையைத் தவிர்க்க தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கம் பல்வேறு கோரிக்கைகளுக்கிடையே தமது தவணை கடந்த வட்டியினைச் செலுத்த நிதியுதவியும் மற்றும் நடப்பு வட்டியினை 10 சதவிகித

[1999 ஏப்ரல் 20

தனி வட்டியில் மூன்று ஆண்டுகளுக்கு காலக்கடனாக மாற்றியமைக்கவும், நிவாரணம் கோரும் காலத்திற்கு ஒப்பந்த வட்டியிலிருந்து 2% குறைத்து வசூலிக்கவும் குறுகிய கால நிவாரண நடவடிக்கைகளாகக் கோரியுள்ளது.

29.03 04-08-1998 அன்று புதுதில்லியில் நடைபெற்ற மாநில கைத்தறி அமைச்சர்கள் கூட்டத்தில் நமது மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் ஜவுளித் தொழில் விரைவில் புத்துயிர் பெற தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி, பருத்தி தொழில்நுட்பக் குழு ஆகியவற்றை அமைக்க வலியுறுத்தினார். மேலும், அவர் மேற்படி நிதியுதவி ஜவுளித் தொழிலின் நூற்பு, உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் மதிப்பு கூடும்வண்ணம் பஞ்சு முதல் ஆடை வரை இத்தொழிலின் அனைத்து நிலைகளுக்கும் வழங்கிட வேண்டும் என வலியுறுத்தினார்.

29.04 மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஜவுளித் தொழில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை புதுதில்லியிலுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுடன் விவாதித்ததோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 15-09-1998 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது மேற்படி பிரச்சினைகளை உள்ளடக்கிய விவாதக் குறிப்பு ஒன்றினையும் அளித்தார்.

29.05 மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜவுளித் தொழில் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை விவாதிக்க 26-09-1998 அன்று ஆலை உரிமையாளர் பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட கூட்டம் ஒன்றினைக் கூட்டினார். அக்கூட்டத்தில் 5 இலட்சம் பேல் அளவிற்கு பஞ்சு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு மேற்கொண்டதாக கூறப்பட்ட முடிவு தற்போதைய நெருக்கடி நிலையினை மேலும் தீவிரமாக்கக்கூடும் என்று எடுத்துரைக்கப்பட்டது. எனவே, தற்போதைய ஜவுளித் தொழிலின் நெருக்கடி நிலையினைக் கருத்திற்கொண்டு மேற்படி முடிவினைக் கைவிடுமாறு மத்திய ஜவுளித் துறை அமைச்சருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

29.06 மேலும், நூற்புப் பிரிவிற்கும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி கிடைக்க வழிவகை செய்யுமாறு



1999 ஏப்ரல் 20]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 30. தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளின் செயல்பாடுகள்

தொழில் வளர்ச்சியிலும், பெருமளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. பருத்தி நூற்பும், பருத்தி நூல் சார்ந்த தொழிலும் தமிழ்நாட்டின் துணிநூல் தொழிலின் சிறப்பு அம்சமாகும். தமிழ்நாட்டில் 801 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும், சுமார் 650 சிறிய அளவிலான நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. 801 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளில், 18 கூட்டுறவு நூற்பாலைகளும், தேசிய துணிநூல் கழகத்தைச் சேர்ந்த 17 ஆலைகளும், 25 நூல் மற்றும் துணி உற்பத்தி ஆலைகளும் அடங்கும். நடுத்தர மற்றும் பெரிய நூற்பாலைகள் 11.69 மில்லியன் கதிர்களுடன் சுமார் 1.96 இலட்சம் தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. வேலைவாய்ப்பு அளித்தல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார மற்றும் வணிக நடவடிக்கையில் தனியார் நூற்பாலைகள், முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தொழிலின் மூலம் வருவாய் ஈட்டுவதுடன் ஏற்றுமதி வாயிலாக அன்னியச் செலாவணியை ஈட்டவும் இத்தொழில் உறுதுணையாக உள்ளது.

## 31. கூட்டுறவு நூற்பாலைகள்:

31.01 தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன:

1. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம்.
2. வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அரியூர்.
3. தென்ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, சாரம்.
4. கரூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, கரூர்.
5. நாகப்பட்டினம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு.

6. புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி.
7. சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, சேலம்
8. ஈரோடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம்
9. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை.
10. மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, மேலூர்.
11. மிசோரியர் கூட்டுறவு நூற்பாலை, மதுரை.
12. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி
13. தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை, பேட்டை, திருநெல்வேலி.
14. திருவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருவில்லிபுத்தூர்.
15. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, நாசரேத்
16. இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம்.
17. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம்.
18. கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி.

31.02 இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளில் மொத்தம் 12,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறித் தொழிலுக்கு தேவையான சிட்டா நூலில் 50% முதல் 55% வரை உற்பத்தி செய்கின்றன. 1998-99 ஆம் ஆண்டில், 224.81 இலட்சம் கிலோகிராம் நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 32. கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புத்துயிர் அளித்தல்

32.01 தமிழக அரசு, தமிழ்நாட்டிலுள்ள 4.69 இலட்சம் கதிர்களைக் கொண்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளைக் கைத்தறி



நெசவாளர்களுக்குத் தேவையான தரமான நூலினை நியாயமான விலையில் தங்குதடையின்றி வழங்கும் நோக்குடன் நிறுவியது. இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் 1958 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிறுவப்பட்டன.

32.02 இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த போதிலும் கடந்த 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து இயங்கி வருகின்றன. துணிநூல் தொழிலில் ஏற்பட்ட தேக்கம், மூலப்பொருட்கள் விலையேற்றம், எதிர்மறையான சந்தை நிலை, நடைமுறை மூலதனம் கிடைக்காமை, போதுமான பஞ்சு இருப்பு வைப்பதில் ஏற்பட்ட இடர்பாடுகள், அதிகப்படியான தொழிலாளர்கள், உற்பத்தி விலையேற்றம் மற்றும் சந்தை விலையைக் காட்டிலும் குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டா நூல் விற்பனை செய்தல் போன்ற காரணங்களால் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்குகின்றன. ஆதார இருப்பு குறைவு காரணமாக கூட்டுறவு நூற்பாலைகள் காசுக்கடன் கணக்கில் வரவு-செலவு செய்ய இயலவில்லை. மேலும், கடன் நிலுவைகளைத் திருப்பி செலுத்தாமையால் நிதி நிறுவனங்கள் நிதி உதவி அளிப்பதற்கு முன்வர மறுக்கின்றன. பஞ்சு கொள்முதல் செய்தவகையில், செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளைச் செலுத்தக்கோரி தனியார் வியாபாரிகள் கூட்டுறவு நூற்பாலைகளை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர்.

32.03 கூட்டுறவு நூற்பாலைகளின் கடுமையான நிதி நெருக்கடி நிலையினைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் கடன் கொடுத்தவர் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காக இடருதவி நிறுவனங்களாக அறிவித்துள்ளது. மேலும் தரமான பஞ்சு கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விநியோகம் செய்வதற்காக ரூ. 25 கோடி மூலதனத்தில் தமிழக அரசு "டான்ஸ்பின்" நிறுவனத்தினை நிறுவியது.

32.04 தமிழக அரசு கூட்டுறவு நூற்பாலைகளின் பணியாளர்களுக்கு 1995-96 ஆம் ஆண்டிற்காக போனஸ் வழங்கவும் இதர புனரமைப்புப் பணிகளுக்கும் ரூ. 15.00 கோடி அனுமதித்துள்ளது.

[1999 ஏப்ரல் 20

32.05 கூட்டுறவு நூற்பாலைகள் எதிர்கொண்டுவரும் கடுமையான நிதிப் பற்றாக்குறைகளைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் புனரமைப்பு செய்வதற்கு ஒரு கொள்கை திட்டம் அறிவித்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் உட்பட அரசு நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், அவற்றின் புனரமைப்பிற்கான வழிவகைகளைப் பரிந்துரை செய்யவும் திரு. என்.வி.எஸ். இராகவன் அவர்களின் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை அரசு அமைத்தது. மேற்படி குழுவின் பரிந்துரை மற்றும் கூட்டுறவு நூற்பாலைகளின் தற்போதைய செயல்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அவர்களின் தலைமையில் கூட்டுறவு நூற்பாலைகளின் புனரமைப்பிற்கான பல்வேறான வழிவகைகளைப் பரிந்துரைக்க ஒரு அலுவலர் குழுவினை அமைத்து ஆணையிட்டார்.

32.06 இந்த அலுவலர் குழு 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் புனரமைப்பு செய்வதற்கு "நபார்டு" மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிலுள்ள அலுவலர்களுடன் ஆலோசித்து ஒரு விரிவான புனரமைப்பு முன்மொழிவைத் தயார் செய்து சமர்ப்பித்தது. இம்முன்மொழிவை விரிவாக ஆய்வு செய்து, ரூ. 185.26 கோடி அளவிற்குப் பலதரப்பட்ட நிவாரணம் மற்றும் பணப்பயன் அடங்கிய கீழ்க்கண்ட புனரமைப்புத் திட்டத்தினை அரசு அறிவித்தது.

| வ.எண். | பொருள் | எவரிடமிருந்து | ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| 1 | சட்டபூர்வமான நிலுவை செலுத்துதல் | மாநில அரசு | 7.11 |
| 2 | காலக்கடன் செலுத்துதல் | மாநில அரசு | 4.45 |
| 3 | நிலுவையுள்ள காசுக்கடனை நீண்ட காலக்கடனாக மாற்றுதல் (அரசுக்காப்புறுதி) | நபார்டு/மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | 53.12 |
| 4 | புதிய காசுக்கடன் (அரசுக்காப்புறுதி) | நபார்டு/மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | 34.41 |



1999 ஏப்ரல் 20]

| வ.எண். | பொருள் | எவரிடமிருந்து | ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| 5 | வழிவகைக்கடனை அரசு பங்கு தொகையாக மாற்றுதல் | மாநில அரசு | 19.85 |
| 6 | தன்விருப்ப ஓய்வுத் திட்டம் | மாநில அரசு | 4.70 |
| 7 | நவீனமயமாக்குதல் | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் | 30.20 |
| 8 | விளிம்புத் தொகை | மாநில அரசு | 6.20 |
| 9 | விற்பனை வரி செலுத்துதலை நிறுத்தி வைத்தல் | மாநில அரசு | 5.74 |
| 10 | "டான்ஸ்பின்"-க்கு கொடுக்க வேண்டிய நிலுவையைப் பங்கு மூலதனமாக மாற்றுதல் | டான்ஸ்பின் | 19.48 |
| | | மொத்தம் | 185.26 |

தமிழக அரசு "நபார்டு" ஒப்புக்கொண்ட 5 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு விளிம்புத் தொகையை ரூ. 2.23 கோடி அளவிற்கு அனுமதித்துள்ளது. மேலும் கீழ்க்கண்ட தொகையினைப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அனுமதித்துள்ளது:

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | சட்டபூர்வமான நிலுவை செலுத்துதல் | 4.61 |
| 2. | காலக்கடன் செலுத்துதல் | 4.45 |
| 3 | நிலுவை காசுக்கடனை நீண்ட காலக் கடனாக மாற்றுதல் | 53.12 |
| 4 | புதிய காசுக்கடன் | 34.41 |
| 5 | வழிவகை கடனை அரசு பங்கு மூலதனமாக மாற்றுதல் | 19.85 |
| 6 | தன்விருப்ப ஓய்வுத் திட்டம் | 2.50 |
| 7 | டான்ஸ்பின்க்கு கொடுக்க வேண்டிய நிலுவையினை பங்கு மூலதனமாக மாற்றுதல் | 19.48 |
| | மொத்தம் | 138.42 |

[1999 ஏப்ரல் 20

32.07 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை திறக்கப்பட்டு 15-12-1998 முதல் உற்பத்தியினைத் தொடங்கியுள்ளது.

32.08 தற்போது உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கு தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் தேவையான அளவு தொழிலாளர்கள் பயனடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தவிர தகுந்த தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் முடிந்த அளவு மின் இழப்பினைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் இதர நிறுவனங்கள்

### 33. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)

33.01 கோ-ஆப்டெக்ஸ் என்று அனைவராலும் அழைக்கப்படும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கடந்த 63 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிவரும் இந்நிறுவனம் தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு மாநில அமைப்பாகும். சுமார் 27 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்த நிறுவனத்தின் நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களிடம் 1-9-1998 முதல் ஒப்படைக்கப்பட்டது.

### 33.02 விற்பனை

கோ-ஆப்டெக்ஸ் கடந்த 3 ஆண்டுகளில் விற்பனை செய்த கைத்தறித் துணிகளின் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | ரூ. கோடியில் |
|---|---|
| 1996-97 | 213.76 |
| 1997-98 | 221.13 |
| 1998-99 | 252.45 |



1999 ஏப்ரல் 20]

### 33.03 துணி கொள்முதல்

தமிழகத்தில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி ரகங்களைக் கொள்முதல் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகாலத்தில் கைத்தறித் துணி கொள்முதல் செய்த விபரம் பின்வருமாறு:

| ஆண்டு | ரூ. கோடியில் |
|---|---|
| 1996-97 | 152.57 |
| 1997-98 | 136.56 |
| 1998-99 | 184.97 |

### 33.04 ஏற்றுமதி

கைத்தறித் துணி ஏற்றுமதியில் கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி பிரிவு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. பல ஐரோப்பிய நாடுகள், தூர கிழக்கு நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றில் கோ-ஆப்டெக்ஸ் தனது ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்கியுள்ளது. வீட்டு உபயோக ரகங்கள் உள்ளிட்ட ஏராளமான ரகங்கள் இந்த ஏற்றுமதியில் அடங்கும். கோ-ஆப்டெக்ஸ் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 3.01 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

### 33.05 எதிர்காலத் திட்டங்கள்

1. தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடன் வேலூர் மற்றும் சேலம் மண்டல சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும்.

2. தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திடமிருந்து கடன் உதவி பெற்று அதன் மூலம், தற்போதுள்ள கணிப்பொறி உபயோகத்தினைப் பெருவிற்பனை நிலையங்கள், மண்டல அலுவலகங்கள், சேமிப்புக் கிடங்குகள் மற்றும் தலைமை அலுவலகப் பிரிவுகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

3. தமிழக அரசின் உதவியுடன் கோ-ஆப்டெக்ஸ், கணிப்பொறி வடிவமைப்பு மையம் ஒன்றை ஏற்படுத்த உள்ளது. இதன் மூலம் பல்வேறு விதமான கலவையுடன் கூடிய வடிவமைப்புகளை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்ப மிகவும் விரைவாக அளித்திட இயலும்.

[1999 ஏப்ரல் 20

4. வெளிநாட்டு வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு ஏற்றுமதி நோக்கோடு உற்பத்தி திட்டமிடப்பட்டுள்ளது.

5. விற்பனையில் அதிகப்படியான பெருக்கத்தை அடைய சேலைகள், படுக்கை விரிப்புகள், திரைச்சீலை ரகங்களில் புதிய வடிவமைப்புகளில் உற்பத்தி மேற்கொள்ளப்படும். இதனால் விற்பனை பெருக வழிவகுக்கப்படும்.

## 34. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை

34.01 தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் குறிப்பாக, கூட்டுறவுத் துறையைச் சாராத நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964-ல் நிறுவப்பட்டது. தற்சமயம் இக்கழகம் கூட்டுறவுத் துறையைச் சாராத நெசவாளர் அங்கத்தினர்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்கி வருகிறது.

34.02 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1000 இலட்சம் ஆகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 427.91 இலட்சம் ஆகும். இதில் தமிழக அரசின் பங்கு ரூ. 267.00 இலட்சமாகும். மீதி மூலதனம், நெசவாளர் அங்கத்தினர்களால் செலுத்தப்பட்டதாகும். தற்சமயம் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் 11,645 உறுப்பினர்கள் உள்ளனர்.

34.03 கடந்த 4 ஆண்டுகளில் இக்கழகத்தின் செயல்பாடு பின்வருமாறு:

| வ.எண் | வருடம் | வழங்கப்பட்ட கடன்தொகை எண்ணிக்கை | தொகை | வசூலிக்கப் பட்ட கடன் தொகை | நிலுவையில் உள்ள கடன் தொகை | நிகர லாபம்/ நட்டம் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1995-96 | 1834 | 366.49 | 364.64 | 728.50 | (-)20.05 |
| 2. | 1996-97 | 1820 | 409.91 | 371.25 | 762.63 | (-)11.36 |
| 3. | 1997-98 | 1760 | 403.00 | 386.52 | 766.41 | (+)11.49 |
| 4. | 1998-99 | 1515 | 359.66 | 363.21 | 763.94 | (+)15.41 (தோராயமாக) |



1999 ஏப்ரல் 20]

34.04 1997-98 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் (TABCEDCO) தகுதியுள்ள பிற்படுத்தப்பட்ட நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் விசைத்தறி வாங்க அளிக்கப்பட்ட குறைந்த வட்டி விகிதம் கொண்ட கடனுதவி தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

34.05 நிதி நிலையை அதிகரிக்க இக்கழகம் பின்வரும் முன்மொழிவுகளை அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்துள்ளது:

**(அ) நீண்ட காலக் கடன்:**

விசைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படும் கடன் உதவியை அதிகப்படுத்தும் நோக்குடன் விசைத்தறி பதிவு நிதியிலிருந்து சலுகை வட்டியில் நீண்ட காலக் கடனாக ரூ. 100 இலட்சம் வழங்குமாறு கோரியுள்ளது.

**(ஆ) நபார்டு வங்கியிடமிருந்து மறுநிதி உதவி வசதி:**

கூட்டுறவு அமைப்பில் அல்லாத தனியார் நெசவாளர்களுக்கு சலுகை வட்டியில் நடைமுறை மூலதனக் கடன் உதவி வழங்கும் வகையில், சலுகை வட்டியில் ரூ. 10.00 கோடி அளவிற்கு மறுநிதி உதவி வழங்கக் கோரி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் நபார்டு வங்கிக்கு முன்மொழிவுகள் அனுப்பியது. நபார்டு வங்கி ரிசர்வ் வங்கியைக் கலந்து ஆலோசித்து மேற்படி கோரிக்கையைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு கைத்தறி துணி உற்பத்தி/கொள்முதல் மற்றும் விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டுள்ள மாநில வளர்ச்சிக் கழகங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை நபார்டு மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் வணிக வங்கிகள் மூலம் வழங்குவதற்கான திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டும் நெறிமுறைகளையும் இக்கழகத்திற்கு அனுப்பியுள்ளது. ஆனால் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தனது நெசவாளர் உறுப்பினர்கள்/ உற்பத்தியாளர்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் உதவி மட்டுமே வழங்குவதால், நபார்டு வங்கியின் மேற்படி வழிகாட்டுதல்களின்படி நபார்டு மறுநிதி உதவி பெறத் தகுதியற்றதாகிறது. எனவே, நபார்டு வங்கியின் அறிவுரைப்படி 18-1-1999 அன்று நபார்டு வங்கிக்கு கழகம் புதிய முன்மொழிவுகளைப் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளது.

**(இ) தேசிய கைத்தறி கடன் நிதியின்கீழ் உதவி:**

திருமதி மீராசேத் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு கூட்டுறவில் அல்லாத தனியார் நெசவாளர்களுக்கு உதவுவதற்காக ரூ. 500.00 கோடி முதலீட்டில் தேசிய கைத்தறி கடன் நிதி என்றதொரு நிதியை நிறுவ பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசும், மேற்படி பரிந்துரையைக் கொள்கை அளவில் ஏற்று கொண்டு மேற்படி நிதியை நிறுவுவதற்குத் தேவையான குறிப்புகளைத் தயார் செய்யுமாறு விவசாய நிதிக் கழகத்தைக் கோரியுள்ளது. இந்நிதி நிறுவப்படுவதை எதிர்நோக்கி ரூ. 10 கோடியிலிருந்து ரூ. 15 கோடி வரை விடுவிக்குக்குமாறு தமிழக அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது.

## 35. தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

35.01 காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் தரமான சரிகையினை நியாயமான விலையில் வழங்குவதற்கு நிறுவப்பட்ட ஒரு அரசு பொது நிறுவனமாகும். தமிழ்நாடு சரிகை ஆலை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையைப் பெருமளவில் பூர்த்தி செய்து வருகிறது.

35.02 சரிகை சோதனை தரப் பரிசோதனைக்கூடத்தின் திறனை ரூ. 4.42 இலட்சம் செலவில் அதிகரித்துள்ளது. இது 1997-98ல் சராசரியாக பரிசோதனை செய்த 524 மாதிரிகளைக் காட்டிலும் அதிகமாக தற்போது மாதமொன்றுக்கு 610 மாதிரிகள் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

35.03 பகுதி-2 திட்டத்தின்கீழ் 1998-99ல் கும்பகோணத்தில் மாதம் 2000 மார்க் உற்பத்தி செய்யும் சரிகை உற்பத்திப் பிரிவு ரூ. 75.31 இலட்சத்தில் நிறுவப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு தனது மூலதனமாக ரூ. 20.00 இலட்சம் அளித்துள்ளது. இதனால் 44 பேர் வேலைவாய்ப்பு பெற வாய்ப்புள்ளது. இதற்குத் தேவையான தொழிற்கூடம் ரூ. 6.20 இலட்சத்திற்கு சிட்கோவிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது. அலுவலகம் மற்றும் கிடங்குகட்டும் பணி ஏப்ரல் 1999-க்குள் ரூ. 6 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு, இந்தப் பிரிவு மே மாதம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



35.04 ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வெள்ளியிழை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் ஒரு திட்டம் ஐதராபாத்தைச் சேர்ந்த இரும்பில்லாத உலோகத் தொழில் நுட்ப வளர்ச்சி கழகம் (NFTDC) என்கிற அறிவியல் ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் 50 எஸ்.டபிள்யு.ஜி. அளவுள்ள இழை தயார் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனம் தற்போது 40 எஸ்.டபிள்யூ.ஜி. அளவிற்குத் தயார் செய்துள்ளது. தேவையான அளவுள்ள இழை தயார் செய்யும் முயற்சியில் இந்நிறுவனம் விரைவில் வெற்றி பெற்று, சரிகை உற்பத்தியில் தமிழ்நாடு சரிகை ஆலை தற்சார்பு அடையும்.

35.05 தற்போது செயல்படுத்தப்படும் விரிவாக்கத் திட்டத்தின் காரணமாக 1998-99க்கான உற்பத்திக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்ட 60,400 மார்க்குகளைக் காட்டிலும் அதிகமான குறியீடாக 93,000 மார்க்குகள் 1999-2000க்கான உற்பத்திக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியீடு முழுமையாக எய்தப்பட்டால் தற்போது பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் 25 விழுக்காடு தேவையைப் பூர்த்தி செய்துவரும் இந்நிறுவனம் இனி 40 விழுக்காடு தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

35.06 கடந்த 3 ஆண்டுகளில் அரசின் பங்கு மூலதனத்திற்கு இந்நிறுவனம் செலுத்திய ஈவுத்தொகை பின்வருமாறு:

| வரிசை எண் | ஆண்டு | அரசின் பங்கு ரூ. இலட்சத்தில் | ஈவுத்தொகை சதவீதம் | செலுத்தப்பட்ட தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | 1995-96 | 13.20 | 20 | 2.64 |
| 2. | 1996-97 | 13.20 | 25 | 3.30 |
| 3. | 1997-98 | 34.40 | 25 | 8.60 |

## 36. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

36.01 தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் போன்ற நிறுவனங்களுக்குத் துணிநூல் பதனிடுதல் மற்றும் நூல் சாயமிடல் போன்ற பணிகளுக்காக 1973ஆம் ஆண்டு ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை தொடங்கப்பட்டது. இவ்வாலை தமிழகத்தின் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே ஒரு பதனிடும் ஆலையாகும்.

36.02 இவ்வாலை பருத்தி நூல் மற்றும் செயற்கை இழை நூல் துணிகளுக்கு வெளுத்தல், சாயம் ஏற்றுதல் மற்றும் அச்சிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. நூல் மற்றும் துணிகளின் தரத்தைச் சோதனை செய்ய சோதனைச்சாலையும் இவ்வாலையில் செயல்படுகிறது.

36.03 இவ்வாலையின் பதனிடும் திறன் மாதம் ஒன்றுக்கு 15.00 இலட்சம் மீட்டர்கள் ஆகும். பதனிடும் மற்றும் அச்சிடுவதற்குத் தேவையான துணிகள் கோ-ஆப்டெக்ஸ், கதர் வாரியம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், மத்திய சிறை, கோவை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கர்நாடக கைத்தறி வளர்ச்சிக் கழகம், கேரள கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது.

36.04 1998-99ஆம் ஆண்டிற்கு பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சீருடைத் துணிகள் வழங்க கோ-ஆப்டெக்ஸ்க்குத் தேவைப்பட்ட துணி வகைகள் அனைத்தும் இவ்வாலையில் பதனிடப்பட்டவை ஆகும்.

36.05 இவ்வாலை முந்தைய ஆண்டுகளில் தொடர்ந்து நட்டம் அடைந்து வந்தது. ஆலை பதனிடும் திறனை அதிகரித்து 1997-98ல் லாபம் ரூ. 87.20 இலட்சமும், 1998-99ல் உத்தேச லாபம் ரூ. 33.54 இலட்சமும் ஈட்டியுள்ளது.

## 37. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்

37.01 மூடப்பட்ட, நலிவடைந்த ஆலைகளை ஏற்று நடத்தி அவற்றுக்குப் புத்துயிர் அளித்தல், விசைத்தறிக்கூடங்கள்





நிறுவுதல், கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தொழில்நுட்ப சேவை வழங்கல், விசைத்தறிக்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணிகளை விற்பனை செய்தல் ஆகிய பல்வேறு காரணங்களுக்காக 1969 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் தொடங்கப்பட்டது.

37.02 கோயம்புத்தூரிலுள்ள குறிச்சி என்ற இடத்தில் இயங்கி வரும் 12 தானியங்கி விசைத்தறிகள் தவிர, அருப்புக்கோட்டை, சிவகிரி மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 3 விசைத்தறிக்கூடங்களை நடத்தி வருகின்றது. இவற்றின் மூலம் 1997-98 ஆம் ஆண்டு 31.46 இலட்சம் மீட்டர், 1998-99, 23.82 இலட்சம் மீட்டர் துணிகளை இக்கழகம் உற்பத்தி செய்துள்ளது.

37.03 பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளைக் கொள்முதல் செய்யும் முகவராகத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் செயல்பட்டு வருகிறது. மேலும் இரயில்வே துறை, மின் வாரியம், சர்க்கரை ஆலைகள், போக்குவரத்து கழகங்கள் போன்ற பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சீருடைத் துணிகளை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் வழங்கி வருகிறது. 50க்கும் மேற்பட்ட விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 10,000 தறிகள் சீருடைத் துணிகள் தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## 38. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்)

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினைச் சீரமைக்கும் பொருட்டு 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகியுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை நியாயமான விலையில் வாங்கி விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ. 25 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ. 2.07 கோடியும் ரொக்கத்திற்கு பஞ்சு வாங்கும் பொருட்டு இணையத்திற்கு வழங்கியுள்ளது. 1998-99ஆம்

ஆண்டில் இணையம் 21,254 பஞ்சு பேல்கள் ரூ. 19.42 கோடி மதிப்பிற்கு கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பெற்றுத் தந்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்த பஞ்சு தேவையில் சுமார் 10 விழுக்காடு தேவையினை இணையம் தொடர்ந்து பூர்த்தி செய்து வருகிறது. 1994-95ஆம் ஆண்டு முதல் 1997-98 முடிய இணையம் ரூ. 51 இலட்சம் நிகர இலாபம் ஈட்டி, 1997-98ல் பங்கு ஈவுத் தொகையாக ரூ. 25 இலட்சம் தமிழக அரசிற்கு வழங்கியுள்ளது. 1998-99ஆம் ஆண்டு உத்தேசமாக நிகர இலாபமாக ரூ. 11.00 இலட்சம் இணையம் ஈட்டியுள்ளது.

**39. தேசிய அலங்கார தொழில்நுட்ப நிலையம், சென்னை**

தேசிய அலங்கார தொழில்நுட்ப நிலையம், சென்னையில் 21-7-95 அன்று தொடங்கப்பட்டு, கோ-ஆப்டெக்ஸ் கட்டடத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. இத்தேசிய தொழில்நுட்ப நிலையத்தின் நிர்வாகச் செலவினங்களில், முதல் ஐந்தாண்டுகளில், பற்றாக்குறை நிதி செலவினங்களை ரூ. 132.50 இலட்சம் வரை ஏற்றுக்கொள்ளவும், இந்நிலையத்தினை அமைத்திடத் தேவைப்படும் நிலத்தினை இலவசமாக வழங்கவும் மாநில அரசு இசைந்துள்ளது. இத்தேசிய தொழில்நுட்ப நிலையத்தின் பற்றாக்குறை நிதி செலவினங்களுக்காக இதுவரை மாநில அரசு ரூ. 75.84 லட்சம் வழங்கியுள்ளது.





**இணைப்பு**

## கைத்தறி மற்றும் துணிநூல் துறை முன்னேற்றம் பற்றிய அறிக்கை

**1. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

| வரிசை எண் 1. | விவரம் 2. | 1996-97 3. | 1997-98 4. | 1998-99 5. |
|---|---|---|---|---|
| 1. | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 1439 | 1386 | 1382 |
| 2. | தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3.45 | 3.67 | 3.44 |
| 3. | உற்பத்தி (அ) மீட்டர் (இலட்சத்தில்) | 1055.36 | 1006.49 | 948.34 |
| | (ஆ) மதிப்பு (ரூ. கோடியில்) | 405.29 | 398.20 | 401.97 |
| 4. | விற்பனை மதிப்பு (ரூ. கோடியில்) | 422.56 | 431.66 | 510.62 |
| 5. | நடைமுறை மூலதனம் (ரூ. கோடியில்) | 268.29 | 270.19 | 304.13 |

**2. கோ-ஆப்டெக்ஸ்**

| வரிசை எண். | விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|
| | | | ரூ. கோடியில் | |
| 1. | கைத்தறித் துணி கொள்முதல் | 152.57 | 136.56 | 184.97 |
| 2. | கைத்தறித் துணி விற்பனை | 213.76 | 221.73 | 252.45 |
| 3. | நடைமுறை மூலதனம் | 164.00 | 149.00 | 169.84 |

[1999 ஏப்ரல் 20

### 3. கூட்டுறவு நூற்பாலைகள்

| வரிசை எண் | விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|
| 1. | கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 4.69 | 4.69 | 4.60 |
| 2. | உற்பத்தி (ரூ. இலட்சத்தில்) | 22718.74 | 24666.72 | 22008.65 |
| 3. | விற்பனை (ரூ. இலட்சத்தில்) | 22695.60 | 24747.42 | 21824.94 |
| 4. | நடைமுறை மூலதனம் (ரூ. இலட்சத்தில்) | 3685.50 | 3689.50 | 3689.50 |

### 4. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

| வரிசை எண் | விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|
| 1. | நூல் வெளுத்தலும் சாயமிடுதலும் (இலட்சம் கிலோகிராமில்) | 10.54 | 25.16 | 27.11 |

### 5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை

| வரிசை எண் | விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|
| 1. | கடன்களின் எண்ணிக்கை | 1820 | 1760 | 1515 |
| 2. | அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூ. இலட்சத்தில்) | 409.91 | 403.00 | 359.66 |



1999 ஏப்ரல் 20]

### 6. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்

| வரிசை எண் | விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|
| 1. | சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 40161 | 45260 | 61891 |
| 2. | விற்பனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 1032.90 | 1071.22 | 1686.92 |

### 7. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோவை

| வரிசை எண் | விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|
| 1. | விசைத்தறிக் கூடங்களில் துணி உற்பத்தி (இலட்சம் மீட்டரில்) | 27.25 | 31.42 | 23.82 |
| 2. | துணி விற்பனை (இலட்சம் மீட்டரில்) | 28.55 | 170.37 | 75.81 |
| 3. | விற்பனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 748.08 | 4763.99 | 2027.37 |
| 4. | நிகர இலாபம் (ரூ. இலட்சத்தில்) | 45.35 | 48.21 | 51.47 (உத்தேசமாக) |

✡✡✡✡

D
V211,31'N99
N99.741
221036